# ஆடம்பரம்

## மீள்வரைவிலக்கணப்பட்டுள்ளது

ஹோட்டல் டிவலப்பர்ஸ் (லங்கா) பிஎல்சி

ஆண்டறிக்கை 2015

# பொருளடக்கம்

நிதிசார் முக்கியக் குறிப்புகள் 3
தலைவரின் மீளாய்வு 7
பணிப்பாளர் சபையினர் 10
தகுதி வாய்ந்த அதிகாரியும், பணிப்பாளர்ச் சபையின் ஆலோசகரும் 16
சிரேஷ்ட முகாமைக் குழு 17
முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும் 22
பெருநிறுவன மேலாண்மை 26
இடர் முகாமைத்துவம் 30
தங்குதிறன் அறிக்கை 36
நிறுவனத்தின் அலுவல்கள் தொடர்பில் பணிப்பாளர்களின் வருடாந்த அறிக்கை 46
நிதி அறிக்கையிடலில் பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் 49
கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 50

## நிதிசார் கூற்றுக்கள்

சுயாதீனக் கணக்காய்வாளரின் அறிக்கை 55
ஒன்றுதிரட்டிய வருமானக்கூற்று 58
நிதியியல் நிலைமைக் கூற்று 59
பங்குமூலதன மாற்றங்களின் கூற்று 60
காசுப்பாய்ச்சல் கூற்று 61
நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் 62
வருடாந்தப் பொதுக் கூட்டம் பற்றிய அறிவித்தல் 86
குறிப்புக்கள் 87
பதிலி நியமனப் படிவம் 89

Hilton
COLOMBO

# ஆடம்பரம்

மீள்வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது

ஹில்டன் சர்வதேச தரமிக்க உண்மையான அனுபவத்தினை வாக்களித்து வழங்கி வருகின்றது. அதன் தனித்துவமான பாணி விருந்தினர்கள் எம்மை மேலும் மேலும் நேசித்து எம்மை நாடிவரத் தூண்டுகின்றது. அவ்வாறே நாம் நாளைய சர்வதேசப் பயணியின் எதிர்பார்ப்பையும் பூர்த்திச் செய்யும் திறனுடன் வளருகின்றோம். எம் விருந்தினர்கள் எம்மில் காலடி எடுத்து வைக்கும் போது எமது தனித்துவமான நறுமணத்தினை உணர்கின்றனர்.



# நிதிசார் முக்கியக் குறிப்புகள்

| | 2015<br>09 மாதங்கள்<br>(அசல்) | 2014<br>09 மாதங்கள்<br>(விகித அளவில்) | 2014 / 2015<br>12 மாதங்கள்<br>(அசல்) |
|---|---|---|---|
| அறைகளின் வருமானம் LKR '000 | 734,422 | 809,654 | 1,079,538 |
| உணவு மற்றும் பானங்களின் வருமானம் LKR '000 | 797,303 | 931,923 | 1,242,564 |
| ஏனைய வருமானம் LKR '000 | 39,978 | 44,872 | 59,829 |
| மொத்த வருமானம் LKR '000 | 1,571,704 | 1,786,448 | 2,381,931 |
| | | | |
| நிகர இலாப அளவு % | 82% | 81% | 81% |
| வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்) LKR '000 | 91,713 | 206,771 | 275,695.00 |
| வரிக்கு பிந்திய இலாபம் LKR '000 | 26,609 | 122,639 | 163,519.00 |
| பங்கொன்றுக்கானச் சம்பாத்தியம்/(நட்டம்) LKR '000 | 0.01 | 0.06 | 0.08 |
| சராசரி அறை விகிதம் LKR '000 | 20,326 | 18,588 | 18,906 |
| பாவனை அளவு | 38% | 43% | 41% |
| | | | |
| | 31.12.2015 இல்<br>உள்ளவாறான | | 31.03.2015 இல்<br>உள்ளவாறான |
| நீண்டகால வட்டி அடங்கியப் பெறுகைகள் LKR '000 | | | - |
| மொத்தப் பங்கு LKR '000 | 13,636,951 | | 13,620,031 |
| கடன் / ஈக்விட்டி % | 0.93% | | 0.21% |
| மொத்தச் சொத்துக்கள் LKR '000 | 14,772,000 | | 14,414,174 |
| கடன் / மொத்தச் சொத்துக்கள் % | 0.86% | | 0.20% |
| நடைமுறைச் சொத்துக்கள் LKR '000 | 1,667,899 | | 1,900,447 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் LKR '000 | 551,801 | | 261,437 |
| நடைமுறை விகிதம் (தடவைகள்) | 3.02 | | 7.27 |
| விரைவுச் சொத்துகள் விகிதத்தின் (தடவைகள்) | 2.95 | | 7.12 |


Hilton





திரு. கிரிஷாந்த பிரசாத் குரே
தலைவர்

# தலைவரின் மீளாய்வு

அன்பிற்குரிய பங்குதாரர்களே,

இலங்கை விருந்தோம்பல் துறையில் ஹில்டன் கொழும்பின் எதிர்பார்க்கப்பட்ட பணிச்சிறப்புக்கள் மீண்டும் சரியான நிலைக்கு மலர்ந்துள்ளதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நடப்பு ஆண்டு ஆடரம்பரம் மீள்வரைவிலக்கணம் செய்யப்பட்ட ஆண்டாக அமைந்துள்ளதுடன் ஹில்டன் வர்த்தகநாமம் பல சர்வதேசப் பயணிகளின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதாக திகழ்கின்றது. கடந்த மாதங்களில் ஏற்படுத்தப்பட்ட புனர்நிர்மானம் மற்றும் நவீனமயப்படுத்தல் ஹில்டனை கொழும்பின் இலங்கையின் முன்னணி ஆடம்பரச் சொகுசு சேவை வழங்குனராக நிலைநிறுத்தியுள்ளது. ஹில்டன் சர்வதேச வணிகநாமத்தின் தரத்திற்கானச் சேவைகள் மற்றும் உற்பத்திகளை நாம் வழங்குகின்றோம். இந்த பின்னணியில் ஹோட்டல் டிவலப்பர்ஸ் (லங்கா) பி.எல்.சி தற்போதைய ஆண்டறிக்கை 2015 டிசெம்பரில் முடிவுற்ற 09 மாதங்களுக்குத் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உங்கள் நிறுவனம் இலாபம் அடைந்துள்ளதுடன், தேசத்தின் விருந்தோம்பல் துறைக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிப்பை வழங்கியுள்ளது. எமது தற்போதைப் புனர்நிர்மாணப் பணிகள் மற்றும் ஏனைய சவால்களுக்கு மத்தியில் இச்சாதனை எட்டப்பட்டுள்ளது.

புனர் நிர்மாணப் பணிகள் முடிவுற்று பின்னர் போட்டியாளர்கள், அதிகரித்து வரும் நகர ஹோட்டல்களின் மத்தியில் ஹில்டன் கொழும்பு அதன் வடிவமைப்பு மற்றும் ஆடம்பரத்தில் தெளிவான முதன்நிலையில் நிற்கும் என நம்புகிறேன்.

மீளாய்வு ஆண்டில் தொழிற்துறை பற்றியக் கண்ணோட்டம் ஒன்றை வழங்க இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்த விரும்புகிறேன். எமது சாதனைகள் எதிர்கால வளர்ச்சி மற்றும் மூலோபாயங்களை அடிப்படையாக கொண்டதாகும். இது தேசத்தின் சுற்றுலாத்துறை அபிவிருத்தியையும் நோக்கமாகக் கொண்டதாகும்.

**சர்வதேசச் சுற்றுலாதுறைப் பற்றிய நோக்கு**

2015ம் ஆண்டில் சுற்றுலாத்துறை உலகளவில் அதிக வருமானத்தை ஈட்டித்தரும் தொழிற்துறையாகத் திகழ்ந்தது. UNWTO புள்ளிவிபரங்களுக்கு அமைய சர்வதேசச் சுற்றுலாப் பயணிகளின் வருகை 4.4% வளர்ச்சியுடன் 1,184 மில்லியனை அடைந்தது. ஆசிய மற்றும் ஆசிய பசுபிக் வலயம் மேலதிக 13 மில்லியன் சுற்றுலா பயணிகளின் வருகை பெற்றுக் கொண்டது. ஓசாகனியா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுக்கான வருகை வளர்ச்சியே அதிக பங்கினைக் கொண்டது. சீனா, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தும் பலமான வளர்ச்சியை கொண்டிருந்தன. இவற்றில் சீனாவே துரிதகதியில் வளர்ச்சியடையும் வெளிநாட்டு பயணத்தளமாக இருந்தது. ரஷ்யா மற்றும் பிரேசிலுக்கான வருகை சிறிதளவு குறைந்து காணப்பட்டதுடன், இரு நாடுகளிலும் அவை பொருளாதாரத்தில் பிரதிபலிப்பு செய்தன.

2016 ஆம் ஆண்டு மிகவும் சிறப்பானதாகக் காணப்படுகின்றது. கடந்த இரு ஆண்டுகளை விடவும் குறைந்த அளவில் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2016 ஆம் ஆண்டில் சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகை 4% த்தினால் வளர்ச்சியடையும் என UNWTO அனுமாணித்துள்ளது.

# தலைவரின் மீளாய்வு

### உள்நாட்டு சுற்றுலாத்துறை வளர்ச்சி

சர்வதேசச் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிப்பாணி இலங்கையிலும் பிரதிபலிப்புச் செய்தது. யுத்த முடிவிற்கு பின்னரானச் சிறப்பான மேலாதிக்கம் மற்றும் தேசிய கொள்கைகள் காரணமாக உள்நாட்டு பொருளாதாரத்திற்கும் இது பாரிய ஊக்குவிப்பாக உள்ளன. சுற்றுலாத்துறையே பாரிய வெளிநாட்டு நாணயபரிமாற்று மார்க்கமாக இருப்பதுடன், பல தொழில்வாய்ப்புகளையும் உருவாக்கித் தந்துள்ளது. இலங்கையின் இயற்கை மற்றும் கலாச்சாரச் சிறப்புக் காரணமாக மேலும் வளர்ச்சியடைக்கூடிய எதிர்வுகூறல்களையும் கொண்டுள்ளது. நாடு இதன் முக்கியத்துவத்தினை உணர்ந்துள்ளது.

தொழிற்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக எதிர்பார்க்கப்பட்ட 1.5 மில்லியனை விடவும் அதிகளவான பயணிகள் வருகை தந்தனர். 2015 ஆம் ஆண்டில் 13% வளர்ச்சியை இது பெற்றது. அரசாங்கம் சிறந்த சுற்றுலாத்துறை கொள்கைகள் மற்றும் ஒத்துழைப்பு மூலம் இந்த வளர்ச்சியை மேலும் பாதுகாக்கலாம். ஆடம்பர அதிநவீன சுற்றுலாத்துறைக்கு பங்களிப்புச் செய்த நிறுவனமாக ஹில்டன் கொழும்பு பெருமையடைகின்றது. அதன் கலையார்வம் கொண்ட ஓய்வு சேவைகள் தொழிற்துறையில் ஆடம்பர சுற்றுலாவிற்கான புதிய அத்தியாயமாக மாறியுள்ளது.

தேசியச் சுற்றுலா அபிவிருத்தி கொள்கைக்கு அமைய தேசத்தால் விரிவாக மேற்கொள்ளப்பட்ட சுற்றுலா ஊக்குவிப்பு பிரசாரங்கள் காரணமாக மரபுசாராத சுற்றுலாத்துறைச் சந்தைகளான தென்கிழக்காசியாவில் இருந்தும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு ஈர்க்கப்பட்டனர். மரபுவழி ஐரோப்பிய சந்தையில் ஏற்பட்ட சிறிய வீழ்ச்சியை தென் கிழக்காசியாவில் இருந்தான அதிகளவிலான வருகைககள் ஈடுசெய்தன. இந்தியா, சீனா, கிழக்கு ஐரோப்பா, இங்கிலாந்து, ஜப்பான் மற்றம் ஜேர்மனியில் இருந்தே அதிகளவான சுற்றுலா பயணிகள் வருகை தந்தனர். இதில் சீனாவே பாரிய பங்களிப்பாளர் ஆகும். 60% பயணங்கள் ஓய்விற்கானப் பயணங்கள் ஆகும். வணிகரீதியிலான பயணங்கள் சிறிய வளர்ச்சி வீதத்தையே கொண்டிருந்தது. நிகழ்காலத்தில் சுற்றுலாத்துறை சிறந்த வளர்ச்சியை பெற்றுள்ளது. இலங்கையை சிறந்தச் சுற்றுலாத்தளமாக மீள்நிறுவும் ஊக்குவிப்பு பிரசாரங்கள் எதிர்வரும் ஆண்டுகளிலும் ஸ்தீர நிலையில் இருக்கும் என நம்புகிறோம்.

சுற்றுலாத்துறைத் தொடர்புடைய உற்கட்டமைப்பு அபிவிருத்திகளில் யுத்தகாலத்திற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட நேரடியான முதலீடுகள் உள்நாட்டு சுற்றுலாதுறையினைப் பாரியளவில் முன்னேற்றியுள்ளதுடன் அதன் விரிவாக்கம் மற்றும் ஆற்றலுக்கும் உதவியுள்ளது. அத்துடன் அவை தேசத்தின் சுற்றுலாத்துறை சார்ந்தச் சேவைகள் மற்றும் உற்பத்திகளின் தரம் மற்றும் உறுதிப்பாட்டையும் வெகுவாக வளப்படுத்தியுள்ளன. இந்த விரிவாக்கம் எதிர்கால தொழிற்துறைக்கு உத்வேகம் அளிக்கும் அதேவேளை இலங்கையை வணிக பயணிகள் மத்தியிலும் முன்னணி சுற்றுலாத் தளமாக உலகளவில் முன்னிறுத்தவும் செய்யப்பட்ட பாரிய பங்களிப்பாகும். பிராந்தியத்திற்குள் மாத்திரமின்றி அதற்கு வெளியிலும் தொடர்ச்சியாக வளர்ந்துவரும் வணிகப் பயணிகள் தொகுதியானது இலங்கை சுற்றுலாத்துறைக்குச் சிறந்த வாய்ப்பாகும் என நான் நம்புகிறேன். தடைகளற்றச் சர்வதேசச் சவால்களுக்கு மத்தியில் இலங்கையானது உலகளவிலான வணிகப் பயணிகளுக்குப் பாதுகாப்பு, திருத்தியமைக்கக்கூடிய, ஆடம்பர தங்குமிடங்களை வழங்கக் கூடிய சேவைகளில் முதலீடு செய்ய வேண்டிய நிலையிலுள்ளது. 2016 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டம் வெளிநாட்டு அபிவிருத்தி முதலீடுகளின் வளர்ச்சியை அதிகரிக்கக்கூடிய, வெளிநாட்டு முதலீடுகளைக் கவரும் பொருத்தமான வணிகச் சூழலை உருவாக்குவதற்கு ஏற்ற மார்க்கத்தினை இலக்காகக் கொண்டே தயாரிக்கப்பட்டடுள்ளது.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணத்திற்கு ஏற்புடைய சகலத் தேசிய வளர்ச்சி மற்றும் அபிவிருத்திகளைக் கொண்டுள்ள பல வாய்ப்புகள் இருந்த போதிலும் உள்நாட்டு சுற்றுலாதுறையும் தேசத்தின் பிரதானப் பொருளாதாரத் துறையாக மாறுவதற்கான சகல ஸ்தீரதன்மையையும் கொண்டுள்ளது. கலாச்சார மரபுகளுக்கு அப்பால் சென்று மாறுபட்ட விதத்தில் சர்வதேசப் பயணிகளை ஈர்க்கும் வகையில் இலங்கையின் சுற்றுலாதுறைக் கொள்கைளில் கவனம் செலுத்தப்பட வேண்டும். ஹில்டன் கொழும்பு அவ்வாறான சிறப்புரிமைச் சேவை கொண்ட பயணச் சுற்றுலா தளமாக செயற்பட்டு தேசியப் பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்யும் தயார்நிலையில் காணப்படுகின்றது.

### நிறுவனம் பற்றிய நோக்கு

இலங்கையின் ஆடம்பர தங்மிடம் வரைவிலக்கணத்தினை மீள்நிர்ணம் செய்யும் முன்னணி இடத்தினை உங்கள் நிறுவனம் ஏற்றுள்ளது. வடிவமைப்பு, கலையலங்காரம், உற்பத்தி மற்றும் சேவைகள் என சகல விதமான மாற்றங்களுக்கும் ஹில்டன் கொழும்பு உட்பட்டுள்ளது. ஹில்டன் அனுபவத்தின்

பெறுமதியை அதிகரித்து இலங்கையின் முன்னணி 5 நட்சத்திர ஹோட்டல் அந்தஸ்தினை பெறும் வழிவகையை நாம் உட்சேர்த்துள்ளோம். தற்போதைய முதலீடு சொத்தின் பெறுமதியை அதிகரிப்பதுடன், வணிகநாமத்தின் சிறப்பையும், சர்வதேசச் சந்தையில் வளர்ச்சியடையப் புதிய வாய்ப்புகளையும் அதிகரிக்கச் செய்யும். மேலும் சர்வதேச ஹில்டன் நாமத்துடனான எமது கூட்டிணைப்பு அதிகரிக்கும் போட்டித்தன்மையில் எமக்கு தெளிவான முதன்நிலையினை பெற்றுத்தரும். மேலும் புனர்நிர்மாணப் பணிகள் முடிவுற்றதும் போட்டியாளர்கள், நகர ஹோட்டல்களின் மத்தியில் ஹில்டன் கொழும்பு அதன் வடிவமைப்பு மற்றும் ஆடம்பரத்தில் தெளிவான முதன்நிலையில் நிற்கும் என நம்புகிறேன்.

எமது வளர்ச்சி மூலோபாயம் அதிகரித்த வசதிகள், தனித்துவமானச் சுற்றுலாத்துறை சந்தைகள் என்பவற்றில் எமது வணிகநாமத்திற்கு சாதகமான தன்மையை பெற்றுக் கொடுக்கும். ஹில்டன் வணிக நாம விசுவாசம், புதிய மற்றும் விருத்திச் செய்யப்பட்ட சூழல், நவீன வசதிகள், பல் தெரிவு உற்பத்திகள், என்பன உலக ஆடம்பர சுற்றுலா வரைப்படத்தில் ஹில்டன் கொழும்பின் இடத்தினை உறுதிப்படுத்தும். எமது தயார்நிலைக்கு ஏற்பச் சந்தைப்படுத்தல் மற்றும் உதவி சேவைகளையும் பலப்படுத்தியுள்ளோம். அனுபவம் மற்றும் திறமை கொண்ட எம்மால் எமது புனர்நிர்மாணத்திற்கானச் செலவுகளை குறுகியக் காலத்தில் ஆரோக்கியமாகப் பெற்றுக் கொள்ள இயலுமாக இருக்கும்.

### முடிவுரை

எதிர்காலத்தினை நோக்கும் போது, ஹில்டன் கொழும்பு அதன் சகல சவால்களையும் வெற்றிகொள்ளத் தயார்படுத்தலுடனும் உள்நாட்டு வெளிநாட்டு நிபுணத்துவ அனுபவத்துடனும் தயாராக இருப்பது உறுதியாகும். எனது சக பணிப்பாளர், சபை அங்கத்தவர்கள், சிரேஷ்ட முகாமைத்துவம், சகல ஊழியர்களுக்கும் புனர்நிரமாணப் பணிகளுக்கு மத்தியிலும் ஓய்வின்றி பணிகளைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க வழங்கிய ஒத்துழைப்பிற்காக நன்றி கூறுகிறேன். கடந்தகாலச் செயற்திறனுக்கு உதவிய வெளிச்செல்லும் பணிப்பாளர் சபைக்கும் அவர்களின் பங்களிப்பிற்காக நன்றி கூறுகிறேன். இந்தச் சிரமமான தருணத்திலும் தமது ஒத்துழைப்பை நல்கிய எமது விருந்தினர்களுக்கும் ஹில்டன் கொழும்பை வர்த்தகநாம விசுவாசத்துடன் தெரிவு செய்தமைக்கும், எமது ஊழியர்கள் பேணிய சேவை தரத்திற்கும் நான் நன்றி கூறவேண்டும்.

இறுதியாக, தமது ஒத்துழைப்பினை தொடர்ந்தும் வழங்கிய எமது விசுவாசமிக்க பங்குதாரராகிய உங்களுக்கும், சிறப்பான நன்றிகளைத் தெரிவிப்பதுடன் உங்கள் பங்களிப்பை எதிர்காலத்திலும் வேண்டி நிற்கிறேன்.



# பணிப்பாளர் சபையினர்

**திரு. கிரிஷாந்த பிரசாத் குரே**
தலைவர்

திரு. குரே, அரசியல் விஞ்ஞானம் மற்றும் சட்டத்துறையில் கல்விப்புலமை பெற்ற, ஸ்தாபனத்துறையில் பல்லாண்டுகால அனுபவம் கொண்டச் சிரேஷ்ட நிபுணர் ஆவார். மிடில்சக்ஸ் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானம் மற்றும் சட்டத்துறையில் பட்டம் (மேன்மை) பெற்றுள்ள இவர் ரிச்சட் பீரீஸ் குழுமத்தில் வணிக அபிவிருத்தி தலைமை அதிகாரியாக இணைந்தார். பின்னர் முற்றிலும் சுயாதீனமான பொதுபட்டியலிடப்பட்ட நிறுவனத்தினால் உரிமைகோரப்படும் முதலாவது வெளியீட்டு இல்லத்தை நிறுவினார். செலிங்கோ குழுமம், ரிச்சட் பீரீஸ் குழுமம், மகாராஜா நிறுவனம் ஆகியவற்றில் பல்வேறு நிறைவேற்றதிகாரி பதவிகளை வகித்துள்ள இவர் ரிவிர ஊடக கூட்டுத்தாபனம் (பிறை) லிமிறெட்டினை ரிச்சட் பீரீஸ் குழுமத்தின் கீழ் நிறுவி ஸ்தாபக தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்றதிகாரியாக பணியாற்றினார். இவரின் வழிகாட்டலின் கீழ் ரிவிர மற்றும் த நேஷன் ஆகிய இரண்டு பிரதான நாளிதழ்கள் வெளிவந்தன. வெகு விரைவில் மிகவும் சுயாதீனமான பிரசித்த நாளிதழ்களாக இவை ஊடகத்துறையில் மாறின. மகாராஜா குழுமத்தின் ஆலோசகர் பதிவிக்கு மேலதிகமாக, அதன் வானொலி மற்றும் செய்தி வெளியீடுகளில் மேற்பார்வை மற்றும் ஆலோசகராகத் திகழ்ந்தார். த நேஷன் நாளிதழின் சிங்கள மற்றும் ஆங்கில இரு பதிப்புகளுக்கும் பல்வேறு தலைப்புகளில் தொடர்ச்சியாக எழுத்தாக்கம் வழங்கி வருகின்றார். தற்போது அவர் DFCC வங்கியின் பணிப்பாளர்ச் சபை அங்கத்தவராகவும் திகழ்கின்றார்.





## திருமதி. பத்மா மஹாராஜா

பணிப்பாளர்

தேர்ச்சிகள், சாதனைகளுடன் 'Vati' என்ற தனிப்பட்ட முத்திரையின் கீழ் வெற்றிகரமாக ஆடைவடிவமைப்பில் ஈடுபட்ட வெற்றிகரமான ஆடைவடிவமைப்பாளர். 1998-2000 வரை இலங்கையின் தேசிய ஆஸ்பத்திரியில் Laparoscopy & Mammography இயந்திரங்களை நிறுவுவதற்கு தேவையான நிதியினைச் சேகரிக்கும் நோக்கில் பல்வேறு விழாக்களை நடாத்தினார்.

1994 இல் மாண்புமிகு சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் மேலதிகச் செயலாளராக நியமிக்கப்பட்டார். 1994 நவம்பரில் அரசாங்கத்தின் பதிலிப் பணிப்பாளராக Hotel Developers (Lanka) PLC பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டவர். AIDEX விளையாட்டு போட்டிகளில் வலது குறைந்த இராணுவ வீரர்களுக்கும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் செயற்கை அவயங்களை பெற முழுமையான ஆதரவினை கடந்த 15 வருடங்களாக வழங்கி வருகிறார்.

## செல்வி. தீஷனா அமரசேகர

பணிப்பாளர்

செல்வி. தீஷனா அமரசேகர விருது பெற்ற Theva Residency - Boutique ஹோட்டல் மற்றும் Award-Winning Restaurant - The Theva Cuisine கண்டி ஆகியவற்றின் நிர்வாக இயக்குனர் ஆவார். Theva Residency ஹோட்டல் 'உலக ஆடம்பர ஹோட்டல் விருதுகள் 2016' இற்கு பரிந்துரைக்கப்பட்டது என்பதுடன், கடந்த 06 ஆண்டுகளாக Trip Advisor Service Excellence விருதினைப் பெற்று வருகின்றது. ஐக்கிய அமெரிக்காவின் அமெரிக்கன் யுனிவர்சிட்ட ஒப் வஷிங்டன் டீசி பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாக விஞ்ஞானத்தில் (specialising in International Marketing) பட்டம் பெற்றுள்ளதுடன் ஐக்கிய அமெரிக்காவின் University of Hawaii, பல்கலைக்கழகத்தில் Bachelor of Science in Travel Industry Management (specialising in Hotel Management பட்டமும் பெற்றுள்ளார். மேலும் ஐக்கிய அமெரிக்காவின் Kapiolaani College, Hawaii, இல் Restaurant, Travel & Tourism Management டிப்ளோமா கற்கையையும் பூர்த்தி செய்துள்ளார். கொழும்பு பார்க் ஸ்டீரீட் ஹோட்டல், தருவிலாஸ் கொழும்பு என்பவற்றின் வதிவிட முகாமையாளராகவும், ஹில்டன் கொழும்பின் Food & Beverage Coordinator மற்றும் Guest Relations Executive ஆகவும் பணியாற்றியுள்ளார்.

# பணிப்பாளர் சபையினர்





## திரு. அத்துல சேனாநாயக்க

பணிப்பாளர்

திரு. அதுல சேனாநாயக்க பிரசித்தி பெற்ற Saizburg Austria ஹோட்டல் முகாமை மற்றும் சுற்றுலா ஸ்தாபனத்தில் பயின்ற விருந்தோம்பல் புலமையில் மேன்மை பட்டம் பெற்ற பட்டதாரியாவார்.

இங்கிலாந்திலுள்ள Hilton International இல் 05 வருடங்கள் பணியாற்றியுள்ளார். மேலும் Park Lane, Kensington and Stratford –Upon – Avon ஹோட்டலில் கடமையாற்றி நேர்த்தியான உணவு செய்முறை நிர்வகிக்கும் தரத்துக்கு பிரபல்யம் அடைந்தார். இலங்கை திரும்பிய இவர் உணவு பாண இணை முகாமையாளராக Hotel Lanka Oberoi இல் (தற்போது Cinnamon Grand) ஆரம்பித்து 1987இல் Colombo Hilton இல் உணவு பான முகாமையாளராக இணைந்தார். .

1991ம் ஆண்டு துபாயில் Don Stanley's Catering Service இனை ஆரம்பித்து வைத்தார். இத்துறையில் 40 வருட அனுபவம் கொண்ட இவர் சர்வதேச ஹோட்டல் நிர்வாக வலையமைப்புகளுடன் இணைந்து உணவு பானம் தொடர்பில் பணியாற்றுவதில் தேர்ச்சி பெற்றவர்.

தனது நீண்ட தொழில அனுபவத்தல் சர்வதேச ஹோட்டல் ஸ்தாபனங்களுடன் செயற்படும் அறிவாற்றவைப் பெற்றுள்ளார். மேலும் ஹோட்டல் உணவு பான செயற்பாட்டிற்கு இது முக்கியயமாகும்.

## திரு. ஜே.எம்.யூ.பி. ஜயமஹா

பணிப்பாளர்

பொதுச் திறைசேரியின் அரச தொழிற்துறை திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம். தேசிய நீர்வழங்கல் சபை, லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி மற்றும் Institute of Fundamental Studies. கல்வி ஸ்தாபனம் ஆகியவற்றின் பணிப்பாளர்ச் சபை அங்கத்தவர் ஆவார். மேலும், நிதியியல் மற்றும் கணக்கியல் துறையிலும், இலங்கை அரசாங்கக் கணக்கியல் சேவையிலும் ஏறக்குறைய 25 வருடங்கள் அனுபவமுள்ள அங்கத்தவர். முக்கிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் சேவைப் புரிந்துள்ளார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி கற்கையில் மாஸ்டர்ஸ் பட்டம் பெற்றுள்ள திரு. ஜயமஹா, ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கணக்கியல் டிப்ளோமா பட்டமும், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் (SLIM) நிதி முகாமைத்தவ பட்டமும், இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் நிதி முகாமைத்துவ சான்றிதழை (SLIDA) Licentiate Certificate) கொண்டுள்ளதுடன், Sri Lanka Convention Bureau வின் பணிப்பாளர்ச் சபையிலும் அங்கம் வகிக்கின்றார்.





### திருமதி. சோனாலி லியனமான
பணிப்பாளர்

திருமதி. சோனாலி லியனமான உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களில் 25 வருடங்களுக்கு அதிகம் தொழில்புரிந்த அனுபவம் கொண்ட விஷேட பயண மற்றும் சுற்றுலாத்துறை நிபுணர் ஆவார். இவர் ஊழியர் முகாமை, கட்டுப்பாட்டு இழப்பு, விமானசேவை பேச்சுவார்த்தை, உற்பத்தி அபிவிருத்தி தொடர்பில் நிறுவன கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை உருவாக்கிச் செயற்படுத்தியுள்ளார். சர்வதேசப் பயணத்தள உற்பத்தி விருத்தி மற்றும் சந்தைப்படுத்தல், உலக பயணம் மற்றும் ஓய்வு திட்டமிடல் ஆகியயவற்றில் அனுபவம் கொண்டவர். World Link Group of Companies நிறுவனத்தின் அங்கத்தவராகவுள்ள Interglobe Travel (Pvt) Ltd., இன் பிரதான நிறைவேற்றதிகாரியாக உள்ளார். இலங்கையின் இத்தாலி வணிகக் கவுன்சில் துணைத் தலைவராகவும் பதவி வகிக்கின்றார்.

### திருமதி. தெஹனி மத்யு
பணிப்பாளர்

திருமதி. தெஹனி மத்யு அமெரிக்காவின் Columbia University, New York, பல்கலைக்கழகத்தின் Bachelor of Arts in Political Science பட்டம் பெற்றவர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் Master of Science in Applied Psychology பட்டம் பெற்றுள்ளார். மொரட்டுவை Expo 80 Foundation (Tyronne Fernando Foundation) பிரதான நம்பிக்கையாளர், Vision Packaging (Pvt) Ltd, Packwell Lanka (Pvt) Ltd மற்றும் LJM Peiris & Co. Ltd. ஆகியவற்றின் பணிப்பாளராக உள்ளார். சேவா வனிதா இயக்கம், தலைவராக இருந்த இவர், தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சில் 1990 - 1993 வரையிலும், வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் 2002 - 2004 வரையிலும், Women in Need அமைப்பின் தொண்டர் ஆலோசகராக 1996 - 2003 வரையிலும் பதவி வகித்தார். இலங்கையின் American Alumni Association மற்றும் Women's Chamber of Industry and Commerce ஆகியவற்றின் அங்கத்தவருமாவார்.

# பணிப்பாளர் சபையினர்





**திரு. தனுக ரஞ்சித் சமரசிங்ஹ**
பணிப்பாளர்

திரு. தனுக ரஞ்சித் சமரசிங்ஹ 2003 ஆம் ஆண்டு Deakin. பல்கலைக்கழகத்தில் வணிக தொடர்பாடல் பாடநெறியை பூர்த்தி செய்து தமது குடும்ப தொழிற்துறையான இறப்பர் தோட்டத்துறையில் இணைந்தார். அவரின் தலைமையில் நிறுவனம் 2006 ம் ஆண்டு இறப்பர் உற்பத்தியிலும் வணிகத்திலும் ஈடுபட்டது. 2010ம் ஆண்டு குடும்ப வணிகத்தினை சொத்து விற்பனை மற்றும் விருந்தோம்பல் துறையாக மாற்றினார். நீர்மின் உற்பத்தி நிலையமே அவரின் புதிய இணைப்பாகும். DHA Holdings (PVT) Ltd - Real estate, Singhe International (Pvt) Ltd, Dhakan Lanka (Pvt) Ltd, Smart Metro Pvt Ltd and TAD Lanka Investments Pvt Ltd and Erathna Power Company (Pvt) Ltd. ஆகியவற்றின் பணிப்பாளராக பணியாற்றுகின்றார். தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தில் வரலாற்றுதுறையில் மாஸ்டர்ஸ் கற்கைநெறியை தொடர்கின்றார்.

**திரு . செஸ்மின் மன்சூர்.**
பணிப்பாளர்

திரு. சஸ்மின் மன்சூர், அமெரிக்காவின் Arizona State பல்கலைக்கழகத்தில் Bachelor's Degree in Science, majoring in Supply Chain Management பட்டம் பெற்றவர். அவரது கற்கைக் காலத்தின் போது சிறந்த பெறுபேறுகளுக்காக புலமைபரிசில் வழங்கப்பட்ட கௌரவத்திற்குரிய Dean's List இல் சேர்க்கப்பட்டார். இலங்கையில் ஆடைதொழிற்துறை மற்றும் புடவை தொழிற்துறையில் தனியுரிமை வணிகநாமங்கள், உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் 19 வருடங்களுக்கு அதிகமான அனுபவம் கொண்டவர். அமெரிக்காவின் சப்ளை செய்ன் மற்றும் லாஜிஸ்டிக்ஸ் நிறுவனங்கள் பலவற்றில் பணியாற்றி அவர் அண்மையில் தனது சொந்த நிறுவனத்தினை ஜெம் அன்ட் ஜூ வல்லரி தொழிற்துறையில் ஆரம்பித்தார். இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம் (FCCISL) மற்றும் ஜெம் அன்ட் ஜூவல்லரி சங்க அங்கத்தவரும் ஆவார்.



**திரு . தினுக் கொலம்பகே**
பணிப்பாளர்

திரு. தினுக் கொலம்பகே, அவுஸ்திரேலியாவின் University of Sydney பல்கலைக்கழகத்தில் Bachelor of Arts degree பட்டம் பெற்றுள்ளார். பட்டப்படிப்பின் பின்னர் 2009ம் ஆண்டு இலங்கை திரும்பிய அவர் இங்கிலாந்து உயர்ஸ்தானிகர் ஆலயத்தில் சிறிது காலம் சேவையாற்றினார். பின்னர் சன்டே லீடர் நாளிதழில் பிரதி விளையாட்டுதுறை ஆசிரியராக இணைந்தார். பங்களாதேஷ், இந்தியா, இலங்கை இணைந்து நடாத்திய 2011 உலககிண்ணப்போட்டியின் போது அவரின் சேவை பிரதி விளையாட்டுதுறை ஆசிரியராகத் தொடர்ந்தது. இந்த பதவி வகித்த காலத்தில் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் 2013 நடைபெற்ற அமெரிக்க சனாதிபதி தேர்தலுக்கான செய்தி சேகரிப்பு சுற்றுலாவிற்கு அனுசரணை வழங்கியது. அல் ஜசீராவில் பணியாற்றியபோது 2013 இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய தேசத்தலைவர்களின் மாநாடு போன்ற பல்வேறு நிகழ்வுகளுக்கு பங்களிப்பு செய்தார்.

# தகுதி வாய்ந்த அதிகாரியும், பணிப்பாளர்ச் சபையின் ஆலோசகரும்





**திரு. சீ. இராமச்சந்திர**
தகுதி வாய்ந்த அதிகாரி

UB Finance மற்றும் Asia Asset Finance நிறுவனங்களின் சுயாதீன நிறைவேற்றதிகாரம் அற்ற பணிப்பாளராக சேவையாற்றியுள்ள இவர் கணக்கியல் துறையில் 40 ஆண்டுகளுக்கு மேலான சேவை அனுபவம் கொண்டவர் என்பதுடன், கணக்காய்வு, தேயிலை ஏற்றுமதி, நிதிச் சேவை பொதி கட்டுதல் (Packaging) ஆகியவைகளில் அனுபவம் கொண்டவர். இவர் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தில் அங்கத்தவர் ஆவார்.

Charted Accountant ஆகத் தகைமையடைந்து Messers Hulugalla samarasinghe கம்பனி பங்காளராக 1975-1978 சேவையாற்றிய பின்னர் லிப்டன் சிலோன் லிமிற்றில் 1978 தொடக்கம் 1992 வரை பணியாற்றினார். இக்காலப்பகுதியில் U.K லிப்டன் தலைமை காரியாலயத்தில் 6 மாதம் பிரதம கணக்காளராக சேவை செய்தார். இலங்கை கொமஷல் வங்கியின் நிதி முகாமை நிறுவனத்தில் பொது முகாமையாளராக சேவையாற்றினார். பின்னர் பிரதம நிதி அதிகாரியாக Uni Walker Packaging நியமனம் பெற்றார். Non Executive Director ஆக Sathosa Retail Ltd லும் Independanal Director Mf Board of Capital Reach Holdings, Capital reach Credit Ltd, Capital Reach (Now Softlogic Finance) சேவை செய்தார்.

**திரு. கனகசபாபதி**
MPA (HARVARD), CPFA (LONDON)
FCA, FPFA, FCMA, FMAAT
பணிப்பாளர் சபையின் ஆலோசகர்

திரு. கனகசபாபதி நிதி ஆணைக்குழுவின் அங்கத்தவராகவும், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் சபை அங்கத்தவராகவும் (CA Sri Lanka) பணியாற்றுகின்றார். மேலும் பொது நிதிக் கணக்காளர்கள் சபைத் தலைவர், பொதுத்துறைக் கணக்கியல் தரக்கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர், தெற்காசியக் கணக்காளர்கள் கூட்டமைப்பின் அரசாங்கத்துறை மற்றும் பொதுத் தொழிற்துறைக் கணக்கீட்டுக் குழு அங்கத்தவர் ஆகிய பதவிகளையும் வகிக்கின்றார்.

பொதுத்துறையில் 40 வருடத்திற்கு மேற்பட்ட சேவை அனுபவம் கொண்ட இவர் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் நிதி முகாமைத்துவ மறுசீரமைப்பு ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றியவர். அமெரிக்காவின் Harvard பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்துறையில் மாஸ்டர் பட்டமும் லண்டன் Chartered Public Finance Accountant பட்டமும் பெற்றவர். மேலும் இவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம், நிதி முகாமைத்துவக் கணக்காளர்கள், Institute of Certified Management Accountants of Sri Lanka மற்றும் இலங்கை கணக்கியல் தொழில் நுட்பவியலாளர்களின் சபை ஆகியவற்றின் அங்கத்தவருமாவார்.

இலங்கை பொது நிதியியல் மற்றும் அபிவிருத்தி கணக்கியல் நிறுவனத்தின் முன்னால் தலைவரான திரு. கனகசபாபதி நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் நிதி முகாமைத்துவ ஆலோசகராகவும், நிதி கற்கைகள் அகடமியின் சிரேஷ்ட நிதியியல் ஆலோசகராகவும் சேவையாற்றியுள்ளார். இலங்கை வங்கி, மக்கள் வங்கி, மர்ச்சண்ட பேங்க் ஒப் லங்கா, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி பணிப்பாளர், அசோசியேட்ஸ் நியுஸ்பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிறெற் பணிப்பாளர்/நிதி ஆலோசகர் என்பன அவர் வகித்த ஏனைய பதவிகள் ஆகும்.

# சிரேஷ்ட முகாமைக் குழு





## திரு. சுதர்ஷன் ஸ்ரீ ராயன்

MBA, B.SC (HONS), FCCA, ACMA

பிரதான நிதியதிகாரி

திரு. சுதர்ஷன் ஸ்ரீ ராயன் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து தொழில் நிர்வாகத்தில் மாஸ்டர்ஸ் பட்டமும் பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து பௌதீக விஞ்ஞானத்தில் Bachelor Degree யும் பெற்றுள்ளார். Chartered Association of Certified Accounts (UK) மற்றும் Associate Member of the Chartered Institute of Management Accountants ஆகியவற்றின அங்கத்தவருமாவார். நிறுவனத்தில் 1987 டிசெம்பர் தொடக்கம் சேவைப் புரிந்து வருகின்றார்.

## திரு. ஷாமாயில் மொஹிடீன்

ACMA - UK

பிரதானச் செயற்பாட்டு அதிகாரி

திரு. ஷாமாயில் மொஹிடீன் பிரதான செயல் அதிகாரி. மே 2013 இல் நியமனம் பெற்றார். இவர் (CIMA UK) Chartered Institute of Management உடன் இணைந்தவர். முகாமைத்துவத்திலும் நிதியிலும் 20 வருட அனுபவம் கொண்டவர். ஸ்ரீலங்காவிலும் வெளிநாடுகளிலும் நிர்வாக நிலைகளில் கடமையாற்றினார். HDL ல் சேர்வதற்கு முன் பணிப்பாளர், உப தலைவராகவும் Aitken Spence Power சேவை செய்தார். ஸ்ரீலங்காவிலும் வெளியூரிலும் பல பிரசித்தி பெற்ற கம்பனிகளில் சேவை புரிந்துள்ளார்.

## சிரேஷ்ட முகாமைக் குழு



**திரு. ஜூட் விக்கிரமரத்ன**
கணக்காளர்

Mr. Jude Wickramaratne, Chartered Institute of Management Accountants, UK பூர்த்தி செய்தவர். கணக்கியலில் 7 வருட அனுபவம் பெற்றுள்ள இவர், 2012 ஒக்டோபரில், நிறுவனத்தில் இணைந்தார்.





# முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2014 ஆம் ஆண்டு காணப்பட்ட 4.9% த்தினை விடவும் 2015 ஆம் ஆண்டில் 4.8% சிறிய பின்னடைவை கொண்டிருந்தது. சேவைப் பிரிவே வளர்ச்சியுடன் காணப்பட்டதுடன் 5.3% வளர்ச்சியுடன் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 56.6% பங்களிப்பை வழங்கியது. மீளாய்வு ஆண்டில் அதிகரித்து காணப்பட்ட சுற்றுலா பயணிகளின் வருகையின் காரணமாக சுற்றுலா தொடர்பான வருமானத்தில் அதிகரிப்பு ஏற்பட்டதுடன் அது சேவை தரங்களின் விருத்திகளுக்கு பங்களிப்பு செய்தது. கைத்தொழில்துறை செயற்பாடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 26.2% த்தினை கொண்டிருந்ததுடன் அது 3.0% அதிகரிப்பாகும். உற்பத்தி மற்றும் விவசாய துறைகளிலும் வேகமான 5.5% வளர்ச்சி ஏற்பட்டதை அவதானிக்க முடிந்தது.

2015 ஆம் ஆண்டில் பொதுத்துறை ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்புகள் காரணமாக பொதுத்துறைக்கானச் செலவினங்கள் மீளாய்வு ஆண்டில் உயர்வாக காணப்பட்டது. எனினும், 2015ம் ஆண்டில் முதலீடுகள் குறைவாக காணப்பட்டன. ஏற்றுமதி ஊடான சம்பாத்தியம், 2014 இல் ஆரோக்கியமாக இருப்பினும் 2015 இல் சகல பிரதான ஏற்றுமதி பிரிவுகளிலும் காணப்பட்ட சரிவுகள் காரணமாக 5.6% வீழ்ச்சியைக் கண்டது. பல்வேறு அத்தியாவசிய பொருட்கள் விலை மாற்றம், உள்நாட்டு வெளிநாட்டு விநியோக சந்தைகளின் வழங்கல் கட்டுப்பாடான பணவீக்கம் காரணமாக பணவீக்கம் தனி இலக்கத்தில் பேணப்பட்டது.

2015ல் பல வெற்றிகளைப் பெற்று, யுத்தத்திற்கு பின்னரானக் காலத்தில் வேகமாக வளரும் பொருளாதார துறையாக சுற்றுலாத்துறை காணப்படுகின்றது. இவ்வாண்டில் 1,789,380 சுற்றுலா பயணிகள் வருகை தந்தனர். நிர்ணயிக்கப்பட்ட 1.8 மில்லியன் இலக்கை எட்டக்கூடியதாக இருந்தது. மேலும் தனியார் மற்றும் அரசாங்கத்தால் சுற்றுலா தொடர்புடைய உற்கட்டமைப்பு அபிவிருத்தி, சுற்றுலாதுறை முதலீடுகள், புதிய பயணத்தளங்களின் அறிமுகம், மூலோபாயம் மிக்க ஊக்குவிப்பு பிரசாரங்கள் என்பவற்றில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டது. அதிக பயணிகளை கவருவதற்கான இம்முயற்சிகள் வெற்றி இலக்கை அடைய பெரிதும் உதவின.

2015ம் ஆண்டில் கிழக்கு ஐரோப்பா தவிர்ந்த சகல பிரதான சுற்றுலா பிராந்தியங்களிலிருந்தான சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்தன. மேற்கு ஐரோப்பாவே அதிக சுற்றுலா பயணிகளை அனுப்பிய பிராந்தியமாக தொடர்ந்தும் திகழ்ந்ததுடன் அப்பிராந்தியத்தில் இருந்து 552,442 பேர் வருகை தந்திருந்தனர். இது 15.3% அதிகரிப்பாகும். 2012 தொடக்கம் அவதானித்து வருவது போல் சுற்றுலாப் பயணிகளின் மொத்த வருகையில் கிழக்கு ஐரோப்பாவின் பங்களிப்பு தொடர்ந்தும் குறைந்து வருகிறது. 2015ல் இது 30.7% ஆகும். 2012ம் ஆண்டு அப்பங்களிப்பு 37.1% ஆகும். சீனாவின் பிராந்திய ஆதிக்கம் காரணமாக 2010 தொடக்கம் கிழக்கு ஆசியா போன்ற மரபற்ற சுற்றுலாப் பிராந்தியங்களில் இருந்தான வருகை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது. தனி நாடாக இந்தியாவில் இருந்தே அதிக எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

### சர்வதேசச் சுற்றுலாதுறையும் சந்தைப்படுத்தல் முயற்சிகளும்.

அவ்வப்போது அதிர்ச்சிகள் இருந்தபோதும், உலகில் தசாப்தம் முழுவதும் ஏறக்குறைய தொடர்ச்சியான வளர்ச்சி கொண்ட மிகவும் நெகிழ்திறன் தொழில்களில் ஒன்றாகச் சுற்றுலாத்துறை இருந்து வருகிறது. உலகின் சில பகுதிகளில் தொடர்ந்து உறுதியற்ற தன்மை இருந்தாலும், உலக சுற்றுலா அமைப்பு (UNWTO) உலகம் முழுவதும் சர்வதேசச் சுற்றுலாப் பயணிகளின் வருகை 2010 தொடக்கம் 2030 இடையே ஆண்டுக்குச் சராசரியாக 3.3% ஆல் 2030 க்குள் 1.8 பில்லியன் வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறது.

கொந்தளிப்பான உலக அரசியல் சூழ்நிலையில் இருந்தாலும் 2015 ஆம் ஆண்டில், சர்வதேசச் சுற்றுலாப் பயணிகளின் வருகை 4.4% நிலையான வளர்ச்சியை பதிவு செய்தது. 2014 ஒப்பிடும்போது 2015 மேற்குறிப்பிடப்பட்ட சராசரி வளர்ச்சி 6வது ஆண்டாகவும் ஆண்டிற்கு 4% அல்லது அதற்கு மேற்பட்டு அதிகரித்துள்ளதுடன், சர்வதேச வருகை 2010 நெருக்கடிக்கு பிந்தைய ஆண்டு தொடக்கம், சுமார் 50 மில்லியன் சுற்றுலா பயணிகள் கடந்த ஆண்டு உலகம் முழுவதும் சர்வதேச தளங்களுக்கு பயணம் செய்துள்ளனர்.

வழக்கத்திற்கு மாறான வலுவான நாணய மாற்றுவிகித ஏற்ற இறக்கங்கள், எண்ணெய் விலை மற்றும் இறக்குமதி செய்யும் நாடுகளில் செலவிடப்படும் வருமானம் அதிகரிப்பு காரணமாக தேவைபாடுகள் அதிகரித்து காணப்பட்டன. ஆனால் பலவீனமான ஏற்றுமதியாளர்கள் கோரிக்கை இது மற்ற பொருட்கள், பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு குறித்த நலன் காப்புகளின் தேவைகள் அதிகரித்துள்ளன. 4% பொருளாதார அதிகரிப்புக்கு மத்தியில் ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா பசுபிக் பிராந்தியங்களின் அபிவிருத்தி அடைந்த

பொருளாதாரங்களிலும் 5% அதிகரிப்பை எட்டியுள்ளன. மத்திய கிழக்கிற்கான வருகை 03% ஆக மெதுவாக வளர்ச்சி அடைந்ததுடன். ஆபிரிக்காவிற்கான வருகை 3% த்தினாலும், ஆசிய பசுபிக்கிற்கான வருகை 5% த்தினாலும் வளர்ச்சி அடைந்துள்ளது. இதன் காரணமாக 13 மில்லியன் மேலதிக சர்வதேசச் சுற்றுலா பயணிகள் வருகை பதிவு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலாதுறை செலவினம் எனும் போது உறுதியான நாணயம் மற்றும் பொருளாதாரத்தின் பங்களிப்பு உதவியால் 2015ல் சில வழங்கல் சந்தைகள் இதனை ஈர்த்துள்ளன. 2004 தொடக்கம் உலகின் முதல்தர வழங்கல் சந்தையான சீனா இதில் இரட்டை இலக்க வளர்ச்சியை பெற்று வருகின்றது. இதனைத் தொடர்ந்து ஜப்பான் மற்றும் தாய்லாந்து ஆசிய தளங்கள், அமெரிக்கா மற்றும் பல்வேறு ஐரோப்பிய தளங்கள் இடம்பிடிக்கின்றன.

2016ம் ஆண்டில் சர்வதேச அளவில் பயணிகளின் வருகையில் 4% வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. ஆசிய மற்றும் பசுபிக், அமெரிக்கர்கள் மற்றும் ஐரோப்பா ஆகியவையே முன்னணி வகிக்கின்றன. ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு சாத்தியகூறுகள் நல்ல நிலையில் இருப்பினும், நிச்சயமற்ற மாறும் தன்மைக் கொண்டதாகவுள்ளது.

இந்தப் போட்டி தன்மை மற்றும் பின்புலத்திற்கு மத்தியில் உங்கள் நிறுவனம் வருமானம் மற்றும் இலாபத்தினை பெறும் வளர்ச்சிமிக்க சந்தைப்படுத்தலில் வெற்றி பெற்றுள்ளது. புனர்நிர்மாணப் பணிகள் காரணமாக அறைகளில் எண்ணிக்கையில் மற்றும் சேவைகளில் காணப்பட்ட தடங்கலுக்கு மத்தியிலும் இவ்வாறு செயற்பட முடிந்தமை வெற்றியாகும்.

எமது வாடிக்கையாளர்கள் எதிர்பார்க்கும் ஹில்டன் கொழும்பினை ஊக்குவிக்கும் பல்வேறு நிழ்வுகள் சந்தைப்படுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. தற்போது ஹில்டன் கொழும்பு சில நிகழ்ச்சிகளை நடாத்திட முதல்தர நாகரீக பவணியான The Colombo Fashion Week உடன் கூட்டிணைந்துள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டு வடிவமைப்பாளர்களை, மொடல் மற்றும் ஆடை வடிவமைப்புத்துறை நிபுணர்கள் மற்றும் மாணவர்களை ஈர்க்கும் நிகழ்வாகும். ஹோட்டல் இந்த உயர் பெறுமதி கொண்ட வாடிக்கையாளர்களை எதிர்பார்ப்பு நோக்கு, வசதிகள், சேவைகளை மற்றும் ஏனைய விருந்தோம்பல்களை மிகவும் வெற்றிகரமாக பூர்த்தி செய்தது. அவ்வாறே அன்னையர் தினம், தந்தையர் தினம், காதலர் தினம் பொன்ற விசேட தினங்களுக்கும் வாடிக்கையாளர்களின் பாரிய வேண்டுகோள்கள் நிறைந்த விசேட தளமாக கடந்த சில ஆண்டுகளாக ஹில்டன் கொழும்பு திகழ்ந்து வருகின்றது.

அனைத்து வகையான கிடைக்கப்பெறக்கூடிய வருவாய் ஆதாரங்களை புதுமையான மற்றும் அதிரடியான சந்தைப்படுத்தல் உத்திகளே தொடர்ச்சியாக கிடைக்க உதவின. கைவசம் இருக்கும் வசதிகள் விசேட ஊக்குவிப்புகள் ஊடாக பிரபல்யப்படுத்தப்பட்டதுடன், 40% அறைகள் வருமானம் ஹில்டன் விசுவாசிகள் ஊடாக பெறப்பட்டவையாகும். அனைத்து சர்வதேச விருந்தோம்பல் வணிக கண்காட்சிகள் மற்றும் மன்றங்களிலும் ஹில்டன் பிரநிதித்துவப்படுத்தப்படுவதுடன், 2015 ஆம் ஆண்டில், ATM Dubai fair, China – Hilton Greater China Showcase, ITB Asia in Singapore, WTM in UK, Showcase in India, OTM China and ITB Berlin in Germany. ஆகியவற்றில் பங்கு கொண்டது.

ஹில்டன் உணவு பாண வகைகளின் தரத்திற்கு சர்வதேச அளவில் பெறும் மதிப்பு நிலவுவதுடன், உணவுபாண ஊக்குவிப்புகள் வருமான அதிகரிப்பில் முக்கிய பங்கு வகித்தன. ஹோட்டலின் சமையல் அணி F&B Master 2015 hotel level, F&B Master 2015 Regional level, Culinary Arts 2015 and Food Asia 2016 awards ஆகிய விருதுகளை வென்றதுடன் இது சமையல் அணியின் உயர் மேன்மை தரத்திற்கு சான்றாக அமைந்தன.

மீளாய்வு ஆண்டின் போது ஹில்டன் கொழும்பு தேசத்தலைவர்களுக்கும், களியாட்ட நட்சத்திரங்களினதும் விருப்பத்திற்குரிய விருந்தோம்பல் பங்களாராக இருந்தமை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம். குறித்த ஆண்டில், இந்திய முன்னால் சனாதிபதி மேன்மை தங்கிய கலாநிதி. அப்துல் கலாம், ஆப்கானிஸ்தான் சனாதிபதி மேன்மை தங்கிய ஹமிட் கர்ஸாய், ஹோர்வே வெளிநாட்டு அமைச்சர் போர்ஜ் பிரெண்டுய எமது சர்வதேச தர விருந்தோம்பல் சுவையை அனுபவித்தனர். இசைத்துறை பிரபல்யங்களாக ஸ்ரேயா கோசல் மற்றும் ஸேன் பால் ஆகியோரும் எம்முடன் தங்கினர்.

### செய்பாட்டு மீளாய்வு

ஹில்டன் கொழும்பின் தற்போதைய புனர்நிர்மாணங்களுக்கு மத்தியிலும் பலமான செயற்பாட்டு செயற்திறனை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம். மேலும் தற்போதைய நிதியாண்டு 09 மாதகாலத்திற்கானது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். நிறுவனத்தின் நிதியாண்டானது ஏப்ரல் 01 தொடக்கம் மார்ச் 31 வரையான 12 மாதகாலத்திற்குரியதாக இருந்ததுடன், தற்போதைய ஆண்டில் சனவரி 01 தொடக்கம் டிசம்பர் 31 வரையான 12 மாத காலத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இதன் பெறுபேறாக மீளாய்விற்குட்பட்டுள்ள ஆண்டு 09 மாதங்களை கொண்ட குறுகிய காலஎல்லை கொண்டதாக அமைந்திருக்கின்றது.

தற்போதைய புனர்நிர்மாண பணிகள் காரணமாக 80% அறைகள் மாத்திரமே மீளாய்வு ஆண்டில் செயற்படுத்தப்பட்டன. கிடைக்கப்பெற்ற அறைகளிலும் சிலவற்றை குடியிருப்போர், அலுவலகம் மற்றும் கடைகளுக்காக பயன்படுத்த வேண்டியிருந்தது. இது சில்லறை விற்பனை பகுதி புனரமைக்கப்படும் வரையிலான தற்காலிக தங்குமிடம் மாத்திரமே. எவ்வாறாயினும் புனர்நிரமாண பணிகளுக்கு மத்தியிலும் வாடிக்கையாளர்கள் தமது விருப்பத்திற்குரிய இடமாக தொடர்ந்தும் ஹில்டன் ஹோட்டலையே தெரிவு செய்து வந்தனர். அவர்கள் விசுவாசம்

# முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

காரணமாக அவர்களுக்குத் தொந்தரவுகள் மிகவும் குறைந்த விதத்திலேயே ஹில்டன் கொழும்பின் சேவை தரங்களில் எவ்விதக் குறைவுகளும் இன்றி உறுதியான வாடிக்கையாளர் திருப்தியுடன் புனர்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சர்வதேசத் தரமிக்க ஹில்டன் வணிகநாம சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை காரணமாக 09 மாத செயற்பாட்டு காலத்தில் நாம் 38% சராசரி குடியிருப்பை கொண்டிருந்தோம். கடந்த ஆண்டில் 43% பதிவு செய்யப்பட்டது. குறைந்த அறைகளின் எண்ணிக்கை மற்றும் வட்டி வருமானத்தில் ஏற்பட்ட குறைவு காரணமாக வருமானத்தில் தாக்கம் ஏற்பட்டது. எனினும் மீளாய்வு ஆண்டில் பலமான வருமானத்தினைப் பெற்றுள்ளதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம். உணவுபாண விடுதிகளின் இடம் பற்றாக்குறைக் காரணமாக நிறுவனத்தின் உணவுபாண வருமானம் ரூ. 932 மில்லியனில் இருந்து ரூ. 797 மில்லியனுக்கு குறைந்தது. அதேவேளை முதலீட்டு வருமானம் வட்டி வீதங்களின் தளம்பல் காரணமாக ரூ. 92 மில்லியனில் இருந்து ரூ. 42 மில்லியனுக்கு குறைந்தது. பங்கு நிதியம் புனர்நிர்மாண பணிகளுக்கான நிதிகளைப் பெற்றுக் கொள்ள பயன்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியில் பெற்றுக் கொண்ட ரூ. 1789 மில்லியன் வருமானத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வு ஆண்டின் 09 மாத காலத்தில் ரூ. 1572 மில்லியன்கள் வருமானமாக பெறப்பட்டது. கடந்த ஆண்டிகை விடவும் இலாபத்தில் குறைவு ஏற்படும் என நாம் கருதிய போதிலும், நாம் குறிப்பிடத்தக்க இலாபத்தினை பெற்றுக் கொண்டோம். கடந்த ஆண்டு பெற்றுக் கொண்ட ரூ. 1445 மில்லியன் மொத்த இலாபத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு ரூ. 1292 மில்லியன் மொத்த இலாபமாக பதிவு செய்துள்ளோம். வரிக்கு முந்திய இலாபமாக ரூ. 92 மில்லியன் பெற்றுள்ளதுடன் கடந்த ஆண்டில் இதே காலப்பகுதியில் இது ரூ. 207 மில்லியன் ஆகும்.

உள்ளக வளங்களைப் பயன்படுத்தி எமது கடன் செலுத்துகைகளை குறைந்தமை இவ்வாண்டு நாம் பெற்ற மற்றுமொரு சாதனையாகும். மேலதிகபற்று மீதான எமது தங்கியிருப்பு இவ்வாண்டில் வெகுவாக குறைந்தது. கடந்த ஆண்டில் 28 மில்லியனாக காணப்பட்ட ரூ. 28 மில்லியனை இவ்வாண்டில் ரூ. 01 வரை குறைந்து 98% இதனை சீர்செய்ய முடிந்தது.

பல்வேறு கற்கை மற்றும் அபிவிருத்தி வாய்ப்புகள் மூலம் ஊழியல் உற்சாகத்தினை பேண முடிந்தது. எமது செயற்பாடுகளில் வர்த்தகநாம தரத்தினை பேணுவது மனிதவளமேயாகும் என்பதுடன், குறைந்த வருமானத்திற்கு மத்தியிலும் எம்மக்கள் மீது முதலீடு செய்வதை நாம் தொடர்ந்தோம். பயிற்சிகள், அபிவிருத்தி திட்டங்கள் என்பன சிறந்த சேவை தரத்தினை பேண வழங்கப்பட்டன. மனித மூலதனத்தினை அணுகல் மற்றும் சமூகநலத்திட்ட பங்கேற்புகள் என்பன ஆண்டறிக்கையில் ஸ்த்திரதன்மை மீளாய்வின் பக்கம் 36 இல் தரப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் நிதி செயற்பாடுகள் உறுதியான வளர்ச்சியை காட்டியதுடன், புனர்நிர்மாண பணிகளின் பூர்த்தியின் பின்னர் நிறுவனம் பெறும் வெற்றியை எதிர்வுகூறின. இலங்கையின் ஆடம்பர தங்குமிட விருந்தோம்பலின் அசல் முன்னணி தன்மை ஹில்டன் கொழும்பு வசம் எதிர்காலத்தில் தங்கியிருக்கும். அதே சமயம் நிறுவனம் குறிப்பிடத்தக்க வருமான வளர்ச்சி மற்றும் உறுதியான இலாபத்தினையும் குறுதிய மற்றும் நடுத்தர கால எல்லையில் பெற்றுக் கொள்ளும்.

### எதிர்கால நோக்கு

இலங்கையின் ஹோட்டல் மற்றும் சுற்றுலாத்துறைக்கான எதிர்காலம் மிகவும் ஒளிமயமானதாக உள்ளது. தேசிய கொள்கை வகுப்பாளர்களினால் இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ள இடம், தனியார் மற்றும் அரச துறைகளால் மேற்கொள்ளப்படும் முயற்சி மற்றும் அபிவிருத்தி என்பதே இதற்கு காரணமாகும். 2015ஆம் ஆண்டில் உலக பொருளாதார மந்தநிலை மற்றும் எண்ணெய் விலை வீழ்ச்சிகளுக்கு மத்தியிலும் இலங்கைக்கு தொடர்ச்சியாக குறிப்பிடத்தக்க சுற்றுலா பயணிகளை ஈர்க்க முடிந்தமை வெற்றியாகும். தேசத்தின் ஏனைய முதலீடுகள் மற்றும் வெளிநாட்டு அபிவிருத்தி முதலீடுகள் பற்றிய அரசாங்கத்தின் சிநேகபூர்வ முதலீட்டு கொள்கை மற்றும் அனுகூலமான பார்வை நகர சுற்றுலாத்துறைக்கு எதிர்வரும் நிதியாண்டில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அதிகரித்து வரும் சுற்றுலா பயணிகளின் வருகையை எதிர்கொள்ள 2017 முதலாவது காலண்டின் இறுதியில் 45,000 ஆடம்பர ஹோட்டல் அறைகளை ஏற்படுத்துவதற்கு சுற்றுலாத்துறை அமைச்சர் திட்டமிட்டுள்ளார். மேலும் 2016ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையாக 2.2 மில்லியன் இலக்கு அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் சுற்றுலாத்துறை விருத்திகள் தொழிற்துறை வருமானங்களை அதிகரிக்கும் அதேவேளை தேசத்தின் பிரதான வருமான மார்க்கமாகவும் அமையும் என எதிர்பார்க்கின்றோம்.

சுற்றுலாத்துறையில் அடுத்த கட்டமாக இலாப விகிதத்தினை அதிகரிப்பதற்கு ஆடம்பரச் செலவு கொண்ட சுற்றுலாப் பயணிகள் இலங்கை நோக்கி ஈர்க்கப்பட வேண்டும். இதனை அடைய நாம் உயர்தர விருந்தோம்பல் உற்பத்தி மற்றும் அதற்கு நிகரான சேவைத் தரத்தினை வழங்க வேண்டும். பயிற்சி மற்றும் திறன்விருத்திகள் இரட்டிப்பாக்கப்பட வேண்டும். சிறந்த சேவை தரத்தினை

பூர்த்தியாக வழங்கும் நிபுணத்துவ விருந்தோம்பல் ஊழியர் அணி உருவாக்கப்பட வேண்டும். இதன் ஊடாக பிராந்தியத்தில் அதிகரித்து வரும் சுற்றுலாத்துறை போட்டித்தன்மையை எம்மால் வெற்றி கொள்ள முடியும்.

இலங்கைச் சந்தையில் புதிய சர்வதேச ஹோட்டல் சங்கிலிகள் நுழைவு சுற்றுலா பயணிகள் அறைகள் விகிதம் மேம்படுத்தப்பட்டு, வணிகநாம பிரசித்து கொண்ட ஹோட்டல் காரணமாக சகல பிரிவுகளிலும் தங்குமிடம் வழங்கக்கூடியதாக இருக்கும். கொழும்பு அதிக எண்ணிக்கையான பயணிகளை கவரும் இடமாகும் அனைவருக்கும் வணிக வாய்ப்புகளை வழங்கும் இடமாக இருக்கும். கொழும்பு அதிக அறைகளை கொண்ட இரவாக இருப்பதை சந்தைப்படுத்துவதே எமது ஒன்றிணைந்த நோக்காக இருக்க வேண்டும்.

முதல்கட்ட புனர்நிர்மாணப் பணிகள் சரியாக இடம்பெற்று பூர்த்தியடையும் நிலையில் இருப்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். இது ஹோட்டலின் தோற்றத்தில் பாரிய முன்னேற்றத்தை தரும். தேசத்தின் முன்னணி ஆடம்பர ஹோட்டல் என்ற போட்டியில் தன்னை முன்னிலைப்படுத்த ஹில்டன் கொழும்பிற்கு தெளிவான வேறுபாட்டை இப்புனர்நிர்மாணம் வழங்கும்.

2015 ஆகஸ்ட் மாதம் சேவைக்கு இணைத்து கொள்ளப்பட்ட இரண்டாவது பால்ரூம் 'புளு' ஹோட்டலின் பன்முக செயற்பாட்டு கல்யாண வசதிகள் கொண்ட முதலாவது சேர்ப்பாக அமைந்தது. உயர்ரக சேவையை எதிர்ப்பார்க்கும் உயர்வகுப்பிற்கு மத்தியில் இந்த திருமண மண்டப வசதிகள் விரிவாக்கம் ஏற்கனவே இலாபத்தினை பெற்றுத்தர ஆரம்பித்துள்ளது. தனிப்பட்ட மற்றும் பெருநிறுவன நிகழ்வுகள் ஊடாக எமது உணவுபாண வருவாய்களையும் நாம் பெரிதும் அதிகரித்து வருகிறோம்.

சீரமைப்பு பணிகள் முடிவடைந்த பின்னர் ஹில்டன் கொழும்பு சர்வதேச ஹில்டன் வணிகநாமத்தின் பிரீமியத்தைப் பிரதிபலிக்கும் ஆடம்பர கலை அரங்கு, ஒப்பனை தரைகள், வசதிகளுடன் தேசத்தின் நவீன தொழில்நுட்பம் கொண்டப் பொருத்துதல்கள் மற்றும் சாதனங்களுடன் கொழும்பு நகரின் மணிமகுடமாக நிமிர்ந்து நிற்கும். வாடிக்கையாளர் அனுபவத்தை அதிகரிக்கவும் சேகைளை வசதியாகவும் வேகமாகவும் வழங்க வரவேற்பு கூடம் பின்புல அறை செயற்பாடுகள் வரை இணைந்திருக்கும் சர்வதேசத் தொழில்நுட்பப் பாணிகளுக்கு ஏற்புடையமென்பொருள் திட்ட அறிமுகத்திற்கு உள்ளாகியுள்ளது. இதைத்தவிர, ஹில்டன் உலகளவில் நற்பெயர் பெற்ற ஹோட்டல் செயற்பாட்டாளராக இருப்பதுடன், இலங்கையில் கடந்த மூன்று தசாப்தங்களாக குறைகூற முடியாத வலுவான பாரம்பரியத்தால் தொகுக்கப்பட்டு தனித்துவமான அடையாளமாக திகழ்கின்றது. இந்த பின்புலத்தில் தற்போதைய விரிவாக்கம் செய்யப்பட்ட முகத்தோற்றம் போட்டிகளில் இருந்து நிகரற்ற முன்னணி தன்மையை பெற்றுத்தரும். சர்வதேசப் பிரசித்து பெற்ற இந்த வணிகநாமம் ஆடம்பர வசதிகளை எதிர்பார்க்கும் உயர்வகுப்பு வாடிக்கையாளர்களை உலகம் எங்கும் இருந்து ஈர்க்கும். மேலும் சீரமைப்புப் பூர்த்தியடைந்ததுடன் வருவாயும் இச்சேவைகளையும் வசதிகளையும் ஒன்றிணைத்து பல்வேறு வருவாய் மார்க்கங்கள் ஊடாக அதிகரிக்கும்.

மொத்தத்தில், சுற்றுலாத்துறையில் வளர்ச்சியை காண்பதுடன் வாய்ப்புகளை பயன்படுத்தி நாமும் சிறந்த முன்னிலையை அடையும் தன்மையை காண்கிறோம். சிறந்த சேவை தரம் ஒன்றை வழங்கவும் போட்டிதன்மையை வெற்றி கொள்ளவும் நாம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளோம். அதேசயம், மனிதவளமே எமது சுவாசமாக இருப்பதை நாம் நம்புவதுடன், எமது விருந்தோம்பல் அணி புனரமைப்பின் பின்னரான சவால்களை எதிர்கொள்ள ஆர்வமாக இருப்பதாக எண்ணுகிறோம். எமது வாடிக்கையாளர்களுக்கு இணையற்ற சுற்றுலா அனுபவத்தினை வழங்குவதன் மூலம் இலங்கையின் ஆடம்பர சுற்றுலாத்துறையில் புதிய அத்தியாயம் படைக்க ஹில்டன் கொழும்பு தயாராகவுள்ளது.

# பெருநிறுவன மேலாண்மை

ஹோட்டல் டிவலப்பர்ஸ் பணிப்பாளர்ச் சபை பெருநிறுவன மேலாண்மையை அதன் உயர்தரத்திற்கு பேணும் பொறுப்பினை அர்ப்பணிப்புடன் செய்படுத்த முன்வருகின்றது. பரந்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டிணைப்பு ஆளுமை (கூ.ஆ) வரைவிலக்கணப்படுத்தலுக்கிணங்க அது தாபனம் தொழிற்பாடு மற்றும் கட்டுப்பாட்டின் செயல்பாடாக இருக்கும். கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நியமங்களுக்கு உத்தரவாதமளித்தல் மற்றும் பொருளாதார வினைத்திறமை கூட்டிணைப்பு ஆளுமையின் மிக முக்கிய இலட்சணங்களாகும். இது இலங்கைப் பட்டயக்கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டிகளுக்கு அமையப் பெற்றுள்ளது. போட்டித்தன்மை, வளர்ச்சி மற்றும் நீண்டகால நிலைப்பாடு போன்றவற்றின் அடிப்படைக் கோட்பாடு, வெளிப்படைத்தன்மையை ஹோட்டல் டிவலப்பர்ஸ் பணிப்பாளர் சபை உறுதிப்படுத்தும்

## பணிப்பாளர் சபையினர்

பெருநிறுவன இலக்குகள், பெறுமதி மற்றும் தரம், செயற்பாட்டு மீளாய்வு மற்றும் அதன் பங்குதாரர்களின் நலனைக் காக்கும் விதத்தில் பணிப்பாளர்ச் சபையானது தலைமைத்துவத்தினை வழங்குவது அதன் பொறுப்பாகும். 2015 டிசெம்பர் 31ல் பணிப்பாளர்கள் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

திருமதி. சாகரிகா தெல்கொட - சுயாதீன நிறைவேற்றதிகாரம் அற்ற

திருமதி. தீஷனா எஸ். அமரசேகர - சுயாதீன நிறைவேற்றதிகாரம் அற்ற

திருமதி. பத்மா மகாராஜா
சுயாதீன நிறைவேற்றதிகாரம் அற்ற

திரு. ஜே.எம்.யூ.பி. ஜயமஹா - சுயாதீனமற்ற நிறைவேற்றதிகாரம் அற்ற

திரு. ஜனாபிரத் எஸ். பர்ணான்டோ - சுயாதீன நிறைவேற்றதிகாரம் அற்ற

திரு. எஸ். பிரியன்க திசாநாயக்க - சுயாதீன நிறைவேற்றதிகாரம் அற்ற

திரு. அதுல சேனாநாயக்க - சுயாதீன நிறைவேற்றதிகாரம் அற்ற

திரு. ஜோசப் மிலிசியஸ் சூசைதாசன் - சுயாதீன நிறைவேற்றதிகாரம் அற்ற

திரு. ஆனந்த டி சில்வா - சுயாதீன நிறைவேற்றதிகாரம் அற்ற

2015 டிசம்பர் 31ஆம் திகதியன்று முடிவுற்ற 09 மாதகாலத்தில் பணிப்பாளர் சபை பன்னிரண்டு (09) தடவைகள் சந்தித்துள்ளது. பணிப்பாளர்களின் சமூகமளிப்பு விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பணிப்பாளரின் பெயர் | சமூகம் தந்த கூட்டங்களின் எண் |
|---|---|
| திருமதி. சாகரிகா தெல்கொட | 08 |
| செல்வி தீஷன எஸ். அமரசேகர | 08 |
| திருமதி. பத்மா மகாராஜா | 09 |
| திரு. ஜே.எம்.யூ.பி. ஜயமஹா | 08 |
| திரு. ஜனாபிரத் எஸ். பர்ணான்டோ | 06 |
| திரு. எஸ். பிரியன்க திசாநாயக்க | 09 |
| திரு. அதுல சேனாநாயக்க | 06 |
| திரு. ஜோசப் மிலிசியஸ் சூசைதாசன் | 08 |
| திரு. ஆனந்த டி சில்வா | 06 |

1. திரு. கிரிஸான்த பிரசாத் குரே - சுயாதீன நிறைவேற்றதிகாரம் அற்ற
2. செல்வி. தீஷன எஸ். அமரசேகர - சுயாதீன நிறைவேற்றதிகாரம் அற்ற
3. திருமதி. பத்மா மஹாராஜா - சுயாதீன நிறைவேற்றதிகாரம் அற்ற
4. திரு. ஜே.எம்.யூ.பி. ஜயமஹா - சுயாதீன நிறைவேற்றதிகாரம் அற்ற
5. திரு. அதுல சேனாநாயக்க - சுயாதீன நிறைவேற்றதிகாரம் அற்ற
6. திருமதி. திஹானி எஸ்.ஏ. மெதிவ - சுயாதீன நிறைவேற்றதிகாரம் அற்ற
7. திரு. தினோக் கொலம்பகே - சுயாதீன நிறைவேற்றதிகாரம் அற்ற
8. திரு. எம். சஸ்மின் மன்சூர - சுயாதீன நிறைவேற்றதிகாரம் அற்ற

9. திரு. டபிள்யூ.எஸ்.எல்.ஏ.டீ.ஆர். சமரசிங்க -சுயாதீன நிறைவேற்றதிகாரம் அற்ற

10. திருமதி. சொனாலி லியனமன - சுயாதீன நிறைவேற்றதிகாரம் அற்ற

சபைக் கூட்டங்களில் கலந்துரையாடவும், உரிய தீர்மானங்களை எடுப்பதற்காகவும் மேற்கூறியப் பணிப்பாளர்களுக்கு மாதாந்த கணக்கு விபரங்கள் மற்றும் சட்டநியதி கூற்றுக்களுக்கும் வழங்கப்பட்டன. மேலும் சபையின் அனுமதி பெறப்பட வேண்டிய ஆவணங்கள் கூட்டங்களுக்கு முன்னரே பார்வைக்கு வழங்கப்பட்டன. கூட்டத்தின் நிமிடங்கள் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அவை நிறுவனத்தின் செயலகத்தில் பராமரிக்கப்படுகின்றன.

### உள்ளக கட்டுப்பாடும், இடர் முகாமையும்

சபையானது போதுமான உள்ளக கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்திட்டங்களை பங்குதாரர்களின் நலன்களையும் நிறுவனத்தின் சொத்துக்களையும் பாதுகாப்பதற்காக அறிமுகம் செய்துள்ளது. சபையானது உள்ளக கடப்பாடுகளின் இயல்பான வரப்புரிமைகளை முழுமையான அறிந்துள்ளதுடன், சபையால் மோசடி மற்றும் பிழைகள் குறித்து முழுமையான உத்தரவாதத்தை வழங்க முடியாது.

சபை அங்கத்தவர்கள் மாதாந்த நிதிக் கணக்குகள் மற்றும் நிறுவனத்தின் செயல் திறனை அனுமதித்த வரவு செலவிற்கு எதிராக தொடர்ச்சியாக ஆய்வு செய்கின்றனர்.

### கணக்காய்வுக் குழு

2015 டிசம்பர் 31ஆம் திகதியன்று முடிவுற்ற 09 மாதகாலத்தில் கணக்காய்வுக் குழுவில் அங்கம் வகித்த சபை பணிப்பாளர்கள் விபரம். கீழுள்ள 03 அங்கத்தவர்களை அது உள்ளடக்கியிருந்தது.

திரு. ஜோசப் சூசைதாசன் - குழுவின் தவிசாளர்

திரு. பிரியன்த ஜயமஹா

திரு. பிரயங்கர திசாநாயக்க

கீழுள்ள அங்கத்தவர்கள் கணக்காய்வு குழுவில் 2016 ஏப்ரல் 28 அமுலாகும் விதத்தில் மேலுள்ளவர்களுக்கு பதிலாக நியமனம் பெற்றவர்கள் ஆவார்கள்.

திருமதி. திஹானி எஸ்.ஏ. மெதிவ் - குழுவின் தவிசாளர்

திரு. பிரியன்த ஜயமஹா

திரு. எம். சஸ்மின் மன்சூர்

திரு. நிசான் பர்ணான்டோ

உள்ளக கணக்காய்வாளர்களாக Ms. Ernst and Young தயாரித்த ஹோட்டல் செயற்பாடுகளின் உள்ளக கடப்பாடுகள் பற்றிய அறிக்கையினை கணக்காய்வுக் குழு மேற்பார்வையிட்டு ஆய்வு செய்து நிர்வாக செயற்பாட்டில் உறுதியான கட்டுப்பாடுகள் பின்பற்றப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தும். ஹோட்டல் மற்றும் நிறுவனத்திற்கு தேவையான உள்ளக கடப்பாடுகள் குறித்த மேம்பாடுகளை குழு சபைக்குப் பரிந்துரை செய்யும். கணக்காய்வுக் குழுவின் அறிக்கை ஆண்டறிக்கையின் பக்கம் 50 இல் தரப்பட்டுள்ளது.

### ஊதியக் குழு

2015 டிசம்பர் 31ஆம் திகதியன்று முடிவுற்ற 09 மாதகாலத்தில நிறுவனத்தின் ஊதியங்களை வரையறுக்கும் ஊதியக் குழுவில் கீழுள்ளவர்கள் அங்கம் வகித்தனர்.

திரு. ஜனபிரித் எஸ் ப்ர்ணான்டோ - குழுவின் தவிசாளர்

திரு ஆனந்த டி சில்வா

திரு. அதுல சேனாநாயக்க

கீழுள்ள அங்கத்தவர்கள் ஊதியக் குழுவில் 2016 ஏப்ரல் 28 அமுலாகும் விதத்தில் மேலுள்ளவர்களுக்கு பதிலாக நியமனம் பெற்றவர்கள் ஆவார்கள்.

திரு. அதுல சேனாநாயக்க - குழுவின் தவிசாளர்

திருமதி. பத்மா மஹாராஜா

திரு. தினோக் கொலம்பகே

திரு. தனுக சமரசிங்ஹ

### நிறுவனத்தின் செயலாளர்கள்

நிறுவனத்தின் சட்ட நியமங்கள், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நியதிகள் மற்றும் ஏனைய தொடர்புடைய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் குறித்து தேவையான ஆலோசனைகளை நிறுவனத்தின் செயலகம் சபைக்கு வழங்கி சிறந்த பெருநிறுவன மேலாண்மை செயற்பாட்டினை சபைப் பின்பற்றுவதை உறுதிப்படுத்தும்.

### சட்டத் தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாடு

சகல பணிப்பாளர்களும் நிறுவனத்தின் நிதி மற்றும் முகாமைத்தகவல்களை பெறக்கூடியவர்கள். நிறுவனத்தின் சகல செயற்பாடுகளும் நியம சட்ட விதிமுறைக்கு உட்பட்டது என்பது உறுதி செய்து முகாமைத்துவம் செய்யும் பொறுப்புள்ளவர்கள் ஆவார்கள். மேலும்,

# பெருநிறுவன மேலாண்மை

பரிசோதனைகளும் கட்டுப்பாடுகளும் சபையின் கொள்கைககளுடன் ஒன்றிணைந்தவையா என்பதையும் உறுதிப்படுத்துவார்கள்.

கூட்டாண்மை ஆளுகையில் சிறந்த நடைமுறைகளுக்கான நியமம் கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் பிரிவு 7.10 இற்கமைவான பட்டியலிடப்பட்டவைகளுக்காக வழங்கப்பட்டுள்ள கூட்டாண்மை ஆளுகையிலான சிறந்த நடைமுறைகளின் நியமங்களாகும்

| சட்ட இல. | விடயம் | தேவைப்பாட்டின் விபரிப்பு | அமைவுறு நிலை | விபரம் |
|---|---|---|---|---|
| 7.10.1 | நிறைவேற்று தரம் அல்லாத பணிப்பாளர்கள் | அனைத்து பணிப்பாளர்களிலும் 1/3 பங்கு நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்கள் இருத்தல் வேண்டும். | அமைவுற்றுள்ளது. | அனைத்து பணிப்பாளர்களும் நிறைவேற்று திகாரமில்லாத பணிப்பாளர்களாவர். |
| 7.10.2 (a) & (b) | சுயாதீன பணிப்பாளார்கள் | சபை குறைந்தபட்சம் இரண்டு நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்களை அல்லது அனைத்து பணிப்பாளர்களின் 1/3 இல் எது கூடியதோ அதனை எண்ணிக்கையாக கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன், ஒவ்வொரு நிறைவேற்றுனர் தர பணிப்பாளரும் தன்னுடைய சுயாதீனத்தை உறுதிப்படுத்துவதற்கு திகதி இடப்பட்டு பிரகடனத்தை சமர்ப்பித்தல் வேண்டும். | அமைவுற்றுள்ளது.<br>அமைவுற்றுள்ளது. | அனைத்து பணிப்பாளர்களும் சுயாதீன பணிப்பாளர்களாவர். |
| 7.10.3 | பணிப்பாளர்கள் பற்றிய விபரங்கள் | நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை பணிப்பாளர்களுடைய விபரங்களை தெரிவிக்க வேண்டும். | அமைவுற்றுள்ளது. | பணிப்பாளர்கள் பற்றிய விபரங்கள் “பணிப்பாளர்கள் சபை மற்றும் சபை உபகுழுக்கள்” என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன. |
| 7.10.5 | சம்பளக் குழுவின் தொகுப்பு | வேதனக்குழு குறைந்தபட்சம் நிறைவேற்றுத் தரம் அல்லாத சுயாதீன பணிப்பாளர்களை இருவரை முழுமையாக உள்ளடக்கி இருத்தல் வேண்டும். | அமைவுற்றுள்ளது. | ஆண்டறிக்கையின் “பணிப்பாளர்கள் சபை மற்றும் சபை உபகுழுக்கள்” என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன. |

| சட்ட இல. | விடயம் | தேவைப்பாட்டின் விபரிப்பு | அமைவுறு நிலை | விபரம் |
|---|---|---|---|---|
| 7.10.6 | கணக்காய்வுக் குழு | நிறுவனம் கணக்காய்வுக் குழுவொன்றை கொண்டிருத்தல் வேண்டும் | அமைவுற்றுள்ளது | சபை கணக்காய்வுக் குழுவொன்றை நியமனம் செய்துள்ளது. |
| | 7.10.6 (a) கணக்காய்வுக் குழுவின் தொகுப்பு | நிறைவேற்ற அதிகாரம் அற்ற பணிப்பாளர்களையும் பெரும்பான்மையானோர் சுயாதீன பணிப்பாளர்களாக இருத்தல் வேண்டும். | அமைவுற்றுள்ளது. | கணக்காய்வுக் குழுவின் 03 நிறைவேற்ற அதிகாரம் அற்ற பணிப்பாளர்கள் இருப்பதுடன் அனைவும் சுயாதீன பணிப்பாளர்கள் ஆவர் |
| | | கணக்காய்வுக் குழுவின் தவிசாளர் அல்லது ஒரு அங்கத்தவரேனும் நிபுணத்துவ கணக்கியல் சங்கததின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். | அமைவுற்றுள்ளது. | கணக்காய்வுக் குழுவின் தவிசாளர் நிபுணத்துவ கணக்கியல் சங்கததின் அங்கத்தவர் |

**ஏனைய கொள்கைகளும், நடைமுறைகளும்.**
**சுயாதீன நிபுணத்துவ ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளல்.**
தேவையானவிடத்து சபையான தமது கடமைகளின் நிமித்தம் வெளிவாரி நிபுணர்களின் ஆலோசனைகளை நிறுவனத்தின் செலவில் பெற்றுக் கொள்ள இயலும்..

**சபை மற்றும் நிறுவனத்தின் விடயங்களுக்கான அர்ப்பணிப்பு**
பணிப்பாளர் சபை தனது கடமைகளை பூர்த்திசெய்ய போதுமான நேரம் செலவிட வேண்டும். நிறுவனத்தின் அன்றாட நடவடிக்கைகளின் செயற்பாட்டை தலைமைச் செயல்பாட்டு அதிகாரி மற்றும் நிறுவனத்தின் தலைமை நிதிஅதிகாரியிடம் சபை ஒப்படைக்கலாம்.

பணிப்பாளர் சபை சார்பில்,

**ஹோட்டல் டிவலப்பர்ஸ் (லங்கா) பிஎல்சி**



**திரு தனுக ரஞ்சித் சமரசிங்ஹ**
பணிப்பாளர்.



**எஸ் எஸ் பி கோப்பரேட் சேர்விஸ் (பிரைவேட்) லிமிறெற் செயலாளர்கள்.**

31 மே 2016

# இடர் முகாமைத்துவம்

**இடர் முகாமைத்துவம்**
தமது நீண்டகால தங்குதிறன்களை காக்கும் விதமாக சிறப்பான இடர்முகாமைத்துவ கட்டமைப்பை கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தினை ஹில்டன் கொழும்பு நன்குணர்ந்துள்ளது. அதற்கமைய எமது இடர் முகாமைத்துவம் ஹோட்டலின் உபாயமார்க்கக் கட்டமைப்புடன் திட்டமிடப்பட்டுள்ளது மேலும் அதன் பெருநிறுவன ஆளுமையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இடர்களை ஆய்வு செய்தல், மதிப்பிடல் மற்றும் முகாமைத்துவம் ஆகியன நிறுவன கட்டமைப்பில் ஓர் அங்கமாகும். தங்குதிறனை அதிகரித்தல் உள்ளக கடப்பாடு மற்றும் இடர்முகாமையின் பொறுப்பாகும். எமது இலக்குகளை வெற்றி கொள்ளும் விதமாக இடர் முகாமைக்குழுவானது முகாமைத்துவத்தினால் நியமனம் செய்யப்படுகின்றது.

**முகாமைத்துவக் கட்டமைப்பு**
Hilton Worldwide இடர் முகாமை கட்டமைப்பிற்கு ஏற்றவாறான நியதிகளுக்கு அமையவே ஹில்டன் கொழும்பின் இடர் முகாமைக்குழு உட்பட பொது முகாமையாளர் தமது செயற்பாடுகளை வடிவமைத்துள்ளார். செயற்பாட்டு தலைமைகள் மற்றும் பொது முகாமையாளரை உள்ளடக்கியதாக இடர் முகாமைக்குழு திகழ்கின்றது. இக்குழு இடர் தன்மைகளை புலனாய்வு, கணக்காய்வு, பாதுகாப்புக் கணக்காய்வு, உள்ளகக் கணக்காய்வு, வாடிக்கையாளர்களின் பின்னூட்டங்கள் மூலம் அடையாளம் காண்கின்றது. இந்த இனங்காணல்கள் வணிகச் செயற்பாடுகளில் தாக்கம் செலுத்தகூடியவையாகும். மேலும் நிர்ணயம் செய்யப்பட்ட இடர்வரவுத் தேவைக்கேற்ப இடர் வரவின் தன்மை மற்றும் இடர்முகாமைத்துவம் என்பவற்றை மேற்பார்வை செய்தல். இடர்வரவு எதிர்பார்ப்பு மற்றும் குறிப்பிட்ட இடர்வரவுகள் அல்லது இடர்வரவு முகாமைத்துவ நடைமுறைகள் என்பவற்றிற்கானப் பரிந்துரைகளைச் செய்தல் என்பன இதன் பணிகளாகும்.

| விபரம் / இடர்ப்பாடுகளின் தன்மை | எதிர் நடவடிக்கைகளை நடைமுறைக்கிடல் |
|---|---|
| **தொழில்நுட்ப மற்றும் தகவல் இடர்**<br><br>இலத்திரனியல் செயற்பாடுகளில் ஏற்படும் தடைகள் தகவல் தளத்தினை பாதிக்கலாம் | ஒரு முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட, சொத்து மேலாண்மையை நடைமுறைப்படுத்தல், பொருள் மேலாண்மை, தகவல் மற்றும் செயல்பாட்டு செயல்திறன்களை குறித்து வியாபாரம் மற்றும் நிதி தகவல் அமைப்புகளில் இடையறா பாய்வினை உறுதி செய்தல்<br><br>இடையூறுகளின் போதான அனர்த்த மீட்டு திட்டத்தினை தொடர்ச்சியாக மேம்படுத்தல்<br><br>ஹோட்டல் தகவல் தொழில்நுட்ப பிரிவின் செயல்பாடுகளை கணினி நிறுவல் பாதுகாக்க கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தி வருதல்.<br><br>நெட்வொர்க் பாதுகாப்பு நிகழ்வுப்போக்கை தொடர்ந்து ஆய்வு செய்து தகவல் பாதுகாப்பு மற்றும் ஒருமைப்பாடு என்பதனை உறுதிப்படுத்தல் |
| **உள்ளக கட்டுப்பாடுகள் நிலைகுலையும் நடைமுறைகளும் ஒழுங்குவிதிகளும்**<br><br>இயற்கை அல்லது மனித செயற்பாட்டு இடர்கள்சொத்துக்கள் காணாமல் போதல் அல்லது அழிவடைதல் | வழக்கமான விதத்தில் உரிய பாதுகாப்பு மற்றும் தீபாதுகாப்பு கணிப்பீடுகள் மற்றும் அவசரகால திட்டங்களை திரும்பவும் கணிப்பிடுவதற்கு மேலதிகமாக காப்புறுதி கொள்கையினூடாக இடர்ப்பாட்டினை இரண்டாம் தரப்பினர்களுக்கு கையளிப்பது முக்கியமானதாகவுள்ளது. |

| விபரம் / இடர்ப்பாடுகளின் தன்மை | எதிர் நடவடிக்கைகளை நடைமுறைக்கிடல் |
|---|---|
| **கடன் இடர்**<br><br>கடன் செலுத்த தவறும் கடன்காரர்களின் இடர் | ஒரு கடன் கொள்கையும், வலுவான கட்டுப்பாடுகளை இதனை எதிர்கொள்ள முன்னெடுக்கப்படுகின்றது. கடல் எல்லைகள் தொடர்ச்சியாக மீளாய்விற்கு உள்ளாக்கப்படுகின்றன.<br><br>தொடர்ச்சியான கண்காணிப்பும் கடன்கார்களின் மிகுதிகளின் சேகரிப்பு இலக்குகளிலும் முன்னேற்ற திட்டம் அவசியம் |
| **பணதிரவ நிலை இடர்**<br><br>உரிய தேதிகளில் நிதி சார்ந்த பொறுப்புகளைக் உதிர்கொள்ள திறனின்மை | வழக்கமான ஆய்வு வழிமுறைகள் தன்மை மற்றும் இலாபத்தன்மையில் இடையே ஒரு சமநிலையை அடைய அங்கீகரிக்கப்பட்டது வரவு செலவுத் திட்ட இலக்குகளை எதிராக நிறுவனத்தின் செயல்பாடுகளை கண்காணிக்கப்படுகின்றன.<br><br>இத்தாக்கம் பண புழக்கங்களின் மற்றும் நிறுவனத்தின் உந்துவதற்கான நிலைக்கு பாதகமாக இல்லாத வகையில் மூலதன முதலீடுகள் திட்டமிடப்பட்டுள்ளன |

Hilton Worldwide of USA வழிகாட்டல்களுக்கு உட்பட்டதாக, ஹில்டன் கொழும்பு அதன் மூலோபாயத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான இடர்களை மதிப்பீடு, ஆய்வு, ஊடாக ஆண்டு முழுவதும் கண்காணிப்புச் செய்யும். இதன்போது இலங்கை கணக்கியல் நியதிகளும் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. ஹோட்டலின் இடர் முகாமைத்துவம் செயற்பாடுகளை இடர் முகாமைக்குழு மீளாய்வு செய்துள்ளதுடன், அவை செயற்படுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துகின்றன.

மீளாய்வு காலத்தில் ஹில்டன் கொழும்பின் இடர் பதிவேட்டில் பதிவான சில முக்கிய நிகழ்வுகள் கீழே தரப்பட்டுள்ளன.

# இடர் முகாமைத்துவம்

| விபரம் / இடர்ப்பாடுகளின் தன்மை | எதிர் நடவடிக்கைகளை நடைமுறைக்கிடல் |
|---|---|
| செயற்பாட்டு இடர்கள் | |
| **போட்டித்தன்மை இடர்**<br><br>சந்தையில் காணப்படும் போட்டித்தன்மை மிக்க குறைந்த அறைக் கட்டணங்கள் | சேவைத்தரத்தினை மிகவும் உறுதியாக பின்பற்றுதல்<br><br>சேவைகளையும், வசதிகளையும் மேம்படுத்தல்<br><br>நிறையான செயற்பாட்டு நடவடிக்கைகள் ஊடாக வர்த்தக நாம நிலையினை கண்காணித்தல் மற்றும் மற்றும் மீளாய்வு செய்தல்<br><br>போட்டியாளர் மூலோபயங்களை இனங்கண்டு செய்படல்<br><br>உற்பத்திகள் மற்றும் சேவைளில் ஆக்கத்திறன் மற்றும் புதுமையினை தொடர்ச்சியாக புகுத்தல்<br><br>வாடிக்கையாளர்களின் கருத்துக்களுக்கு செவிமடுத்தல் மற்றும் சரியான தீர்வுகளை வழங்கல் |
| **வர்த்தகநாமம் மற்றும் நன்மதிப்பு இடர்**<br><br>வர்த்தகநாமம் மற்றும் நன்மதிப்பிற்கு பாதிப்புச் செலுத்தும் எந்தவொரு நிகழ்வும் நிகழலாம் | வர்த்தகநாம கணக்காய்வினை தொடர்ச்சியா மேற்கொள்ள வாடிக்கையாளரின் கருத்துகை சேவை மற்றும் வசதிகள் ஆகிய இரண்டிலும் பெறல்.<br><br>HACCP மற்றும் ஏனைய தரநிர்ணயம் பெற்ற சுகாதார மற்றும் பாதுகாப்பு செயற்பாடுகளை முன்னெடுத்தல்<br><br>சேவை மற்றும் உற்பத்தியில் தொழில்துறையில் சிறந்த செயற்பாட்டை வெளிப்படுத்தல்<br><br>விருந்தோம்பல்துறையில் அனுபமும் திறனும் கொண்ட ஊழியர்களை சிரேஷ்ட நிலைக்கு உள்வாங்கல்<br><br>வர்த்தகநாம வாக்குறுதிகளை வெளிப்படுத்தும் புதுமையான சேவையை வழங்கல்<br><br>ஏதுவான சமூகநலத்திட்டங்கள் ஊடாக பொறுப்புணர்வினை வெளிப்படுத்தல் |

| விபரம் / இடர்ப்பாடுகளின் தன்மை | எதிர் நடவடிக்கைகளை நடைமுறைக்கிடல் |
|---|---|
| **மனிதவள இடர்கள்** | |
| பயிற்சி பெற்ற மற்றும் திறமை வாய்ந்த ஊழியர்கள் இழத்தல் | தொழில்சார், கல்வி மற்றும் தொழில்நுட்ப தகைமைகள் மேம்படுத்த பயிற்சி திட்டங்கள் |
| பொருத்தமற்ற தொழிற்சங்கச் செயற்பாடுகள் | சிறந்த ஊழியர் உறவினை பேணல், ஊழியர் நலன்கள், |
| காயங்கள்/ சுகாதார நிலைய காரணமாக பொருத்த மற்ற தொழில் நிலையை அல்லது இராசாயணங்களை வெளிப்படுத்தும் இடர். | ஒற்றுமை உணர்வினை ஊக்குவித்தல், ஒன்றுகூடல்கள் மற்றும் சயம நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல்<br><br>பாதுகாப்பு தரங்கள் மற்றும் நடைமுறைகளை கைவிடுதலுக்கு கண்டிப்பான போக்கை பின்பற்றுவது |





# தங்குதிறன் அறிக்கை

### தங்குதிறனுக்கான அணுகுமுறை

சர்வதேச விருந்தோம்பல் துறையின் சிறந்த செயற்பாடுகளை உயர்நிலைக்கும் அப்பால் சென்று வழங்கிடும், இலங்கையின் விருந்தோம்பல் சேவைப் பிரிவில் முன்னோடியான ஹோட்டல் நிறுவனமாக பிரதான செயற்பாடு கொண்ட நீண்டகால தங்குதிறனை உறுதி செய்யும் நம்பிக்கைக்கு அத்தாட்சியாக கொழும்பு ஹில்டன் உலகளாவிய சிறந்த தொழில் நிலையை கையாண்டுள்ளது. நாம் எமது மதிப்பிற்குரிய பங்குதாரர்களுக்கும் சமூகத்துக்கும் மதிப்பை உருவாக்குகிறோம்.

எங்கள் மதிப்பிற்குரிய பங்குதாரர்களை அடையாளம் கண்டு அவர்களுடன் பரஸ்பர தொடர்பை ஒவ்வொரு மட்டத்திலும் உறுதிப்படுத்துகிறோம். சட்டபூர்வமான ஒழுக்கமான நடவடிக்கைகளை தெளிவாக பிரதிபலிக்கச் செய்கிறோம். முக்கியமான விருந்தோம்பல் அடையாளமாக எமது உறுதிமொழி எங்கள் சேவையின் உயர்ந்த தரத்தை நிலைநாட்டுகின்றது. அதனால் எங்கள் அதிதிகளும் பங்குதாரர்களும் அவர்களது கற்பனைக்கு அப்பாற்பட்ட அனுபவத்தை பெறுகின்றனர். நாம் எமது மதிப்பிற்குரிய பங்குதாரர்களுக்கும் சமூகத்துக்கும் எமது வணிகநாம வாக்குறுதிக்கு உயர்தர சேவையையும் வாடிக்கையாளர் உறவையும் வழங்குகிறோம்.

தொழில் முன்னோடியாகிய இந்த நிறுவனம் பல விருந்தோம்பல் விடயங்களை நாட்டிலும் பிற நாடுகளிலும் பதவி உயர்வு, தொழில் ஊக்கம் பரந்த வாய்ப்புள்ள திட்டங்கள் சினேகமான சூழல் அம்சங்கள் சமூகநலத்திட்டங்கள் விருத்தி செய்வதில் முன்னனியாக திகழ்கிறது. இந்த முன்னெடுப்புகள் எங்களுடைய நிறுவன பங்குதாரர்களின் செயல்களில் உள்ள அழுத்தங்களை குறைக்கும் ஒரு புரட்சிகரமான நிறுவனமாக கீர்த்தி பெற்றுள்ள அதேசமயம் முன்மாதிரிகளுக்கு கலங்கரை விளக்கமாக அமைகின்றது. எங்கள் நோக்கு, எங்கள் செயல்களை ஒவ்வொரு நாளும் வழிநடத்தி எங்கள் ஊழியர்களை ஒரு பொது நோக்கத்திற்காக ஈடுபடுகின்றனர். அதாவது எங்கள் பயணத்தின் உச்ச இலக்கை அடைவதற்காகவாகும்.

ஹில்டன் கொழும்பு SALT மூலம் அதிதிகளை கவரச் செய்கிறது. 10 வீத நிர்ணய மூலம் வாடிக்கையாளரின் அனுபவங்களை தரப்படுத்த உதவுகிறது. இந்த இயக்குமுறை எங்களுடைய சேவைகளை திருத்துவதற்கும் பிரேரணைகளை இணைக்கவும் வாடிக்கையாளரின் புகார்களை SALT திடமாக கையாளவும் ஊக்கமளிக்கிறது.

### BLUE ENERGY ஊடான அரவணைப்பு

சகல ஹில்டன் ஹோட்டல்களிலும் Blue energy குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. எங்கள் மதிப்பை உணர்த்துவதற்கும் எங்கள் உறுதி மொழிகளை விநியோகிக்கவும் எங்கள் அனுபவங்களுக்கு இக்குழு ஊக்கம் அளிக்கின்றது. எங்கள் அதிதிகளுக்கும், பொதுசனத்திற்கும் ஒருவர் ஒருவராகவும் தனிப்பட்ட முறையில் உணர்த்துகின்றது. கேளுங்கள் கற்றுக்கொள்ளுங்கள், குழுவின் முன்னனியால் முன்னெடுக்கப்பட்ட ஹில்டன் உலகளாவிய குழுமம் பிறந்தது தான் Blue energy குழு. அவர்களுடைய ஆரம்ப அடையாள மதிப்பை பராமரிப்பது அடையாள உறுதிமொழி சட்டரீதியான முறையில் விநியோகிப்பது தான் Blue energy யின் பிரதான கொள்கையாகும்.

சமூக தொடர்பு, குழு தொடர்பு, அதிதி தொடர்பு தங்குதிறன் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் Blue energy குழுவினை நிர்வாகம் ஊக்குவிப்பதுடன், குழுவின் முக்கியமான பொறுப்பு, ஹோட்டல் குழுவின் திறமை எங்கள் மதிப்பை வைப்பதற்கும் உறுதிகளை விநியோகிப்பதாகும். நாங்கள் எங்கள் அதிதிகளுக்கும் குழு அங்கத்தவர்களுக்கும். எங்கள் அனுகூலங்களை உருவாக்குகின்றோம். கமிட்டியானது ஏறக்குறைய 40, 50 குழு அங்கத்தவர்களும், நான்கு பிரதான இடத்துக்கு தன்னிச்சையாக சேர்ந்த சேர்ந்தக் குழுவாகும். மனிதவள குழுவினருடன் சேர்ந்து காரியம் ஆரம்பிக்கும். இந்த வருடம் ஹில்டன் கொழும்பில் முன்னெடுத்த சில் நிகழ்வுகள் இங்கு தரப்பட்டுள்ளன.

### குழு விருந்துபசாரம்

எங்கள் குழு அங்கத்தவர்களும் அவர்களது துணைவியர்களுடன் பங்கு கொள்ளும் விருந்துபசாரம் வருடாந்தம் Grand Ball Room இல் நடைபெறுகின்றது. இந் நிகழ்ச்சி சக தொழிலாளிகளுடன் நல்லுறவு பேண சிறந்த ஒன்றுகூடலாக உள்ளது.

### சிங்களத் தமிழ் புத்தாண்டுக் கொண்டாட்டம்

வருடாந்தம் ஏப்ரல் மாதத்தில் ஹில்டன் கொழும்பு தோட்டத்தில் இவ் உற்சவம் நடைபெற்று வருகின்றது. பாரம்பரிய விளையாட்டுகளும், போட்டிகளும் இடம் பெறும் இவ்விழாவில் Hilton Colombo அவுருது குமாரயா, குமாரி தெரிவு செய்வப்படுவது விசேடமாகும்.



### சிறுவர் கொண்டாட்டம்

ஹில்டன் குழு அங்கத்தவர்களின் பிள்ளைகளை Excel World க்கு அழைக்கப்பட்டனர். அரைநாள் முழுவதும் பல்வேறு மகிழ்ச்சிகரமான விளையாட்டுகளில் ஈடுபட்ட அவர்களுக்கு விலையுயர்ந்த பரிசுகள் வழங்கப்பட்டன. முழுமையான செலவுகள் ஹோட்டலினால் பொறுப்பேற்கப்பட்டது

### வெசக்தோரணப் போட்டி

சகல பிரிவுகளுக்கு மத்தியிலும் வெசக் கால வருடாந்த போட்டி நடைபெற்றது. வெசக் பண்டிகையின் உண்மையான அர்த்தத்தை உத்தியோகத்தர்கள் உணர்வதற்கும் வெசக்தோரணம் உருவாக்கும் திறமையை பரீட்சிக்கும் முகமாக இது நடைபெற்றது.

### உள்ளகப் பிரிவுகளுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி

2015 ஆகஸ்ட் மாதம் உள்ளக பிரிவுகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுபோட்டி ஒன்று நடாத்தப்பட்டது. சகல பிரிவுகளும் அவர்களுக்கான அணிகளுடன் பற்கேற்றன. குடும்பத்தினரின் கரகோசங்களும் சிறுவர் விளையாட்டும் நிறைந்த மகிழ்ச்சிகரமான தினமாக அது இருந்தது.

### மனிதவள மூலதனம்

மக்களும் செயற்பாடுகளும் அடங்கிய ஒன்றுசேர்க்கப்பட்ட பெறுமதி கொண்ட எமது அறிவுசார் மூதனமாக இருப்பது மனிதவள மூலதனமேயாகும். அறிவு, திறமை செயற்பாடுகள் கொண்ட மனித செயற்பாடுகள் ஹில்டன் கொழும்பில் மிகவும் மதிக்கப்படுகின்றன. எமது மக்களின் சுவாசமே எமது வணிகநாமம். ஹில்டன் கொழும்பு மனிதவளக் குழு நபர்களை கலந்து விருத்தி செய்து வேலைகளுக்கு அமர்த்துவதில் கருத்தாயிருக்கிறது. அதனை தனிப்பட்ட இணையற்ற சேவையை அளிப்பதற்கு மக்கள் வணிகத்தின் பிரதான அங்கத்தை வகிக்கின்றனர். எங்கள் நோக்கம் அவர்களை தொழிலின் திறமையானவர்களாக ஆக்குவதே. உலகளாவிய ரீதியில் நாங்கள் விருந்தோம்பலில் தகுதியோடு சம்பந்தப்பட்டு அதனால் நல்ல தகுதியை பெற முயல்கின்றோம்.

பொது முகாமையாளர், தலைமை தாங்கும் தன்மையும் வழிகாட்டலையும் அளித்து குழு அங்கத்தவர்களை, அலுவலர்களை ஊக்குவிக்கிறார். வாடிக்கையாளர் திருப்தியில் எங்கள் செயல்களின் முன்னேற்றம் இருப்பதாகவும் நம்புகிறோம். ஹில்டன் கொழும்பு உதவி செய்வது ஸ்ரீலங்காவின் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் வழங்குனராக ஆவதற்கு. அத்துடன் எங்கள் குறிக்கோள் மனிதவளக் வியாபாரத்தின் பங்குதாரர் ஆவதற்கு. மனிதவளக் தலைமைத்துவம் மூலம் வியாபாரத்திற்கு மதிப்பளிப்பதற்கு கல்வியும் அபிவிருத்தியும் செய்கை நிர்வாக குழு அங்கத்தவர்களது ஒப்பந்தம், பாதுகாப்பு நிறுவனத்தின் முக்கியமான திட்டத்துடன் ஏற்ப ஹில்டன் கொழும்பு கல்வி அபிவிருத்தி, குழு அங்கத்தவர் நஷ்டஈடு, இலாபம், குழு அங்கத்தவர் ஈடுபாடு. ஆகிய பாரிய பிரிவில் விருத்தி செய்கிறது.

நிறுவனத்தின் மூலோபாய திட்டங்களுக்கு பொருந்தும் விதத்தில் ஹில்டன் கொழும்பு வருதாந்த மனிதவள முதலீட்டு திட்டம் ஒன்றை அபிவிருத்தி செய்கின்றது. இது ஸ்மார்ட் அதிரடி திட்டங்களுடனட இணைந்த மூலோபய நோக்காகும்.

பலவிதமான அதிதிகளுக்கு பலவிதமான பண்புகளை அளிப்பதன் மூலம் இந்த நிறுவனம் தனித்துவம் பெற்றுள்ளது. பண்புகள் திறமை வியாபார தந்திரம் உருவாக்குவதன் மூலம் உலகளாவிய சமூகங்களை அறிந்து கொள்ள முடிகிறது. எங்கள் முழு விஷேச திறமையான சேவையும் நேர்மையான உயர்தரமும் நெறியுள்ள சேவையை வழங்குகின்றது.

### கற்கை மற்றும் அபிவிருத்தி

குழு அங்கத்தவர்களின் அறிவுத்திறனை வளர்ப்பது மிகவும் அவசியமானது என ஹில்டன் கொழும்பு உறுதியாக நம்புகிறது. அறிவைத்தேடுவதில் எமக்குள்ள ஆர்வமே சிறந்த சேவையை எதிர்பார்ப்பிற்கும் அப்பால் வழங்கிடவும் போட்டியாளர்களிடம் இருந்து எம்மை முன்னிறுத்தவும் உதவுகிறது. மாறுபட்ட சூழலுக்கேற்ப கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றன. முதல் நாள் வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்வது தொடக்கம் அதன் பின் அவர்களின் தொழில்களை முற்றிலும் தொழில் விருத்தி செய்து அவர்களுடைய

# தங்குதிறன் அறிக்கை

நோக்கங்களை பெற உதவி செய்வதோடு நிறுவனத்தின் நோக்கங்களையும் இலக்குகளையும் பெற்றுக்கொள்ள பங்களிக்கிறது.

இந்த ஒன்றுதிரட்டப்பட்ட மனிதவளக் செய்முறையில் மனிதவளப் பிரிவால் தனிநபரின் திறமைகளையும் அறிவு விருத்திகளையும் அறிந்து நிறுவனத்தின் தேவைகளுக்கேற்ப வரிசைப்படுத்தி இந்த பயிற்சி செயற்படுத்துகிறது. நிர்வாக அபிவிருத்தி நிகழ்ச்சிகள் வரை குழு அங்கத்தவர்களை ஒழுங்குபடுத்தி தலைமைத்துவ தகுதிகளுக்கு ஒழுங்குபடுத்துவதுடன் உயர்தர பதவிகளுக்கும் பொது முகாமைத்துவத்திற்கும் மூத்த முகாமைத்துவத்திற்கும் முன்னேற்றம் அளிக்கின்றனர். உலகளாவிய தரத்துக்கு சமமாக ஹோட்டல் எல்லாக் குழு அங்கத்தவர்களுக்கு ஹில்டன் ஒன்லைன் பல்கலைகழகத்துக்கு அனுமதி கிடைக்கிறது. இந்தப் பயிற்சியை ஆயிரக்கணக்கான நிகழ்ச்சிகளில் கலந்து தொழிலுக்கு தனித்துவமான இடத்தை பெற முக்கிய இடமளிக்கிறது. அபிவிருத்தி தேவைகளையும் செயற்திட்டங்களும் கொண்ட பாடங்கள் இதில் அடங்கும். குழு அங்கத்தவர்கள் தரம் உயரும்போது அவர்களது தகுதிகள் மதிப்பீடு செய்யப்படுகிறது.

நிறுவனத்தின் நோக்கத்திற்கு அப்பாற்பட்ட இயங்குதள கட்டமைப்பில் எமது ஒன்றுதிரட்டப்பட்ட திறன் அபிவிருத்தி மீளாய்வுகள், வெளிப்படைத்தன்மையுடன் குழு அங்கத்தவர்களின் முன்னேற்றத்திற்கு மிகவும் உதவும். குழு அங்கத்தவர்களிக் பதவி உயர்வு, அவர்கள் ஏற்றுக் கொள்ளும் மேலதிக பொறுப்புக்கள் மற்றும் தலைமைத்துவ தகமைகள், ஆற்றல், எதிர்கால வளர்ச்சி, தற்போதைய செயற்திறன் என்பவற்றின் அடிப்படையில் பரிந்துரை செய்யப்படுகின்றது.

### தொழில்சார் சமநிலை

ஹில்டன் கொழும்பு மனிதவள திணைக்களம் Blue Energy Team உடன் இணைந்து தொழில் நேரத்தினை சமநிலைப்படுத்தும் தங்குமிடம், பொழுதுபோக்கு அறைமற்றும் லாக்கர் என பல்வேறு வசதிகளை கடந்த ஆண்டுகளில் அறிமுகம் செய்தது. மேலும் ப்ளூ சக்தி குழு, அனைத்து பணியாளர்கள் மத்தியில் ஒற்றுமை, தோழமை மற்றும் குழுத்தன்மையை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் பெருமளவிற்கு ஏற்பாடு செய்தது. இந்த ஆண்டு ஊழியர் கொண்டாட்டம், குழந்தைகள் பொழுதுபோக்கு, காலாண்டு ப்ளூ சக்தி விருதுகள் மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்கள், கிரிக்கெட் சுற்றுபோட்டி எனபன அவற்றில் சில.

மீளாய்வு ஆண்டின் குழு அங்கத்தவர்களை பாராட்டும் வாரம் 2015 ஜுன் மாதம் இடம்பெற்றது. எமது அணியினை பாராட்டும் பல நிகழ்வுகள் வாரம் முழுவதும் இடம்பெற்றது.

### பாராட்டுத் திட்டம்

ஹில்டன் கொழும்பு சமையலறை கலை திட்டம் 1988ல் ஆரம்பிக்கப்பட்டது. இளைஞர்களை 3 ஆண்டு திட்டத்தில் சிறந்த சமையல்காரர்களாக்க குறிக்கோள் வைத்துள்ளது. சித்தி பெற்ற பரீட்சார்த்திகளை எழுது முறையிலும் பயிற்சி முறையிலும் நல்ல பயிற்சி பெறுகின்றனர். சமையலறை பழகுபவர்களோடு சீன, இத்தாலி, ஸ்ரீலங்கா சமைலறை முறை போன்ற பலவிதமானவற்றை பழகுவதற்கு அரிய சந்தர்ப்பம் கிடைக்கிறது. இந்த ஹோட்டல் விருந்தோம்பல் திட்டம் 2014ல் ஆரம்பிக்கப்பட்டு இளைஞர்களும் சமையலறை பரிசாகரத் திட்டங்கள் வீட்டு அமைப்புத் திட்டங்கள் அமைக்கப்பட்டமை. இப்பயிற்சி ஹோட்டல்களின் தரத்தை உயர்த்த பெரிதும் உதவும் என்பதுடன் நாடெங்கிலும் உள்ள இளைஞர்களுக்கு நடாத்தப்படுகின்றது.

ஹோட்டலின் தொழில் பயிற்சித்திட்டம் ஒவ்வொரு பிரிவினதும் தலைமைத்துவ ஆற்றல் மற்றும் திறன்களை மேம்படுத்த உதவியது. ஹோட்டலின் சேவைத்தரத்தினை சுயமாக இது அதிகரித்ததுடன் விருந்தினர்கள் சர்வதேசதர திருப்தியை பெற்றனர். உள்ளாட்டு இளைஞர்கள் ஹோட்டலின் பொறியியல், உணவு மற்றும் பானம், சமயலறை ஸ்டுவர்ட், சமையல் பயிற்சி ஆகிய ஹோட்டலின் பயிற்சித் திட்டங்களில் பங்கு கொள்ளும் வாய்ப்பை பெற்றுக் கொண்டனர். இந்தப் பயிற்சி மூலம் அவர்கள் தொழிற்துறைக்கான ஆரம்ப கட்ட பயிற்சியை பெற்றுக் கொண்டதுடன், நிபுணத்துவ ஆற்றலை பெற்றுக்கொள்ள தேவையான தகைமைகளை அறிந்து கொள்ளவும் உதவின. இது அவர்களின் தெரில்வாழ்விற்கு முக்கிய திருப்புமுனையாகும். வகுப்பறை பாடத்திட்டங்களுக்கு மேலதிகமாக மதிப்பிட்டு வழிகாட்டு முறையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளன.

எமது தற்போதய குழு அங்கத்தவர்கள் தமது நிபுணத்துவ வாழ்வில் மேற்பார்வையாளர்களாக முன்னகருவதங்கான பங்களிப்பை இப்பயிற்சி திட்டம் வழங்கியுள்ளது. தமது திறன்களை வளர்க்கும், அடுத்த தலைமுறையை பயிற்றுவிப்பதில் தமது பங்கு என்பதையும் அறிந்து கொண்டனர். ஹில்டன் வேல்ட்வைடின் தென்கிழக்காசிய பிராந்தியத்தில் உள்ள ஒரே சமயலறை பயிற்சித்திட்டம் இதுவேயாகும்.

### திறமைகளை வளர்த்தல்

ஹில்டன் கொழும்பு அங்கத்தவர்களுடைய திறமையை மேம்படுத்த பல பூர்வாங்க வேலைகளை வழிநடத்துகிறது. அதன் ஊடாக ஹோட்டல் நடவடிக்கைகளை விருத்திசெய்ய நடவடிக்கை எடுத்தது. உள்ளூர் குழு அங்கத்தவர்களும் சிறந்த பயிற்சி பெற விருந்தோம்பும் தொழிலில் சேரவும் நாடாளவிய ரீதியில் பயிற்சித்திட்டம் NVAITA உடன் சேர்ந்து SLITHM மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல் உடன் சேர்ந்து தொழில் பயிற்சி அளிக்கின்றது.

### சம வாய்ப்புகளை வழங்குதல்

ஹில்டன் கொழும்பு விசேட தேவையுடைய இளைஞர்களுக்கு தனிப்பட்ட உறுதியை வழங்குவதில் முக்கிய பங்கு வகித்தது. உள்நாட்டு ஹோட்டல் துறையில் இச்செயற்பாடு சமவாய்ப்புள்ள தொழில்வழங்குனராக ஹோட்டலை நிலைநிறுத்தியது. இந்த அனுபவம் விருந்தினர்களுடன் மிகச்சிறந்த மனிதநேயத்துடன் பழகும் விதம் குறித்த விளக்கத்தினை ஊழியர்களுக்கு வழங்கியது. உள்ளூர் சமூகம் இத்திட்டம் ஊடாக விசேட அறிவு மற்றும் திறன் விருத்தி வாய்ப்பினை பெற்று பயன் அடைந்து. விசேட தேவையுடைய சகதோழர்களுடன் எவ்வாறு பழகுவது, மதிப்பளிப்பது, மதியாதை செய்வது என்பது பற்றிய விளக்கத்தையும் ஊழியர்களுக்கு இத்திட்டம் வழங்கியது.

வலது குறைந்தோருடன் எப்படி நடந்து கொள்வது, எப்படி ஹோட்டல் குழு அங்கத்தவர்கள் கற்று நன்மையடைந்திருக்கின்றனர். இந்த முன்னெடுப்பு அவர்களுடைய சகாக்களுடன் நடந்துகொள்ளும் முறைகள் வலுவடைந்துள்ளது. இதனால் பயிற்சி முன்னெடுப்புகளின் மூலம் திறமையான கல்வியும் திறனையும் பெற்று அபிவிருத்தி சந்தர்ப்பம் கிடைத்தது. வேலை செய்யும் விதமும் ஹோட்டல் தொழில் மதிப்பும் பெற உதவியது.

### இளைஞர்களை வலுப்படுத்தல்

விருந்தோம்பல் தொழிலை ஹில்டன் கொழும்பு நலத்திட்டங்களை தொடர்ந்து நடத்துகிறது. இந்த வருடம் நாட்டிலுள்ள இளைஞர்களுக்கு ஆதரவு அளிக்கிறது. நீண்டகால குறுகிய கால ஸ்திரத்தை தொழிலுக்கு அளிக்கிறது. அவர்களுடைய இலக்கை பூரணப்படுத்த சந்தர்ப்பம் அளிக்கிறது. இளைஞர்களுக்கு ஊக்கமளித்து தொழிலுக்கும் ஸ்திரம் அளிக்கிறது. உலகளாவிய ரீதியில் ஹோட்டல் ஒளிமயமான தொழில்களை செய்ய சந்தர்ப்பம் அளிக்கிறது. Bright Blue Future உலகளாவிய ஹில்டன் முன்னெடுப்பு அவர்களது நேரத்தையும் அனுபவத்தையும் வருங்காலத்துக்கு தயார் செய்யும் இளைஞர்களுக்கு நன்மையடைய செய்கிறது. ஹில்டன் கொழும்பு நிகழ்ச்சிகள் Blue energy ஆதரவுடன் மனிதவளக் குழு உருவாக்குகிறது.

2015ஆம் ஆண்டு Brand Awards 2015' விருது விழாவின் போது ஹில்டன் கொழும்பு அதன் சிறப்பான Bright Blue Futures' செயற்பாடுகளுக்காக Bright Blue Futures Award (APAC) விருதினால் கௌரவிக்கப்பட்டது.

### தொழில் பயிற்சி

ஹில்டன் கொழும்பு பயிலுனர் அபிவிருத்தி குழு ஸ்ரீலங்கா சுற்றுலா விருந்தோம்பல் நிர்வாகத்துடன் (SLITHM) ஹில்டன் கொழும்பு தலைவர்களுடன் நெருக்கமாக வேலை செய்தது. தொழில்துறை பயிலுனர்களுடன் பயிலுனர் விருத்தி குழு மாதாந்த கூட்டங்களை நடாத்தியது. இதனால் திறமையின் மட்டம் கூடி திறமையான பட்டமளிப்பு பெறச் செய்தது. உள்ளூர் இளைஞர்களுக்கு அவர்கள் பாடசாலையில் பெற்ற தொழில்நுட்ப திறமைகளை அதிகரித்து ஐந்து நட்சத்திர ஹோட்டலில் பயிற்சி பெற சந்தர்ப்பம் அளிக்கிறது. உலகின் எந்த பகுதியிலும் திறமை தகுதி வாய்ந்த திறமைசாலிகளை உருவாக்கியுள்ளது. குழு அங்கத்தவர்களும் புதிதாக சேர்ந்தவர்களும் அவர்களது நிர்வாகத்தையும் குழுவேலை தயார் செய்யும் திறமையும் கொடுக்கப்பட்ட வேலை விஷேச பயிலுனர் திட்டங்களுக்கும் தொழில் நிபுணர்களும் பங்களிப்பு செய்ய முடிந்தது. இப்பயிற்சி உள்ளூர் தொழிலின் சாதகமான விளைவு ஏற்படுத்தியுள்ளது. இந்த திறமையான தூண்டுதலால் இளம் பணியாளர்கள் தொழிலில் சிறந்த முறையில் சேவை செய்ய திறன் பெற்றுள்ளனர்.

### இளைஞர் மன்றம் 2015

ஹில்டன் இளைஞர் மன்றம் 2015 நிகழ்வினை நடாத்தியமை மூலம் தொழிற்துறையின் திறமையை வலுப்படுத்துவதில் முக்கிய பங்காற்றியது. உள்நாட்டு இளைஞர்களுக்கு தொழிற்துறை தகவல்கள் மற்றும் வழிகாட்டல்களை இது வழங்கியது. இளம் சமுதாயம் தொழில்துறைகளில் உள்நுழைவதற்கு தொடர்ச்சியான சவால்கள் மற்றும் துல்லியமான தகவல்களை பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். தமது அதாழில்துறையை தெரிவு செய்வது தேவையான திறன்கள் மற்றும் வாய்ப்புகளை அறிவதற்கான ஆலோசனைகளும் அவர்களுக்கு கிட்டுவதில்லை. ஹில்டன் கொழும்பு, ஹில்டன் கொழும்பு ரெசிடன்ஸ் அமைப்புடன் இணைந்து தொழில் வழிகாட்டல் நிகழ்வை ஒழுங்கு செய்தது. 2019ம் ஆண்டளவில் உலகளவில் ஒரு மில்லியன் இளைஞர்களை சென்றடையும் ஹில்டன் வேல்ட்வைடின் நோக்கிற்கு அமைவாக இந்நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டது.

விருந்தோம்பல்துறையிலுள்ள வளமான வாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வினை இளைஞருகள் மத்தியில் இந்நிகழ்வு ஏற்படுத்தியது. மேலும் பல மட்டங்களிலும் உள்ள இளைஞர்களை ஒன்றிணைத்து தொழிற்துறை பற்றிய மேலதிக கற்கையை பெற வழிஏற்படுத்தியது. விருந்தோம்பல்துறைக்கு புதிய திறமைகளை பெற இது சிறந்த வாய்ப்பாகவும் அமைகின்றது.

### இளைஞர் மன்றம் 2015

ஹில்டன் இளைஞர் மன்றம் 2015 நிகழ்வினை நடாத்தியமை மூலம் தொழிற்துறையின் திறமையை வலுப்படுத்துவதில் முக்கிய

## தங்குதிறன் அறிக்கை

பங்காற்றியது. உள்நாட்டு இளைஞர்களுக்கு தொழிற்துறை தகவல்கள் மற்றும் வழிகாட்டல்களை இது வழங்கியது. இளம் சமுதாயம் தொழில்துறைகளில் உள்நுழைவதற்கு தொடர்ச்சியான சவால்கள் மற்றும் துல்லியமான தகவல்களை பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். தமது தொழில்துறையைத் தெரிவு செய்வது தேவையான திறன்கள் மற்றும் வாய்ப்புகளை அறிவதற்கான ஆலோசனைகளும் அவர்களுக்கு கிட்டுவதில்லை. ஹில்டன் கொழும்பு, ஹில்டன் கொழும்பு ரெசிடன்ஸ் அமைப்புடன் இணைந்து தொழில் வழிகாட்டல் நிகழ்வை ஒழுங்கு செய்தது. 2019ம் ஆண்டளவில் உலகளவில் ஒரு மில்லியன் இளைஞர்களை சென்றடையும் ஹில்டன் வேல்ட்வைடின் நோக்கிற்கு அமைவாக இந்நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டது.

விருந்தோம்பல்துறையிலுள்ள வளமான வாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வினை இளைஞருகள் மத்தியில் இந்நிகழ்வு ஏற்படுத்தியது. மேலும் பல மட்டங்களிலும் உள்ள இளைஞர்களை ஒன்றிணைத்து தொழிற்துறை பற்றிய மேலதிக கற்கையை பெற வழிஏற்படுத்தியது. விருந்தோம்பல்துறைக்கு புதிய திறமைகளை பெற இது சிறந்த வாய்ப்பாகவும் அமைகின்றது.

மேற்கூறிய நிகழ்விற்கு மேலதிகமாக மேலும் பல விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் இளைஞர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டன. 2015 இளைஞர் விருந்தோம்பல் மாதத்தில் ஹில்டன் ஏற்பாடு செய்த சகல விதமான இளைஞர் தொடர்புடைய செயற்பாடுகளை கௌரவிக்கும் விதமான ஹில்டன் வேல்ட் வைடினால் Careers@Hilton Live: Youth in Hospitality Month Award for 2015 APAC விருது வழங்கி நிறுவனம் கௌரவிக்கப்பட்டது. இளைஞர்களுக்கான தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் காரணமாக அர்ப்பணிப்பு பிரிவின் கீழ் இந்த விருது வழங்கப்பட்டது.

### சமூக அக்கறை கொண்ட நலத்திட்டங்களின் முன்னெடுப்பு

### 'ரூம் டு ரோட்' வேலைத்திட்டம்

உலகளாவிய வாசிப்பு அறைத் திட்டத்தின் பெண் பிள்ளைகளைப் பாடசாலையில் வைக்கவும் பங்குபற்றுபவர்களை விஷேச ஹோட்டல் பரிச்சயமுள்ள சுற்றுலாவில் பங்குபற்றியது. இது இளைஞர் அபிவிருத்தி சமூகப் பொறுப்புகளுக்கு பங்களித்து விருந்தோம்பல் தொழிலில் உறுதியான அறிமுகம், அவர்களுடைய கல்விக்கு தொழில்நுட்ப அனுபவங்களை பெற்றுக்கொள்ள உதவுகிறது. இத்திட்டம் வசதி குறைந்து பிள்ளைகளுக்கு தங்களது திறமைகளை விருத்தி செய்ய உதவுகிறது. இத்திட்டம் பிள்ளைகளுக்கு Hilton உலகளாவிய அறிமுகம் செய்து ஹோட்டல் தலைவர்களை சந்தித்து கதைக்க உதவுகிறது. உலகளாவிய முன்னெடுப்பின் காரணமாக உலகளாவிய அடையாளத்துக்கு மதிப்பளித்து கிராம இளைஞர்களுக்கு இந்த தொழிலில், தொழில் சந்தர்ப்பங்களை அறியக் கிடைக்கச் செய்கிறது.

### சன்சைன் கேம்ஸ்

சன்சயின் விளையாட்டு வலது குறைந்த பிள்ளைகளுக்கு பிள்ளைகளின்தேவைகளை உயர்ந்த ஹில்டனால் உருவாக்கப்பட்ட விளையாட்டு போட்டியாகும். இப்படிப்பட்ட முன்னெடுப்புகள் சட்டரீதியான வேலைகளை திருதிதி இளைய தலைவர்களை திறம்பட செய்ய உதவும். சமூக பரஸ்பர திறமைகள் அவர்களுடைய விளையாட்டு திறமைகளை திறம்பட செய்கிறது. ஹோட்டல் தேவைகளை பூரணமாக்கி சமூகப் பொறுப்பை விருத்தி செய்கிறது. உணவுத் தயாரித்தல், சேவைகளை இணைத்தல் போன்ற அடிப்படை தேவைகளை மனிதர்களுக்கு கொடுத்தல், மக்களை நிர்வகித்தல் தயார் செய்தல் திறமைகளை பெற்றுக் கொண்டது. சமூக பொறுப்பு விஷயங்களின் பங்களிப்பை திருத்த இந்த நிழ்ச்சி உதவியதோடு கம்பனியின் மதிப்பையும் உயர்த்தியது. மேலும் அன்றைய தினம் நிறுவனம் 600 பகலுணவுப் பொதிகளையும் வழங்கியது.

### சுற்று சூழல்

### சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

எங்களது கண்டிப்பான சுகவியல் பாதுகாப்புத் திட்டம் ஒவ்வொரு காலாண்டு மட்டங்களில் ஹில்டன் ஹோட்டல் தரத்துக்கு ஒப்பாக இருப்பது பரிசீலனை செய்யப்படுகின்றது. தீயணைக்கும் படை திணைக்கள பிரிவுடன் இணைந்து தீயணைப்பு பயிற்சி முன்னோட்டங்களை நடாத்துகிறோம்.

ஹோட்டல் ISO 22000:2005 மற்றும் HACCP உணவு பாதுகாப்பு தரத்தை பெற்றுள்ளது. சமையலறையில் உணவு கையாளுபவர்கள் கிரமமாக வைத்திய பரிசோதனைகளும் அம்மைப்பால் நோய்தடுப்பு திட்டமும் ஊழியர்களுக்கு மத்தியில் இடம்பெறுகின்றது.

சமையலறை உத்தியோகத்தர்களுக்கு உணவு பாதுகாப்பு, சுகாதார பயிற்சி மற்றும் உணவு ஒவ்வாமை பயிற்சிகளும், வாடிக்கையாளரது தேவைகள் சரியாக கிடைப்பதற்கு கிரமமாக நடைபெறுகிறது. குடிநீர், நீச்சல் தாடக நீர், கூலிங் டவர் நீர், விருந்தினர் அறை நீர், உணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் நீர் என்பவற்றின் நுண்ணுயிரியல் மற்றும் இரசாயண பகுப்பாய்வு தொடர்ச்சியான

முறையில் முறையான ஆய்வுகூட கண்காணிப்பு பாதுகாப்பு தரங்கள் மற்றும் தேவைப்பாடுகளுடன் மேற்கொள்ளப்படுகின்றன.

உணவுகளின் ஆரோக்கியத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் உணவுகள், உணவு கையாளல் சுகாதார ஆண்வு, சுத்தம் திறன் கண்காணிப்பு என்பன மேற்கொள்ளப்படுகின்றன. சர்வதேச ஹில்டன் வேல்ட் வைட் தரகட்டுப்பாட்டிற்கு ஏற்ப உணவு பாதுகாப்பு மற்றும் ஆரோக்கிய தரங்களை நிர்வகித்து உறுதிப்படுத்தும் உணவு பாதுகாப்பு மற்றும் ஆரோக்கிய முகாமையாளரை கொண்டுள்ள முதலாவது 5 நட்சத்திர ஹோட்டல் ஹில்டன் கொழும்பு ஆகும்.

மேலும் அறைகளிலும் ஹோட்டல்களிலும் காற்றின் தரம் பரீட்சிக்கப்படுகிறது. (IAQ) ஹோட்டலின் கொட்டிலில் நெருப்பின் அபாயத்தை குறைக்க தூறல் முறை அமைக்கப்பட்டுள்ளது. விருந்தினர்களுக்கு இடையூறு நடைபெறாதவண்ணம் சத்தத்தின் அளவை வெற்றிகரமாக குறைத்துள்ளோம்.



# தங்குதிறன் அறிக்கை





| அமைப்புக்கள் | எமது சேவை |
|---|---|
| ஒட்டிச்சுட்டான் கிராமம் | வடபகுதியலுள்ள யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இந்த கிராமத்திற்கு இராணுவத்தின் ஊடாக பாரியளவிலான கற்கை உபகரணங்களை இக்கிராமத்திலுள்ள பிள்ளைகளுக்கு வழங்கியது. |
| காது கேளாதோர் மற்றும் கண்பார்வையற்றோர் பள்ளி | தமது வருடாந்த சுற்றுலாவிற்காக கொழும்பு வந்த மாணவர்களுக்கு பகலுணவு வழங்கியது. |
| கொழும்பு 'பிரிஎண்ட்ஸ்-இன்-நீட்' சங்கத்தின் ஜெப்பூர் கால்கள் திட்டம் | அவர்களின் வருடாந்த விளையாட்டு போட்டிக்கு சிற்றுண்டி வழங்கல். நிகழ்வினை ஹில்டன் கொழும்பு குழுவினர் பார்வையிட்டனர். |
| இரத்மலானையிலுள்ள 'மிஹிது செத் மெதுர' அங்கவீன இராணுவ வீரர்கள் | ஹில்டன் குழுவினர் அவர்களுடன் நேரம் செலவிட்ட பின்னர் புபே பகலுணவு வழங்கப்பட்டது. இசைக்குழுவுடன் சில குழு அங்கத்தவர்களை அவர்களுக்கு இசை வழங்கியனர். துவாலைகள் நன்கொடையாக வழங்கப்பட்டன. |
| சிநேகா சிறுவர் அபிவிருத்தி நிறுவனம் | 20 சிறுவர்களுக்கு கிறிமஸ் கொண்டாட்டம் ஹோட்டலில் நடாத்தப்பட்டது சிற்றுண்டி, உபகரணங்கள் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன. |
| இலங்கை பெளர் ஸ.்.வரே கோஸ்பல் தேவாயலம | சிற்றுண்டி மற்றும் ஹோட்டல் சுற்றிகாட்டப்பட்டது, கிறஸ்மஸ் தின அலங்காரங்கள் செய்யப்பட்டன. |
| புற்றுநோய் வைத்தியசாலை - கண்டி | வெளிநாட்டிருந்து வருகை தந்த மெஜிக்கலைஞர் ஒருவருக்கு தங்குமிட அறை அலவமாக வழங்கப்பட்டர். இந்நிகழ்ச்சி மூலம் திரட்டப்பட்ட நிதி முழுவதும் கண்டியில் அமைக்கபடவுள்ள புற்றுநோய் வைத்தியசாலைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. |
| கொழும்பு நவம் மகா பெரஹரா | பிரசித்தமான இச்சமய நிகழ்வில் இரு தினங்கள் பகல் மற்றும் இரவு உணவு வழங்குவதில் ஹில்டன் கொழும்பு பங்குபற்றியது. |

**எரிசக்கிச் சேமிப்பு**

ஸ்திரமான வேலைகளுடன் ஹில்டன் கொழும்பு இணைத்து அத்துடன் நடக்கும் ஹோட்டல் புதுப்பிக்கும் வேலை சக்தியைச் சேமிக்கும் அம்சங்களை திரும்ப புதுப்பிக்கும் பகுதிகளுக்குச் சேர்த்து சக்தியைச் சேமிக்கும் உபகரணங்களை காற்றுக் கட்டுப்படுத்தல் (Air condition) செய்யும் முறை LED வெளிச்சமளிக்கும் முறையும் புதிய தோற்றத்தின் போது ஒன்று சேர்க்கப்படும். சக்தியை சேமிக்கும் உயர்தர அம்சங்கள் கம்பனியின் சக்திச் செலவை குறைப்பதற்கு உதவி செய்யுமென நம்பிக்கை வைத்துள்ளோம்.

**கழிவு முகாமைத்துவம்**

Organic or non organic கழிவுகளை வெவ்வேறாக்கும் பணியை ஹோட்டல் ஏற்றுக்கொண்டுள்ளது. Organic கழிவு கால்நடைகளுக்கு உணவாக அனுப்பப்படுகிறது. கழிவுகளை வேறாக்கி கண்ணாடித்துண்டு உலோகக் கழிவுகள் அகற்றி காய்ந்த கழிவு, ஈரமான கழிவு என பிரிக்கப்படுகிறது. PET போத்தல்கள் மீள்சூழற்சி கம்பனியுடன் எங்கள் கம்பனியுடன் ஒப்பந்தப்படி மீள்சூழற்சி செய்யப்படுகின்றது. உணவு வீணாகுதல் பற்றி தெளிவுபடுத்த போஸ்டர் பிரச்சாரத்தை கம்பனி ஏற்றுக்கொண்டுள்ளது.

சுற்றுச்சூழல் மீதான ஹோட்டலின் அர்ப்பணிப்பு மற்றும் ஸ்தீரதன்மையை உறுதி செய்யும் தொடர்ச்சியான பயிற்சி மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்களை குழு உறுப்பினர்கள் மத்தியில் மேற்கொள்ளப்படுகின்றன.





# நிறுவனத்தின் அலுவல்கள் தொடர்பில் பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

ஹோட்டல் டிவலப்பர்ஸ் (லங்கா) பிஎல்சி பணிப்பாளர் சபையினர் 2015 டிசம்பர் 31ஆம் திகதியன்று முடிவுற்ற 09 மாதகாலத்திற்கான கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள், மற்றும் வாக்களிக்கப்பட்ட நிதியம் என்பவற்றை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றனர்.

## 1. ஆண்டிற்கான மதிப்பாய்வு

மீளாய்விற்குரிய 2015 டிசம்பர் 31ஆம் திகதியன்று முடிவுற்ற 09 மாதகாலத்திற்கான நிறுவனத்தின் வணிக செயற்பாடுகள், நிதிக்கூற்றுக்களின் பெறுபேறுகள் மற்றும் எதிர்கால திட்டமிடல்கள் ஆகியன அடங்கிய கருத்துரைகள் தலைவரின் மீளாய்வில் ( பக்கம் 07) விளக்கப்பட்டுள்ளது.

## 2. பிரதானச் செயற்பாடு

ஹில்டன் கொழும்பின் சொத்துக்கள் மற்றும் அதன் வணிகத்தினை நிர்வாகம் செய்தலே நிறுவனத்தின் பிரதானச் செயற்பாடாகும்.

## 3. நிதிக் கூற்றுக்கள்

நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் பக்கம் 53 தொடக்கம் 82 வரையில் தரப்பட்டுள்ளன.

## 4. கீழ் அக்கறை

பணிப்பாளர்கள் சபை எதிர்வு கூறக் கூடிய எதிர் காலத்தில் தனது இயக்கச் செயற்பாடுகளைத் தொடருவதற்கான போதிய வளங்கள் எமது கம்பனியின் வசமுள்ளன என பணிப்பாளர்கள் சபைத் திருப்தியடைகின்றது. அதற்கிணங்க “கீழ் அக்கறை” எண்ணக்கரு அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன.

## 5. கணக்காய்வாளரின் அறிக்கை

கம்பனியின் நிதிக் கூற்றுகள் மீதான கணக்காய்வாளரின் அறிக்கை 54 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

## 6. கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு உபயோகித்த கணக்கீட்டு கொள்கைகள் பக்கம் 62 குறிப்பு 04 ல் தரப்பட்டுள்ளது.

## 7. வரிவிதிப்பு

நிதிக்கூற்றில் தரப்பட்டுள்ள குறிப்பு 10 இன் பிரகாரம் வரிக்கான முன்னேற்பாடுகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

## 8. பங்குலாபம்

2015 டிசம்பர் 31ஆம் திகதியன்று முடிவுற்ற 09 மாதகாலத்திற்கு பணிப்பாளர்கள் பங்குலாபம் ஒன்றினை சிபாரிசு செய்ய வில்லை

## 9. பணிப்பாளர்களும் அவர்கள் கொண்டுள்ள பங்குகளும்

2015 டிசம்பர் 31ஆம் திகதியன்று நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபையில் பணியாற்றியவர்கள்:

| | |
|---|---|
| திருமதி. சாகரிகா தெல்கொட | தவிசாளர் |
| செல்வி. தீஷனா எஸ். அமரசேகர | பணிப்பாளர் |
| திருமதி. பத்மா மகாராஜா | பணிப்பாளர் |
| திரு. ஜே.எம்.யூ.பி. ஜயமஹா | பணிப்பாளர் |
| திரு. ஜனாபிரத் எஸ். பர்ணான்டோ | பணிப்பாளர் |
| திரு. எஸ். பிரியன்க திசாநாயக்க | பணிப்பாளர் |
| திரு. அதுல சேனாநாயக்க | பணிப்பாளர் |
| திரு. ஜோசப் மிலிசியஸ் சூசைதாசன் | பணிப்பாளர் |
| திரு. ஆனந்த டி சில்வா | பணிப்பாளர் |

நிறுவனத்தின் பணிப்பாளர்களும் திகதிகளும்.

திரு. கிரிஸான்த பிரசாத் குரே
செல்வி தீஷன எஸ். அமரசேகர
திருமதி. பத்மா மஹாராஜா
திரு. ஜே.எம்.யூ.பி. ஜயமஹா
திரு. அதுல சேனாநாயக்க
திருமதி. திஹானி எஸ்.ஏ. மெதிவ்
திரு. தினோக் கொலம்பகே
திரு. எம். சஸ்மின் மன்சூர்
திரு. டபிள்யூ.எஸ்.எல்.ஏ.டீ.ஆர் சமரசிங்க
திருமதி. சொனாலி லியனமன

மேலுள்ள பணிப்பாளர்கள் நிறுவனத்தில் எவ்வித பங்குகளையும் கொண்டிருக்கவில்லை

## 10. அக்கறைப் பதிவேடு

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியிலும் அறிக்கையின் திகதிவரையிலும் பணிப்பாளர்களின் அக்கறை 2007கம்பனிகள் சட்டம் 07 பிரிவு 192(2) பிரகாரம் நிதிக்கூற்று குறிப்பு 34.1 இல் தெரிவிக்கப்பட்டுள்ளது

## 11. பணிப்பாளர்களின் ஊதியம்

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் பணிப்பாளர்களுக்கு செலுத்தப்பட்ட ஊதியம் மற்றும் ஏனைய அனுகூலங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இக் காலப்பகுதியில் ரூபா 4,600,000 பணத்தொகையை பணிப்பாளர்களுக்கு ஊதியமாக செலுத்தப் பெற்றது.

## 12. பணிப்பாளர்களுக்கு ஒப்பந்தங்களிலிருக்கும் அக்கறை

இதன் விபரங்கள் குறிப்பு 25 மற்றும் 34 இல் தரப்பட்டுள்ளன. பணிப்பாளர்களுக்கு ஒப்பந்தங்களில் நேரடியான அல்லது மறைமுகமான அக்ககறைகள் ஏதும் கிடையாது.

## 13. கணக்காய்வாளர்களுக்கானக் கொடுப்பனவுகள்.

2015 டிசம்பர் 31ஆம் திகதியன்று முடிவுற்ற 09 மாதகாலத்திற்கு கணக்காய்வாளர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை இன்னும் பூரணப்படுத்தப்படவில்லை. கடந்த ஆண்டின் அடிப்படையில் கணக்காய்வாளர்களுக்கு செலுத்த வேண்டிய முன்ஏற்பாட்டுத் தொகையாக ரூ. 464,341 செலுத்தப்பட்டுள்ளது.

## 14. நன்கொடைகள்

2015 டிசம்பர் 31ஆம் திகதியன்று முடிவுற்ற 09 மாதகாலத்திற்கு நிறுவனத்தால் எவ்வித நன்கொடைகளும் செலுத்தப்படவில்லை.

## 15. பெருநிறுவன மேலாண்மை

குறிக்கோள்களையும் இலக்குகளையும் எய்துதல் தொடர்பிலும் முகாமைத்துவம் சார்ந்ததுமான அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்குகின்ற கூட்டிணைப்பு ஆளுகையினை நிறுவனம் கடைபிடிக்கின்றது. நிறுவனத்தின் கூட்டிணைப்பு மேலாண்மையின் உருவரைச்சட்டத்தின் விபரங்கள் ஆண்டறிக்கையின் பக்கம் 26 தொடக்கம் 29 வரை தரப்பட்டுள்ளன.

## 16. கணக்காய்வுக் குழு

பின்வரும் சபை உறுப்பினர்கள் 2015 டிசம்பர் 31ஆம் திகதியன்று முடிவுற்ற 09 மாதகாலத்திற்கு கணக்காய்வுக் குழு சார்பில் பணியாற்றியிருந்தனர்.

| | |
|---|---|
| திரு. ஜோசப் மிலிசியஸ் சூசைதாசன் | தலைவர் |
| திரு. பிரியன்த ஜயமஹா | சபை அங்கத்தவர் |
| திரு. பிரயங்கர திசாநாயக்க | சபை அங்கத்தவர் |

மேற்கூறிய அங்கத்தவர்கள் கணக்காய்வுக் குழுவில் 2016 ஏப்ரல் 28 ஆம் திகதி அமுலாகும் விதத்தில் கீழுள்ளவர்களுக்கு பதிலாக நியமனம் பெற்றனர்.

திருமதி. திஹானி எஸ்.ஏ. மெதிவ் - தலைவர்
திரு. பிரியன்த ஜயமஹா - சபை அங்கத்தவர்
திரு. எம். சஸ்மின் மன்சூர் - சபை அங்கத்தவர்
திரு. நிஷான் பர்ணான்டோ - சபை அங்கத்தவர்.

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை ஆண்டறிக்கை பக்கம் 50 இல் தரப்பட்டுள்ளது

## 17. ஊதியக் குழு

2015 டிசம்பர் 31ஆம் திகதியன்று முடிவுற்ற காலப்பகுதியில் நிறுவனத்தின் ஊதியங்களை வரையறுக்கும் குழுவில் கீழுள்ளவர்கள் அங்கம் வகித்தனர்.

| | |
|---|---|
| திரு. ஜனாபிரத் எஸ். பர்ணான்டோ | தலைவர் |
| திரு. ஆனந்த டி சில்வா | சபை அங்கத்தவர் |
| திரு. அதுல சேனாநாயக்க | சபை அங்கத்தவர் |

கீழுள்ள அங்கத்தவர்கள் ஊதியக் குழுவின் உறுப்பினர்களாக 2016 ஏப்ரல் 28 தொடக்கம் மேற்கூறிய உறுப்பினர்களுக்கு பதிலாக நியமிக்கப்பட்டனர்.

| | |
|---|---|
| திரு. அதுல சேனாநாயக்க | தலைவர் |
| திருமதி. பத்மா மஹாராஜா | சபை அங்கத்தவர் |
| திரு. தினோக் கொலம்பகே | சபை அங்கத்தவர் |
| திரு. தினுக சமரசிங்ஹ | சபை அங்கத்தவர் |

## 18. மூலதன விரிவாக்கம்

பொருள்சார மூலதன கடப்பாடுகள் நிதிக்கூற்றின் குறிப்பு 31 இல் தரப்பட்டுள்ளது.

# நிறுவனத்தின் அலுவல்கள் தொடர்பில் பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

## 19. சொத்து, பொறி, உபகரணங்கள்

நிறுவனத்தின் சொத்து, பொறி, உபகரணங்கள் நிதிக்கூற்றின் குறிப்பு 12 இல் தரப்பட்டுள்ளது.

## 20. எடுத்துரைக்கப்பட்ட மூலதனம்

2015 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கம்பனியின் எடுத்துரைக்கப்பட்ட மொத்த மூலதனம் 20,466,456,850 ரூபாவாகக் காணப்பட்டது. இதில் 2,046,645,685 சாதாரன பங்குகளும் அடங்குகின்றன.

## 21. நிதி அறிக்கையிடலில் பணிப்பாளர்களின் பொறுப்புக்கள்

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் தங்கள் பொறுப்புடைமைகளைப் பணிப்பாளர்கள் நன்கு உணர்கின்றனர். அதற்கிணங்க ஏற்புடைத்தான அனைத்து கணக்கீட்டு நியமங்களுடனும் இணங்கியொழுகும் வகையில் செம்மையான நிதி சார்ந்த பதிவேடுகள் பேணப்படுவதை உறுதிப்படுத்தும் தங்களின் பொறுப்பை ஏற்றங்கீகரிக்கின்றனர். அவ்வாறு தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுகள் 2015 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் கம்பனியின் செயற்பாடுகளின் உண்மையான பிரதிபலிப்பாகும். நிதிக்கூற்றுகள் ஆண்டு பொதுக்கூட்டத்தில் முன்வைக்கப்படுகின்றன.

## 22. நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்

தங்கள் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை அரசாங்கத்திற்கும் ஏனைய ஒழுங்குபடுத்தும் நிறுவனங்களுக்கும் ஊழியர்கள் தொடர்பிலும் வருமதியானஎல்லா நியதிச்சட்டக் கொடுப்பனவுகளும் உரிய காலத்தில் செலுத்தப்பட்டுள்ளன அல்லது அவற்றிற்குஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

## 23. ஐந்தொகைக் கணக்குத் திகதிக்குப் பின்னர் நிகழும் சம்பவங்கள்

இந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் தவிர ஏதேனும் கற்புலத்தாக்கங்களைக் கொண்டிருக்கலாம் எனும் சம்பவங்கள் ஏதும் ஐந்தொகைக் கணக்குத் திகதிக்குப் பின்னர் நிகழவில்லை.

## 24. கணக்காய்வாளர்கள்.

19வது சட்டத்திருத்தத்தின் பின்னர் கணக்காய்வாளர் நாயகமே தொடர்ந்தும் நிறுவனத்தின் கணக்காய்வாளராக உள்ளார்.

## 25. வருடாந்த பொதுக் கூட்டம்

வருடாந்த பொதுக்கூட்டம் பற்றி அறிவித்தல் ஆண்டறிக்கையின் பக்கம் 83 இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபை சார்பில்
ஹோட்டல் டிவலப்பர்ஸ் (லங்கா) பிஎல்சி

**திரு. தனுக ரஞ்சித் சமரசிங்ஹ**
பணிப்பாளர்

**திரு. தினோக் கொலம்பகே**
பணிப்பாளர்

S S P கோப்ரேட் சேர்விஸ் (பிறை) லிமிறெற்
31 மே 2016
கொழும்பு

# நிதி அறிக்கையிடலில் பணிப்பாளர்களின் பொறுப்புக்கள்

2015 டிசெம்பர் 31 இல் நிறைவடைந்த நிதியாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பின்வரும் கூற்றில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றன. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கொழும்பு பங்கு சந்தை நியதிகளுக்கும் இணங்க நிதிக்

கூற்றுக்கள் தயாரிக்கப்படுவது மீதான கணக்காய்வாளர்களின் பொறுப்புக்கள். கணக்காய்வாளர்களின் அறிக்கையில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ளன.

குறித்த நிதி ஆண்டிற்கான கம்பனியின் இலாப நட்டத்தின் உண்மையான நியாயமான கண்ணோட்டத்தைப்பிரதிபலிக்கின்றவொரு வருமானக் கூற்று, மூலப்பொருட்களின் வெளிச்செல்கை ஏதுமிருப்பின், அந்த மூலப்பொருட்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளனவா என்றும், அந்த மூலப்பொருட்கள் விபரிக்கப்பட்டுள்ளனவா என்றும், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனவா என்றும், தொடர்ச்சியானவொரு விதத்தில் அந்தக் கணக்கீட்டுக் கொள்கைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளனவா என்றும், ஏற்புடைய, சகல கணக்கீட்டு நியமங்களும் உரிய விதத்தில் பின்பற்றப் பட்டுள்ளனவா என்றும், மேற்கொள்ளப்பட்டுள்ள மதிப்பீடுகளும் தீர்வுகளும் நியாயமான மதிநுட்பமுள்ளனவா என்றும், உத்தரவாதப்படுத்தத் தேவைப்படுகின்றனர், தனது இயக்கச் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளுவதற்கு கம்பனி போதிய வளங்களைக் கொண்டுள்ளதா என்பதை உத்தரவாதப்படுத்த வேண்டும் என்பதுடன்,

கம்பனியின் சொத்துக்களைப் பாதுகாத்துப் பேணுவதற்கும், மற்றும் இது தொடர்பில், மோசடிகளையும் ஏனைய முறைகேடுகளையும் கண்டறிந்து அவற்றைத் தடுப்பதற்கான நோக்கத்துடன் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைளைத் தாபிப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பதும் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.

தமது அறிவுக்கு எட்டிய வகையில் ஐந்ததாகைக் கணக்குத் திகதிக்கு கம்பனியினால் செலுத்தப்பட வேண்டிய சகல நியதிச் சட்ட முறைக் கொடுப்பனவுகளும் செலுத்தித் தீர்க்கப் பட்டுள்ளன அல்லது பொருத்தமானவிடத்து தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

கணக்காய்வாளர்கள் நிறுவனத்தின் நிதி மற்றும் ஏனைய பதிவுகளை ஆராய்ந்துள்ளார்கள். அவர்களின் கூற்று சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கையில் தரப்பட்டுள்ளது.

கணக்காய்விற்காக நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர்ச் சபையால் 2016 மார்ச் 19 ஆம் திகதி ஒப்புதல் வழங்கப்பட்டதுடன், ஆண்டறிக்கையும் கணக்குக் கூற்றுகளும் 2016 மே 31ம் திகதி பிரசுரிக்க அங்கீகரிக்கப்பட்டன,

சபை சார்பில்,

**திரு. தனுக ரஞ்சித் சமரசிங்க**
பணிப்பாளர்.

**திரு. தனுக் கொலம்பகே**
பணிப்பாளர்.

31 மே 2016
கொழும்பு

# கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

**கணக்காய்வுக் குழு சாசனம்**

கணக்காய்வுக் குழு நிறுவனத்தின் நிதி விவகாரங்கள் தொடர்பான ஏதேனும் விடயங்களை ஆராய்வதற்கும் ஆய்வுகள் மற்றும் நிதி அறிக்கைகளை கண்காணிக்கவும் கணக்காய்வுக் குழு சாசன ஆணைகள் அடிப்படையில் பணிப்பாளர் சபையால் நியமனம் செய்யப்பட்ட ஒரு உபகுழுவாக செயல்படும்.

**கணக்காய்வுக் குழுவின் செயற்பாடுகள்**

பணிப்பாளர் சபையினால் சபை கணக்காய்வுக் குழுவானது நியமிக்கப்பட்டுள்ளதுடன் இவர்கள் பணிப்பாளர்ச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள விசாரணை நியதிகளுக்கு அமைவாக நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். கீழுள்ள அறிக்கை நிதியிடலை வெளிப்படுத்துவதற்கு உதவும் திறனான குழுவாக கணக்காய்வுக் குழு பணிப்பாளர் சபைக்கு பங்களிப்பு செய்யும்.

- கணக்காய்வு அறிக்கைகளை ஆய்வு செய்தல்
- உள்ளகக் கணக்காய்வின் நியமனத்தினை அனுமதித்தல் அல்லது மறுதளித்தல்
- வருடாந்த சுயாதீன அல்லது நிறுவனக் கணக்கு கூற்றை சமர்ப்பித்தல்
- கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டுக் கொள்கையில் சிபாரிசு செய்யப்படும் சகல மாற்றங்களையும் ஆய்வு செய்தல்
- நிறுவனத்தில் நடைமுறைத் தன்மைகளை இனங்காணல்.
- பணிப்பாளர் சபைத் தீர்மானங்களுக்கு பின்பற்றுதல்.

**கணக்காய்வுக் குழு அங்கத்தவர்கள**

03 சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்றப் பணிப்பாளர்கள் மீளாய்வு ஆண்டு காலப் பகுதியில் கணக்காய்வுக் குழு சார்பில் பணியாற்றியிருந்தனர்.

- திரு. ஜோசப் சூசைதாசன் - குழு தவிசாளர் (சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்)
- திரு. பிரயங்கர திசாநாயக்க - சபை அங்கத்தவர் (சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்)
- திரு. பிரியன்த ஜயமஹா - சபை அங்கத்தவர் (நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர், திறைசேரி பிரதிநிதி)

திரு. ஜோசப் சூசைதாசன் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஆடைத் தொழிற்துறை மற்றும் சுற்றுலாத்துறைகளின் சிரேஷ்ட முகாமைத்துவத்தில் 25 வருடங்கள் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். தென் கிழக்காசியாவில் 1998 ஆம் ஆண்டு சிறந்த நிறைவேற்றுனராக Federated Inc, USA இனால் கௌரவிக்கப்பட்டார். இங்கிலாந்து முகாமைத்துவ பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்தவர் ஆவார். அத்துடன் பல உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு ஆலோசகராக பணியாற்றிய அனுபவங்கள் கொண்டவர்.

திரு. பிரங்கர திசாநாயக்க பல வருடங்கள் ஆடைத் தொழிற்துறையில் சேவை புரிந்துள்ளதுடன், 15 வருட அனுபவமும் தொழில் நுணுக்கமும் சர்வதேச உணவு விநியோக சந்தைப்படுத்தலில் நிறைய அனுபவம் பெற்றுள்ளார். ஐரோப்பிய ஆலோசனை மண்டபத்தின் அங்கத்தவர். முகாமைத்துவத்தில் டிப்ளோமா பட்டமும், அவுஸ்திரேலிய Chartered Member of Logistics and Transportation இன் அங்கத்தவரும் ஆவார்.

திரு. ஜே.எம்.யூ.பி ஜயமஹா நிதியியல் மற்றும் கணக்கியல் துறையிலும், இலங்கை அரசாங்க கணக்கியல் சேவையிலும் ஏறக்குறைய 25 வருடங்கள் அனுபவமுள்ள அங்கத்தவர். முக்கிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் சேவைப் புரிந்துள்ளார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி கற்கையில் மாஸ்டர்ஸ் பட்டம் பெற்றுள்ளார். ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கணக்கியல் டிப்ளோமா பட்டமும், நிதி முகாமைத்தவ பட்டமும் பெற்றுள்ளார். இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் நிதி முகாமைத்துவ சான்றிதழை (SLIDA) Licentiate Certificate) பெற்றுள்ளார்.

2016 ஏப்ரல் 08 ஆம் திகதி நியமிக்கப்பட்ட புதிய பணிப்பாளர் சபையின் பின்னர் கீழுள்ள அங்கத்தவர்கள் 2016 ஏப்ரல் 28ம் திகதி புதிய கணக்காய்வு குழுவிற்கு நியமிக்கப்பட்டனர்.

- திருமதி. திஹானி எஸ்.ஏ. மெதிவ் — தலைவர்
- திரு. ஜே.எம்.யூ.பி. ஜயமஹா — அங்கத்தவர்
- திரு. எம். சஸ்மின் மன்சூர் — அங்கத்தவர்

பணிப்பாளர் சபையில் நிபுணத்துவ தகைமை பெற்ற கணக்காளரின் வெற்றிடம் காணப்பட்டமையாளர் சபையானது பட்டயக்கணக்காளர் நிறுவகம் சார்பாக நியமி ஒருவரை பணிப்பாளர் சபை சார்பில் பணியாற்ற கோரிக்கை விடுத்தது. அதற்கமைய பட்டயக்கணக்காளர் நிறுவக அங்கத்தவரான

திரு. நிசான் பர்ணான்டோ கணக்காளர் சபையில் பணியாற்ற பரிந்துரைக்கப்பட்டார்.

திருமதி. தெஹனி மத்தேயு அமெரிக்காவின் Columbia University, New York, பல்கலைக்கழகத்தின் Bachelor of Arts in Political Science பட்டம் பெற்றவர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் Master of Science in Applied Psychology பட்டம் பெற்றுள்ளார். மொரட்டுவை Expo 80 Foundation (Tyronne Fernando Foundation) பிரதான நம்பிக்கையாளரான இவர் பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவம் கொண்டவர்.

திரு. சஸ்மின் மன்சூர், அமெரிக்காவின் Arizona State பல்கலைக்கழகத்தில் Bachelor's Degree in Science, majoring in Supply Chain Management பட்டம் பெற்றவர். அவரது கற்கை காலத்தின் போது சிறந்த பெறுபேறுகளுக்காக புலமைபரிசில் வழங்கப்பட்ட கௌரவத்திற்குரிய Dean's List சேர்க்கப்பட்டார்.

### கணக்காய்வுக்குழுவின் சந்திப்புக்கள்

2015 டிசெம்பர் 31 இல் நிறைவடைந்த 09 மாத மீளாய்வு காலத்தில் கணக்காய்வுக் குழு 04 சந்திப்புகளை நிகழ்த்தியது. சபை ஆலோசகர், பிரதான செயற்பாட்டு அதிகாரி, பிரதான நிதி அலுவலகர், ஹில்டன் ஹோட்டல் டிவலப்பர்ஸ் கணக்காளர், ஹில்டன் கொழும்பு பொது முகாமையாளர் மற்றும் நிதிப் பணிப்பாளர் Ernst & Young உள்ளக கணக்காளர்கள் எஸ்.ஜேஎம்.எஸ் வெளிவாரிக் கணக்காளர்கள். ஹில்டன் கொழும்பு முகாமைத்துவ கணக்காளர்கள் கணக்காய்வுக் குழு கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை பற்றிய மீளாய்வு

கணக்காய்வுக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்திற்கு ஏற்ப உள்ளக கணக்காய்வு Ernst & Young மேற்கொண்டது. ஊழியர்களின் பொறுப்புக்கள் குறித்து நிறுவனம் கொண்டுள்ள உள்ளக கடப்பாடுகளை நிறுவலும், அதற்கான சுயாதீன மீளாய்வை மேற்கொள்வதுமே இதன் நோக்கமாகும். உள்ளக கணக்காய்வார்களின் கண்டறிதல்களின் உள்ளடக்கம் முகாமைத்துவத்துடன் கலந்துரையாடப்பட்டதுடன், அதற்கான நடவடிக்கைகள் உரியகாலத்தில் எடுக்கப்படும்.

### காலாண்டு நிதி நிலை அறிக்கைகள் விமர்சனம்

சபை நிறுவனத்தின் காலாண்டு நிதி நிலை அறிக்கைகள் கொழும்பு பங்கு பரிவர்த்தனைக்கு (CSE) வெளியிட முன் பரிசீலனை செய்து பரிந்துரைத்துள்ளது.

### IFRS / SLFRS ஒழுங்கு விதிகளுக்கு அமைவான தத்தெடுப்பு

2015 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த நிதியாண்டு வரை, அனைத்து காலங்களில்,இலங்கையின் கணக்கியல் தரநிலைகள் ஏற்ப, நிதி அறிக்கைகளை தயார் படுத்தப்படுகின்றன.

சர்வதேச நிதி அறிக்கை தரநிலைகள் மூலம் இலங்கையின் கணக்கியல் தரநிலைகள் (ILFRSs) குவிதல் தொடர்ந்து, அனைத்து இருக்கும் / புதிய இலங்கை கணக்கியல் தரநிலைகள் SLFRS ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக மற்றும் LKAS என செய்யப்பட்டு முதல் அமலாகின்றன. (இந்த நிதி நிலை அறிக்கைகளில் 'SLFRS ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக" என குறிப்பிடப்படுகிறது) நிறுவனத்தின் கூறினார் / திருத்தியமைக்கப்பட்ட இலங்கை கணக்கியல் தரநிலைகள் (LKAS / SLFRS ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக) தேவைகள் இணங்க ஏப்ரல் 2012 அன்று அல்லது 1ற்குபின்னர் துவங்கும் நிதி நிலைக்காலங்கள், அது கட்டாயமாக இருந்தது. அங்கீகாரம், அளவீடு மற்றும் முறையாக டிசெம்பர் 31, 2015 ஆம் மாற்றம் மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கைகளில் நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகளை உள்ள பரிமாற்றங்கள் மற்றும் இருப்புநிலை வெளிப்படுத்தல் அடிப்படைக்கு புதிய / மறுசீரமைக்கப்பட்ட கணக்கியல் கட்டமைப்பு தேவையாக திருத்தங்களை தத்தெடுப்பு நிறுவனத்தின் நிதி அறிக்கைகள் மீதான புதிய / மறுசீரமைக்கப்பட்ட கணக்கியல் தரநிலைகளில் தத்தெடுக்கடுபம். டிசெம்பர் 31, 2015 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான நிறுவனத்தின் கணக்காய்வு கணக்காய்வு ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்டது.

### நிதி அறிக்கையிடல் ஆண்டினை ஏப்ரல் 01 இலிருந்து மார்ச் 31 இற்கு மாற்றல்

2015 டிசம்பர் 31ஆம் திகதியன்று முடிவுற்ற 09 மாதகாலத்திற்கான தற்போதைய கலண்டர் ஆண்டில் நிதியாண்டானது ஏப்ரல் 01 இலிருந்து மார்ச் 31 இற்கு 2015 ஏப்ரல் 01 இற் அமுலுக்கு வரும் வகையில் மாற்றம் செய்யப்பட்டது.

### வெளிவாரி கணக்காளர்களின் மாற்றம்

2015 டிசம்பர் 31ஆம் திகதியன்று முடிவுற்ற 09 மாதகாலத்திற்கு 19வது சட்டத்திருத்தத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகமே நிறுவனத்தின் வெளிவாரி கணக்காய்வாளராக உள்ளார்.

### 2015 டிசம்பர் 31ஆம் திகதியன்று முடிவுற்ற 09 மாதகாலத்திற்கு வரையப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு

2015 டிசம்பர் 31ஆம் திகதியன்று முடிவுற்ற 09 மாதகால வரைவு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள கணக்காய்வு குழுவால் நிறுவனத்தின் உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வாரள்கள் மற்றும் ஹில்டன் ஹோட்டல் கொழுப்பு முகாமைத்துவ கணக்காய்வாரள்களுடன் இணைந்து மீளாய்வு செய்யப்பட்டன. கணக்காய்வு குழுவிற்கு தேவையான தகவல்கள் பிரதான நிதி அலுவலகர் வழங்கப்பட்டதுடன் நிதிக்கூற்றுக்கள் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்ட இலங்கை கணக்கியல்

# கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

தரங்கள் மற்றும் தகவல்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் நிறுவனத்தின் நியாய பெறுமதி மீளாய்வு திகதியில் உள்ளவாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**முடிவுரை**

தணிக்கை குழு போதுமான கட்டுப்பாடுகள் பாதுகாப்பான பாதுகாப்பு நிறுவனத்தின் சொத்துக்களை மற்றும் நிதி நிலைமை மற்றும் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் வெளியிடப்படுகின்றன.

2016 ஏப்ரல் 01 ஆம் திகதி வெளியேறிய முன்னால் கணக்காய்வுக் குழுவின் சார்பில் இவ்வறிக்கையினை சமர்ப்பிக்கின்றேன்.



**திருமதி. திஹானி எஸ்.ஏ. மெதிவ்**
கணக்காய்வுக் குழு தலைவர்

31 மே 2016

# நிதிக்கூற்றுக்கள்

# சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. : ஏம்ஈடீ/சீ/எச்டீஎல்/எவ்ஏ/6/15/40

ඔබේ අංකය / உமது இல. / Your No. :

දිනය / திகதி / Date : 2016 ஏப்ரல் 19

ஹோட்டல் டெவலபேர்ஸ் (லங்கா) பிஎல்சீ கம்பனியின் பங்குதாரர்களுக்கு

**ஹோட்டல் டெவலபேர்ஸ் (லங்கா) பிஎல்சீ இன் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஒன்பது மாத காலத்திற்கான நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

ஹோட்டல் டெவலபேர்ஸ் (லங்கா) பிஎல்சீ இன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஒன்பது மாத காலத்திற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாகவுள்ளது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிச்சயிக்கின்ற அவ்வாறான உள்ளகக் கட்டுப்பாடு இப் பொறுப்பில் உள்ளடக்குகின்றது.

### கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

# சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை

AGDSL

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. சபையால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**அபிப்பிராயம்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஒன்பது மாத காலத்திற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**கருத்திலெடுக்க வேண்டிய விடயம்**

2017 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்த்துள்ள மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீள வைப்பதற்கு அல்லது நவீனப்படுத்தப்படவுள்ள முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டு கம்பனியினால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வருகின்ற சொத்துக்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 12.3 இல் விபரிக்கப்பட்டுள்ள நியாயப் பெறுமதியின் அங்கீகாரம் மீது நான் கவனயீர்ப்புச் செய்கின்றேன். இவ்விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படவில்லை.

**ஏனைய சட்டரீதியான மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாட்டு அறிக்கை**

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163 (2) ஆம் பிரிவில் வேண்டப்பட்டதன் பிரகாரம், நான் பின்வருவனவற்றை குறிப்பிடுகின்றேன்.:

அ. அபிப்பிராயத்திற்கான அடிப்படை மற்றும் கணக்காய்விற்கான நோக்கெல்லையும் வரையறைகளும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

ஆ. - கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்களையும் விளங்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் என்பதுடன் இது வரையான எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுகின்றவாறு, கம்பனியினால் பொருத்தமான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்பட்டன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாட்டுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்கியிருந்தன என்பதும்

எனது அபிப்பராயமாகும்.

**பாராளுமன்றத்துக்கான அறிக்கை**

அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்திற்கான என்னுடைய அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

ஒப்பம்: எச். எம். காமினி விஜயசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# ஒன்றுதிரட்டிய வருமானக்கூற்று

2015 டிசெம்பர் 31ல் முடிவடைந்த ஒன்பது மாதகாலத்திற்கான

| | குறிப்பு | 09 மாதங்கள் 31.12.2015 ரூ. '000 | 12 மாதங்கள் 2014/2015 ரூ. '000 |
|---|---|---|---|
| வருமானம் | 5 | **1,571,704** | 2,381,930 |
| விற்பனை செலவினம் | | **(280,647)** | (455,737) |
| மொத்த இலாபம் | | **1,291,057** | 1,926,193 |
| முதலீட்டு வருமானம் | 6 | **41,957** | 126,273 |
| ஏனைய வருமானம் மற்றும் இழப்புக்கள் | 7 | **40,750** | 37,452 |
| நிர்வாக மற்றும் பொதுச் செலவினம் | | **(1,081,220)** | (1,489,628) |
| ஏனைய செலவினங்கள் | | **(200,213)** | (286,964) |
| நிதிச் செலவினம் | 8 | **(617)** | (37,632) |
| வரிக்கு முந்திய இலாபம் | 9 | **91,713** | 275,695 |
| வருமான வரி செலவினம் | 10 | **(65,104)** | (112,175) |
| ஆண்டிற்கான இலாபம் | | **26,609** | 163,519 |
| | | | |
| **ஏனைய முழுமையான வருமானம்** | | | |
| ஊழியர் நலத்திட்டங்களின் ஆதாயம்/ (இழப்புகள்) | | **(9,689)** | 19,207 |
| | | | |
| காலத்திற்கான ஏனைய முழுமையான வருமானம்/(செலவினம்) வரிக்கமைய | | **(9,689)** | 19,207 |
| **காலத்திற்கான மொத்த முழுமையான வருமானம்/ (செலவினம்)** | | **16,920** | 182,726 |
| | | | |
| பங்கொன்றின் மீதான வருவாய் - அடிப்படை | 11 | **0.01** | 0.08 |

1 முதல் 35 வரையான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதி அறிக்கையின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகும்

# நிதியியல் நிலைமைக் கூற்று

2015 டிசெம்பர் 31ல் உள்ளவாறான

| | குறிப்பு | 31.12.2015<br>ரூ. '000 | 31.03.2015<br>ரூ. '000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையற்றச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 12 | **5,038,545** | 5,186,747 |
| குத்தகைக் காணிகள் | 13 | **6,751,945** | 6,804,975 |
| செயற்பாட்டிலுள்ள மூலதனம் | | **1,313,612** | 522,006 |
| | | **13,104,101** | 12,513,728 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பொருட்பதிவேடுகள் | 14 | **38,110** | 38,700 |
| வர்த்தக மற்றும் ஏனைய வருவாய் | 15 | **150,235** | 96,289 |
| தொடர்புடைய கட்சிகளில் இருந்து பெறப்பட வேண்டியவை | 16 | **163** | 2,091 |
| ஏனையச் சொத்துக்கள் | 17 | **386,311** | 402,811 |
| நடைமுறை நிதிசார் சொத்துக்கள் | 18 | **877,867** | 1,178,992 |
| காசும் வங்கி மிகுதிகளும் | 19 | **215,214** | 181,564 |
| | | **1,667,899** | 1,900,447 |
| **மொத்த சொத்துக்கள்** | | **14,772,000** | 14,414,174 |
| **ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | | |
| **பங்குதாரர்களுக்கானப் பங்குடைமை** | | | |
| எடுத்துரைக்கப்பட்ட மூலதனம் | 20 | **20,466,456** | 20,466,457 |
| ஒதுக்கங்கள் | 21 | **117,421** | 223,381 |
| ஒன்றுதிரட்டிய நட்டம் | | **(6,946,927)** | (7,069,806) |
| **மொத்த ஒப்புரவு** | | **13,636,951** | 13,620,031 |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வூதிய நலக் கொடுப்பனவுகள் | 22 | **104,524** | 90,192 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | 23 | **478,724** | 442,513 |
| | | **583,248** | 532,705 |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| வணிக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 24 | **397,145** | 197,790 |
| தொடர்புடைய கட்சிகளில் இருந்து பெறப்பட வேண்டியவை | 25 | **15,865** | 12,219 |
| வருமான வரி செலுத்துகை | 26 | **12,377** | 22,220 |
| வங்கி மேலதிக பற்று | | **126,414** | 29,207 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்பு** | | **551,801** | 261,437 |
| **மொத்தப் பொறுப்பு** | | **1,135,049** | 794,142 |
| **மொத்த ஒப்புரவும் பெறுப்பும்.** | | **14,772,000** | 14,414,174 |
| **பங்கொன்றின் நிகரச் சொத்து பெறுமதி** | | **7/-** | 7/- |

இந்த நிதிக் கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளை அனுசாரித்துக் காணப்படுகின்றன.

**சுதர்ஷன் ஶ்ரீ ரயான்**

நிதித் தலைமை அதிகாரி

இந்த நதிக் கூற்றுக்களைத் தயாரித்து வழங்குவது பணிப்பாளர்கள்ச் சபையின் பொறுப்பாகும். பணிப்பாளர்கள் சபைக்காகவும் சபையின் சார்பாகவும் இந்த நிதிக் கூற்றுக்கள் அங்கீகரிக்கப்பட்டு 2016 மார்ச் 29ம் திகதி கையொப்பமிடப்படுகின்றன.

**ஜோசப் எம். சூசைநாதன்**

பணிப்பாளர்

**∴ ஜே.எம்.யூ.பி. ஜயமஹா**

பணிப்பாளர்

1 முதல் 35 வரையான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதி அறிக்கையின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகும்

# பங்குமூலதன மாற்றங்களின் கூற்று

2015 டிசெம்பர் 31ல் முடிவடைந்த ஒன்பது மாதகாலத்திற்கான

| | பங்குகளின் ஒதுக்கீடு ரூ. '000 | கூறப்பட்ட மூலதனம் ரூ. '000 | தளபாடங்கள், பொருத்துகைகள், உபகரணங்கள் பதிலீட்டு ஒதுக்கங்கள் ரூ. '000 | திரண்ட நட்டம் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|---|
| **2014 மார்ச் 31 இல் நிலுவை** | 2,350,300 | 18,116,157 | 301,378 | (7,330,529) | 13,437,306 |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | - | 163,519 | 163,519 |
| | | | | | |
| **ஏனைய ஏற்புடைய வருமானம்** | | | | | |
| ஊழியர் நலத்திட்டங்களின் ஆதாயம்/ (இழப்புகள்) | - | - | - | 19,207 | 19,207 |
| தளபாடங்கள், பொருந்துகைகள் மற்றும் உபகரணம் மாற்றல் | - | - | (186,007) | 186,007 | - |
| தளபாடங்கள், பொருந்துகைகள் மற்றும் உபகரண இடம்மாற்றமத்திற்கு ஒதுக்கியது | - | - | 108,010 | (108,010) | - |
| ஒதுக்கிய பங்கு | (2,350,300) | 2,350,300 | - | - | - |
| **2015 மார்ச் 31ல் உள்ளவாறான மீதி** | - | 20,466,457 | 223,381 | (7,069,806) | 13,620,032 |
| | | | | | |
| காலப்பகுதிற்கான இலாபம் | - | - | - | 26,609 | 26,609 |
| | | | | | |
| **ஏனைய ஏற்புடைய வருமானம்** | | | | | |
| ஊழியர் நலத்திட்டங்களின் ஆதாயம்.'. (இழப்புகள்) | - | - | - | (9,689) | (9,689) |
| தளபாடங்கள், பொருந்துகைகள் மற்றும் உபகரணம் மாற்றல் | - | - | (188,139) | 188,139 | - |
| தளபாடங்கள், பொருந்துகைகள் மற்றும் உபகரண இடம்மாற்றமத்திற்கு ஒதுக்கியது | - | - | 82,179 | (82,179) | - |
| **2015 டிசெம்பர் 31ல் உள்ளவாறான மீதி** | **-** | **20,466,457** | **117,421** | **(6,946,927)** | **13,636,952** |

1 முதல் 35 வரையான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதி அறிக்கையின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகும்

# காசுப்பாய்ச்சல் கூற்று

2015 டிசெம்பர் 31ல் முடிவடைந்த ஒன்பது மாதகாலத்திற்கான

| | 31.12.2015<br>ரூ. '000 | 2014/2015<br>ரூ. '000 |
|---|---|---|
| | | |
| வருமான வரிக்கு முன்னரான இலாபம் | **91,713** | 275,695 |
| | | |
| **பின்வருவனவற்றுக்கான சீராக்கம்** | | |
| தேய்மானம்/ கழிவு | **249,682** | 337,297 |
| நலத்திட்டங்களுக்கான ஏற்பாடு | **12,184** | 19,205 |
| வட்டிச் செலவினம் | **617** | 37,632 |
| ஆதனம், இயந்திரம், உபகரணம் என்பவற்றின் விறபனையால் பெறப்பட்ட காசு | **(6,756)** | (4,731) |
| வட்டி வருமானம் | **(41,957)** | (126,273) |
| தொழிற்படு மூலதன மாற்றத்திற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் | **305,484** | 538,825 |
| | | |
| பொருட் பதிவேடுகளிலுள்ள (அதிகரிப்பு) / குறைவு | **590** | 5,362 |
| பெறுதிகளிலுள்ள (அதிகரிப்பு) / குறைவு | **(53,946)** | 4,453 |
| ஏனைய தொர்டர்புடைய கட்சிகளிடமிருந்தான வருமதியின் (அதிகரிப்பு) / குறைவு | **5,574** | (405) |
| ஏனைய சொத்துகளின் (அதிகரிப்பு) / குறைவு | **16,500** | (294,572) |
| வர்த்தக மற்றும் ஏனைய வருவாய்களிலுள்ள (அதிகரிப்பு) / குறைவு (குறிப்பு 27.3) | **117,910** | (82,771) |
| செயற்பாடுகள் மூலம் திரட்டிய பணம் | **392,111** | 170,891 |
| செலுத்தி வரி | **(38,737)** | (50,313) |
| செலுத்தியப் பணிக்கொடை | **(7,541)** | (15,986) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட நிகர காசு | **345,833** | 104,593 |
| | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலான காசுப்பாய்ச்சல்** | | |
| ஆதனம், இயந்திரம், உபகரணங்களின் கொள்வனவு | **(48,450)** | (128,102) |
| மூலதன செயற்பாடுகளிலான முதலீடு | **(710,161)** | (288,829) |
| ஆதனம், இயந்திரம், உபகரணம் என்பவற்றின் விறபனையால் பெறப்பட்டவை | **6,756** | 4,731 |
| நிதிச் சொத்துக்களில் முதலீடுகள் (குறிப்பு 27.4) | **282,906** | 858,077 |
| பெறப்பட்ட வட்டி வருமானம் (27.4) | **60,177** | 250,882 |
| முதலீடு செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட நிகர பணம் | **(408,773)** | 696,759 |
| | | |
| **நிதியியல் நடவடிக்கைகளிலான காசுப்பாய்ச்சல்** | | |
| வட்டியடங்கிய கடன்களின் செலுத்துகை | **(617)** | (37,632) |
| நிதிச் செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட நிகர பணம் | **(617)** | (37,632) |
| | | |
| காசும் காசுக்கு சமனானவைகளிலும் ஏற்பட்ட நிகர அதிகரிப்பு.'.குறைவு | **(63,557)** | 763,720 |
| ஆண்டின் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமனானவைகளும் (குறிப்பு 27.1) | **152,357** | (611,363) |
| ஆண்டின் இறுதியில் காசும் காசுக்குச் சமனானவைகளும் (குறிப்பு 27.1) | **88,800** | 152,357 |

1 முதல் 35 வரையான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதி அறிக்கையின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகும்

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2015 டிசெம்பர் 31ல் முடிவடைந்த ஒன்பது மாதகாலத்திற்கான

## 1. பெருநிறுவனத் தகவல்கள்

### 1.1 பொது

ஹோட்டல் டிவலப்பர்ஸ் (லங்கா) பி.எல்.சி வரையறுத்த பொறுப்புள்ள கூட்டிணைக்கப்பட்ட இலங்கையிலுள்ள ஒரு நிறுவனமாகும். நிறுவனத்தின் பதிவுபெற்ற அலுவலகம் இல.02 சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 அமைந்துள்ளது

1.2 முக்கிய நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

ஹோட்டல் டிவலப்பர்ஸ் (லங்கா) பி.எல்.சி ஹில்டன் கொழும்பிற்கு உட்டபட்ட சொத்துக்களை முகாமைத்துவம் செய்து விருந்தோம்பல்துறையில் ஈடுபட்டு வருகின்றது

1.3 நிதி அறிக்கைகள் வழங்கலுக்கான திகதியின் அங்கீகாரம்

முடிவடைந்த நிதியாண்டிற்கான ஹோட்டல் டிவலப்பர்ஸ் (லங்கா) பி.எல்.சி நிறுவனத்தின் நிதி அறிக்கைகளுக்கு 2016 மார்ச் 29 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டது

## 2. பொதுக் கொள்கைகள்

### 2.1 இணக்கக்கூற்று

இந்த நிதி அறிக்கைகளில் குறிப்பிட்டவை தவிர்ந்த ஏனையவை ஸ்ரீலங்கா ரூபா பெறுமானத்தில் வரலாற்று செலவின அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதி அறிக்கைகளின் தயாரிப்பும், சமர்ப்பணமும் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு அமைய இடம்பெற்றுள்ளன

### 2.2 அளவீட்டு அடிப்படை

ஒன்றுதிரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் பின்வருவன நீங்கலாக வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

வரைவிலக்கண நன்மைக் கடப்பாடுகள் வரைவிலக்கணம் செய்யப்பட்ட நன்மைகள் கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதியாக அங்கீகரித்துள்ளது

### 2.3 தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பிப்பு நாணயம்

ஒன்றுதிரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள், வங்கி தொழிற்படுகின்ற பிரதான பொருளாதார சூழலின் நாணயமான இலங்கை ரூபாவில் அளவிடப்படுகிறது. வேறு விதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்கள் அண்மைய ஆயிரத்திற்கு முழு இலக்கமாக்கப்பட்டிருக்கிறது.

### 2.4 ஒப்பீட்டுத் தகவல்கள்

நிறுவனத்தின் நிதியாண்டு பூர்த்தி 2015 டிசெம்பர் 31 தொடக்கம் 31 மர்ச்சில் இருந்து 31 டிசெம்பருக்கு மாற்றப்பட்டுள்ளது. அதற்கமைய தற்போதைய நிதியாண்டு 2015 ஏப்ரல் 01 தொடக்கம் 2015 டிசெம்பர் 31இல் முடிவுற்ற 09 மாதகாலத்திற்குரியதாக இருக்கும். அதற்கமைய 2015 மார்ச் 31 இல் முடிவடைந்த நிதியாண்டு தகவல்களுக்கு ஒப்பீடு செய்கையில் மாறுபட்டிருக்கும்.

தேவை ஏற்பட்டவிடத்தில், தற்போதைய வருட நிதி அறிக்கைகளுடன் இணங்கும் வகையில் சில முந்திய வருட இலக்கங்களும் குறிப்புக்களும் டுமுயுளு 01 இற்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளன.

### 2.5 கூட்டமைவு மற்றும் திரட்டல்

நிதிக்கூற்றுகளை சமர்ப்பிப்பதில் இ.க.நி. 01ற்கு அமைவாக ஒரே மாதிரியான விடயங்களின் ஒவ்வொரு பொருட்கூறு வகுப்பும் வேறுபாட்டுத் தன்மையுடைய அல்லது பணிகளைக் கொண்ட வியடங்கள் அவை பொருட்களாகவிருக்குமிடத்து புறம்பாக சமர்ப்பிக்கப்படுகின்றன.

நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுவதுடன் தேறிய தொகையானது, அங்கீகரிக்கப்பட்ட தொகையினை எதிரீடு செய்வதற்கு சட்ட ரீதியாக நடைமுறைப்படுத்தக்கூடிய உரிமை இருக்கும் பொழுது மற்றும் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கான அல்லது ஒரே நேரத்தில் சொத்துக்களை தேறல் செய்வதற்கும் பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கான நோக்கம் இருக்கும் பொழுது மாத்திரம் நிதியியல் நிலைமையின் திரட்டப்பட்ட கூற்றில் அறிக்கையிடப்படுகின்றன. ஏதேனும் கணக்கீட்டு நியமம் அல்லது வியாக்கியானங்களின் மூலமும் தேறல் படுத்தப்பட்டு அல்லது அனுமதிக்கப்பட்டு அத்துடன் வங்கியின் கணக்கீட்டுக் கொள்கையில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டிருந்தாலொழிய வருமானம் மற்றும்

செலவினங்கள் திரட்டப்பட்ட வருமானக் கூற்றில் எதிரீடு செய்யப்படமாட்டாது.

## 3. கணக்கீட்டுத் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

திரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு, கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகம் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவு என்பனவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகை என்பன மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்தினை தேவைப்படுத்துகின்றன. உண்மையான பெறுபேறுகள்

இம்மதிப்பீடுகளிலிருந்தும் வேறுபடலாம். தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன வரலாற்று ரீதியான அனுபவங்களையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் நியாயமானது என நம்பப்படுகின்ற ஏனைய பல்வேறு காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் தற்போதைய நடத்தையின் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள், மதிப்பீடுகள் திருத்தப்படுகின்றதொரு காலப்பகுதியில் அத்துடன் அல்லது எதிர்காலப் பகுதியில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமிடத்து எதிர்காலத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கையினை பிரயோகிக்கும் செயன்முறையின் போது, முகாமைத்துவம், திரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளின் மீது மிகக் குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருக்கும் பின்வரும் மதிப்பீடுகள், அனுமானங்கள் மற்றும் தீர்ப்புக்களைச் செய்திருக்கிறது.

### அ) வரி விதிப்பு

நிறுவனமானது நிதியியல் பணிகள் மீதான வருமான வரி, தேசத்தை கட்டியெழுப்பும் வரி மற்றும் ஏனைய வரிகளுக்கு உட்பட்டதாகும். நடைமுறை பிற்போடப்பட்ட மற்றும் ஏனைய வரிகளுக்கான மொத்த ஒதுக்கத்தினையும் நிதியியல் கூற்றக்களில் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமத்தினைப் பின்பற்றுவது தொடர்பான நடவடிக்கைகள் மீதான நிலுவையிலுள்ள வரி வழிகாட்டல் பிரச்சினைகள் மற்றும் வரிகளின் விதிப்பு நோக்கத்திற்கான வரி விதிக்கத்தக்க இலாபங்களையும் நிர்ணயிப்பதற்கு குறிப்பிடத்தக்க தீர்ப்புக்கள் தேவைப்படுகின்றன. இந்நிதியியல் கூற்றுக்களை தயாரிக்கும் நேரத்தில் ஏற்புடைத்தான வரிச் சட்டங்கள் தொடர்பில் நிச்சயமற்ற தன்மைகள் காணப்பட்டன.

மேலதிக வரிகள் செலுத்தப்பட வேண்டியிருக்குமா என்பது தொடர்பிலான மதிப்பீடுகளின் அடிப்படையில் நிறுவனம் நடைமுறை, பிற்போடப்பட்ட மற்றும் ஏனைய வரிகளை அடையாளம் கண்டது. இவ்விடயங்களின் இறுதி வரி விளைவுகள் ஆரம்பத்தில் பதிவு செய்யப்பட்ட தொகைகளிலிருந்து வேறுபடுமிடத்து, அத்தகைய வேறுபாடுகள் தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதி எதுவோ அப்பகுதியின் வருமானத்தின் மீதும் பிற்போடப்பட்ட வரித் தொகையின் மீதும் தாக்கத்தைக் கொண்டிருக்கும்.

### (ஆ) ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பயன்மிக்க ஆயுட் காலம்

நிறுவனமானது ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் எஞ்சிய பெறுமதிகள், பயன்மிக்க ஆயுட் காலம் மற்றும் சொத்துக்களின் தேய்மான முறை என்பனவற்றை மீளாய்வு செய்கிறது. முகாமைத்துவத்தின் தீர்ப்பு

இப்பெறுமானங்கள், வீதங்களின் முறைகள் என்பனவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதனால் அவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டனவாகவுள்ளன.

### (இ) தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

பணிப்பாளர்கள் நிறுவனத்தின் தொடர்ந்து செயற்படக்கூடிய தகைமையை மதிப்பீடு செய்துள்ளதுடன், நிறுவனம் புலனாகக்கூடிய எதிர்காலத்தில் தனது நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான வளங்களைக் கொண்டுள்ளது எனத் திருப்தியடைந்துள்ளனர். மேலும், தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு அடிப்படையில் முகாமைத்துவம் நிறுவனத்தின் தொடர்ந்து இயங்கக்கூடிய ஆற்றலில் குறிப்பிடத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் நிச்சயமற்ற தன்மை பற்றி அறிந்திருக்கவில்லை. எனவே, நிதிக் கூற்றுக்கள் தொடர்ச்சியாக தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு அடிப்படையில் தொடர்ந்தும் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

### (ஈ) நிதிச் சொத்துக்கள் மீதான பெறுமதி குறையும் தன்மை

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2015 டிசெம்பர் 31ல் முடிவடைந்த ஒன்பது மாதகாலத்திற்கான

இக்கம்பனி அறிக்கையிடும் ஒவ்வொரு திகதியிலும் நிறுவனத்தின் நிதியியல் சொத்துக்களில் பெறுமதி குறையக்கூடிய சாத்தியங்கள் உள்ளதா என்பது பற்றியும்அவை ஒன்று திரட்டிய வருமானக் கூற்றில் பதிவு செய்யப்பட வேண்டுமா என்பது பற்றி தீர்மானிக்கின்றது.

**(உ) வரையறுக்கப்பட்ட நலத்திட்டங்கள்**

வரையறுக்கப்பட்ட நலத்திட்டத்தின் கிரயம் ஒரு காப்பீட்டுக் கணிப்பு மதிப்பிடலை பயன்படுத்தி தீர்மானிக்கப்பட்டுள்ளது. காப்பீட்டுக் கணிப்பு மதிப்பிடலானது, கழிவிறக்க வீதங்கள், எதிர்கால சம்பள உயர்வு வீதம், ஓய்வுபெறும் வயது, இறப்புவீதம் என்பவற்றில் ஊகங்கள் மேற்கொள்வதை உள்ளடக்கியுள்ளது. இத்திட்டங்களின் நீண்டகால இயல்பு காரணமாக, அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்களவு நிச்சயமற்ற தன்மையைக் கொண்டுள்ளது. மதிப்பிடலுக்கு பயன்படுத்தப்பட்ட ஊகங்கள் தொடர்பான மேலதிக விளக்கம் வழங்கப்பட்டுள்ளது

## 4. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் சாரம்சம்

இந்த நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் முக்கிய கணக்கியல் கொள்கைகள் கீழே வரையறுக்கப்பட்டுள்ளன. இந்த கணக்கீட்டுக் கொள்கைகள் பிறவிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி நிதிக்கூற்றுகளில் தரப்பட்டுள்ள சசகல காலப்பகுதிகளுக்கும் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுள்ள

### 4.1 வருமான அங்கீகாரம்

பொருளாதார நன்மைகள் நிறுவனத்திற்குக் கிடைக்கும் என்ற அடிப்படையிலும், வருமானம் மற்றும் சம்பந்தப்பட்ட செலவினங்கள் நியாயமான அடிப்படையில் கணக்கிடப்பட முடியும் என்பதன் அடிப்படையிலும் வருமானம் ஏற்றுக்கொள்ளப்படுவது வழக்கமாகும். வர்த்தக கழிவுத்தொகை மற்றும் விற்பனை வரிகள் என்பன கழிக்கப்பட்டு பெறப்பட்ட அல்லது பெறப்படக்கூடிய நியாயமான பெறுமதியின் அடிப்படையில் வருமானம் கணக்கிடப்படும். வருமான அங்கீகாரம் சம்பந்தமாக கீழ்க்காணும் விசேட அம்சங்கள் கருத்திற்கொள்ளப்பட இருக்கின்றன.

**(அ) சேவைகள்**

சேவைகள் வழங்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட காலப்பகுதியில் அவற்றின் மூலம் பெற்ற வருமானம்

கணக்கீட்டில் சேர்த்துக் கொள்ளப்படும்.

**(ஆ) அறைகள் மற்றும் விற்பனை நிலையங்கள் வருமானம்**

வதிவு மேற்கொள்ளப்பட்ட அறைகளின் வருமானம் நாளாந்த அடிப்படையிலும் உணவு பானங்களின்

வருமானம் விற்பனை செய்யப்படும் நேரத்திற்கு ஏற்பவும் கணக்கிடப்படும

**(இ) வட்டி**

வட்டிவருமானம் செயல்வலுவிலுள்ள வட்டி வீதமுறையைப் பயன்படுத்திக் கணிக்கப்படுகின்றது

**(ஈ) வாடகை வருமானம்**

வாடகை வருமானம் திரண்ட தொகை அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

### 4.2 செலவினத்தின் இனங்காணல்

செலவுகள் ஏற்படும் செலவு மற்றும் வருவாய் குறிப்பிட்ட பொருட்களை ஒன்றின் சம்பாதிக்கும் இடையே ஒரு நேரடியான தொடர்பு அடிப்படையில் தொகுக்கப்பட்ட வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்படுகின்றது. தொழிலை நடாத்துதல் மற்றும் செயல்திறன் சொத்து, ஆதனம் மற்றும் கருவிகளை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றில் ஏற்படும் அனைத்து செலவுகள் தொகுக்கப்பட்ட வருமானக் கூற்றுக்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது.

தொகுக்கப்பட்ட வருமான அறிக்கை வழங்கல் நோக்கம், ”செலவுகளின் செயல்பாடு” முறை. இது நிறுவனத்தின் செயலாற்றுகையின் கூறுகளை நியாயமான முறையில் வழங்குகின்றது.

வருமான வரி செலவுகள் தற்போதைய மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரிகளை கொண்டுள்ளது. வருமான வரி செலவுகள் ஒன்றுதிரட்டிய வருமான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 4.3 வரிவிதிப்பு

#### 4.3.1 தற்போதைய வரிகள்

நடப்பாண்டு மற்றும் அதற்கு முந்திய ஆண்டுகளுக்குரிய வருமான வரி சொத்துக்களும் பொறுப்புகளும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடம் இருந்து பெறப்பட வேண்டிய தொகையில் அல்லது அவருக்கு செலுத்தப்பட்ட தொகையிலிருந்து அறவிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தத் தொகையைக் கணக்கிடுவதற்கான வரி வீதங்களும் வரிச் சட்டங்களும் அறிக்கையிடல் திகதியில் வரையப்பட்டவையாகும்.

#### 4.3.2 பிற்போடப்பட்ட வரி

பிற்போடப்பட்ட வரியானது சொத்துகள், பொறுப்புகள் மற்றும் நிதி அறிக்கையிடல் நோக்கத்திற்காக அவற்றின் முன் எடுத்துச் செல்லப்படும் தொகைகளுக்குமிடையே அறிக்கையிடல் காலப்பதியில் கடன் பொறுப்பு முறையைப் பயன்படுத்தி தற்காலிக வேறுபாடுகள் மீது தரப்படுகின்றது. சகல கழிபடத்தக்க வேறுபாடுகளுக்கும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

முன்கொண்டு செல்லப்பட்ட உபயோகிக்கப்படாத வரி வரவுகள் மற்றும் உபயோகிக்கப்படாத வரி நட்டங்கள் என்பனவற்றுக்கும் எதிரான தேவையான வரிவிதிக்கத்தக்க இலாபங்கள் கிடைக்கும் என்ற எண்ணத்தில் கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளும், முன்கொண்டு செல்லப்பட்ட உபயோகிக்கப்படாத வரி இலாபங்கள் மற்றும் வரி நட்டங்கள் என்பனவும் பிற்போடப்பட்ட வரிவிதிக்கத்தக்க இலாபங்களில் கிடைக்கத்தக்கனவாகவுள்ளன. இருந்த போதிலும் கணக்கு அடிப்படையிலான இலாபத்திற்கு அல்லது வரி விதிப்பு இலாப நட்டத்திற்கு பாதகம் ஏற்படுத்தாத கொடுக்கல் வாங்கல்களினால் ஏற்படும் கழிக்கத்தக்க

தற்காலிக வேறுபாடுகளுக்கு தள்ளி வைக்கப்பட்ட வரித்தொகை கருத்திற்கொள்ளப்படுவதில்லை.

ஒவ்வொரு ஐந்தொகை திகதியிலும் முன்கொண்டு செல்லப்படும் பிற்போடப்பட்ட வருமான வரி சொத்துக்களின் தொகை மீளாய்வு செய்யப்படுவது வழக்கம். இத்தகைய சொத்துக்களின் மொத்தத் தொகையை அல்லது ஒரு பகுதியை உள்ளடக்கவென போதியளவிலான வரிக்கு முன் இலாபம் இல்லாத நிலை வரை இந்தத் தொகை குறைக்கப்படும். பின்தள்ளி வைக்கப்பட்ட வருமான வரி சொத்துக்களும் பொறுப்புகளும் அந்த வருடத்தின் வரி விகிதத்தில் கணக்கிடப்படுகின்றன. சொத்து ஒன்று விற்கப்பட்டால் அல்லது பொறுப்பு தீர்க்கப்பட்டால் ஐந்தொகை திகதியிலன்று அல்லது அதற்கு பின்னரான வரி விகிதங்கள் (மற்றும் வரிச்சட்டங்கள்) என்பனவற்றின் அடிப்படையில் பெறுமதி தீர்மானிக்கப்படும்.

### 4.4 நிதியல்லாத சொத்துக்கள்

#### 4.4.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

#### அ) அங்கீகரித்தலும் அளவிடலும்

சொத்துக்களுடன் இணைந்த எதிர்கால பொருளாதார நன்மைகளுக்குச் சாதகமானதாக இருக்குமிடத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் நிறுவனத்துடன் சேர்க்கப்படுவதுடன் சொத்துக்களின் கிரயம் நம்பகமான விதத்தில் அளவிடப்படும். கிரயத்தினை உள்ளடக்குகின்ற செலவினம் சொத்துக்களின் கிரயத்துடன் நேரடியாக சேர்க்கப்படுகின்றது.

#### செலவு மாதிரி

சொத்து, தொழிற்சாலை மற்றும் உபகரணங்கள் நாள் முதல் நாள் சர்விசிங்கிற்கான செலவுகளைச் சேர்க்காதீர்கள் செலவில் கூறினார், குறைந்த தேய்மானம் திரட்டப்பட்ட மற்றும் மதிப்பு பலவீனத்திற்கு திரட்டிவைக்கப்படுகிறது. செலவு வருமானம் பூர்த்தி செய்யும் பட்சத்தில் அந்த செலவு, ஏற்படும் போது உபகரணங்கள் பகுதியாக பதிலாக செலவு ஆகியவை அடங்கும்.

#### பின்னர் ஏற்படுகின்ற செலவினம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விடயமொன்றின் பகுதியினை அகற்றுவதனால் ஏற்படும் செலவு, விடயத்தின் ஏட்டுப் பெறுமதித் தொகையில் அங்கீகரிக்கப்படுகிறது. அப்பகுதிக்குள்ளேயே உருவாக்கப்பட்ட எதிர்காலபொருளாதார நன்மைகளின் சாத்தியமான தன்மைகள் நிறுவனத்திற்க பாய்வதுடன் அதன் கிரயத்தினை நம்பத்தகுந்த விதத்தில் அறவிட முடியும். ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் நாளாந்த பணிகளின் கிரயம் ஏற்பட்டவாறு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2015 டிசெம்பர் 31ல் முடிவடைந்த ஒன்பது மாதகாலத்திற்கான

**தேய்மானம்**

இம்முறைமையானது சொத்துக்களில் உள்ளடக்கியுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகளின் நுகர்வு தொடர்பாக எதிர்பார்க்கப்பட்ட மாதிரித் தன்மைகளைஸ்ரீ நெருக்கமாகப் பிரதிபலிப்பதன் காரணமாக, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களைக் கொண்ட விடயம் ஒவ்வொன்றினதும் மதிப்பிடப்பட்ட ஆயுட் காலத்தின் தேய்மானமானது நேர்கோட்டு அடிப்படையில் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. நடப்பு மற்றும் ஒப்பீட்டு காலப்பகுதிக்கான மதிப்பிடப்பட்ட பயன்மிக்க ஆயுட் காலம் பின்வருமாறு:

| சொத்தின் வகை | மூ |
|---|---|
| கட்டடம் | 2.5 |
| இயந்திரம், உபகரணங்கள் | 7.5 |
| குளிர்சாதனப்பெட்டி மற்றும் சமையலறை உபகரணங்கள் | 7.5 |
| கணனி மற்றும் தொலைக்காட்சி | 20 |
| மோட்டார் வாகனங்கள் | 25 |
| தளபாடம் மற்றும் பொருத்திகள் | 10 |
| ஏனைய வசதிகள் | 20 |

சொத்தின் எஞ்சிய பெறுமதிகள், தேய்மான முறைகள், ஆயுட் காலம் என்பன ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் மீளமதிப்பிடப்பட்டு பொருத்தமானவிடத்து சீராக்கப்படுகின்றன அங்கீகரிக்காமை

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆகிய விடயங்கள் கொண்டிருக்கும் தொகையானது அவை அகற்றப்படும் பொழுது அல்லது அவற்றின் பயன்பாட்டிலிருந்து எதிர்காலப் பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படாத பொழுது அங்கீகரிக்கப்படாது விடப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களைக் கொண்ட விடயங்களின் அங்கீகரிக்காமையின் காரணமாக தோன்றுகின்ற இலாபம் அல்லது நட்டம் விடயம் அங்கீகரிக்கப்படாமல் விடும் ஆண்டிற்குரிய வருமானக் கூற்றில் ஏனைய தொழிற்பாட்டு வருமானம்∴ செலவில் உள்ளடக்கப்படுகின்றன

### 4.4.2 நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதிக் குறைவு

நிறுவனம் சொத்துக்களின் பெறுமதி குறைவடைவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றதா என்பதனைக் கண்டறிவதற்காக ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மதிப்பீடுகளை மேற்கொள்கிறது. ஏதாவது அறிகுறிகள் தென்படுமாயின், அல்லது சொத்துக்களுக்கான வருடாந்த பெறுமதிக் குறைப்பு பரீட்சிப்பு தேவைப்படும் பொழுது நிறுவனம் சொத்துக்களின் அறவிடமுடியுமான தொகையினை மதிப்பிடுகிறது

### 4.5 முற்கொடுப்பனவு குத்தகை வாடகை

குத்தகை காணியானது சமமான வருடாந்த தேய்மான அடிப்படையில் 99 ஆண்டுகளுக்கு மேல் பெறப்பட்டுள்ளது, அதுவே குத்தகைக்காலமும் ஆகும். தேய்மானம் 2012 யூனில் ஆரம்பமாகியது

### 4.6 இருப்புகள் பதிவு

பழைய பொருட்கள் மற்றும் துரித விற்பனையற்ற பொருட்கள் என்பனவற்றுக்கு உரிய மதிப்பை அளித்த

பின்னர் பதிவேட்டுப் பொருட்கள் கொள்விலை அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. நிகர தேறத்தக்க பெறுமதி என்பது தேறல் செலவுக்கும் அல்லது அத்துடன் அவற்றின் ஏற்கனவேயுள்ள நிலையிலிருந்து விற்கத்தக்க நிலைமைக்கு மாற்றுவதற்கும் இடமளித்ததன் பின்னர் வழக்கமான தொழில் போக்கில் இருப்புகள் விற்கப்படக்கூடிய விலையாகும்.

### 4.7 நிதிச் சொத்துக்கள் - அங்கீகாரம் மற்றும் அளவீடுகள்

#### 4.7.1 ஆரம்ப அங்கீகாரம்

அனைத்து நிதியியல் சொத்துக்களும் ஆரம்பத்தில் கூற்றின் திகதியன்று, அதாவது, சாதனத்தின் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகளின்படி குழுமமானது ஒரு தரப்பினராக மாறுகின்ற நாளன்று அங்கீகரிக்கப்படுகின்றது. இது கிரமமான வழி வர்த்தகத்தினை உள்ளடக்குகிறது. நிதியியல் சொத்துக்களின் கொள்வனவு அல்லது விற்பனையானது சந்தையில் ஒழுங்குவிதிகளின் மூலம் அல்லது மரபுகளின் மூலம் பொதுவாக உருவாக்கப்பட்ட கால வரையறையொன்றிற்குள் சொத்துக்கள் விநியோகிக்கப்படுவதனை தேவைப்படுத்துகின்றன.

#### 4.7.2 ஆரம்ப அளவீடு

ஆரம்ப கண்டறிதலின் போது நிதியியல் சாதனங்களை வகைப்படுத்துவது, அவற்றின் நோக்கம் மற்றும் பண்பு மற்றும் அவற்றைக் கொள்வனவு செய்வதற்கான முகாமைத்துவத்தின் ஈடுபாடு என்பனவற்றில்

தங்கியிருக்கிறது. நிதியியல் சொத்துக்களின் இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பதிவு செய்யப்படுவது தவிர நிதியியல் சொத்துக்கள் ஆரம்பத்தில் அவற்றின் சந்தைப் பெறுமதியுடன் கொடுக்கல் வாங்கல் கிரயத்தினைக் கூட்டிய தொகையில் அளவிடப்பட்டன

### 4.7.3 தொடரான அளவீடுகள்

நிதியியல் சொத்துக்களை அளவிடுகின்ற நோக்கத்திற்காக பின்வரும் வகைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. இலாபம் அல்லது நட்டமுடான சந்தைப் பெறுமதி, முதலீடுகள் முதிர்ச்சியடையும் வரை வைத்திருத்தல், கடன்களும் பெறத்தக்கவைகளும், நிதிச்சொத்துக்களின் விற்பனைக்காக கிடைக்கத்தக்கவை.

**(அ) இலாபத்தின் அல்லது நட்டத்தின் மூலமாக நியாயமான பெறுமதியில் நிதிச்சொத்துகள்**

நிதியியல் சொத்துக்கள் வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்பட்டிருக்குமிடத்து அல்லது இலாபம் அல்லது நட்டமூடான சந்தைப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்டிருக்குமிடத்து அவை இலாபம் அல்லது நட்டமூடான சந்தைப் பெறுமதியாக வகைப்படுத்தப்படுகின்றன

**(ஆ) நிதி முதலீடுகள் முதிர்ச்சியடையும் வரை வைத்திருத்தல்,**

முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படும் நிதியியல் முதலீடுகள் என்பது நிலையான அல்லது தீர்மானிக்கப்படக்கூடிய கொடுப்பனவுகளுடன் கூடிய பெறுதிகளல்லா நிதியியல் சொத்துக்களாகவும் குழுமம் முதிர்ச்சி வரை வைத்திருக்கக்கூடிய சாதகமான எண்ணமும் இயலாற்றலும் கொண்ட நிலையான முதிர்ச்சிகளையும் கொண்டவை என்பதாகும். ஆரம்ப அளவீடுகளின் பின்னர், முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படும் நிதியியல் சொத்துக்கள், பெறுமதி இழப்புக்களைக் கழித்த உண்மைப் பயன்தரு வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி தேய்மானக் கிரயத்தில் அளவிடப்பட்டன.

**இ) கடன்கள் மற்றும் முற்பணங்கள்**

கடன்கள் மற்றும் முற்பணங்கள்" என்பன பின்வருவன நீங்கலாக தீவிரமான சந்தையொன்றில் குறிப்பீடு

செய்யப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளுடன் கூடிய பெறுதிகளல்லாத நிதியியல் சொத்துக்களை உள்ளடக்குகிறது:

- நிறுவனம் உடனடியாக விற்பனை செய்ய அல்லது அண்மைக் காலத்தில் விற்பனை செய்ய விரும்புகின்றவைகள், ஆரம்ப அங்கீகரிப்பினைத் தொடர்ந்து இலாபம் அல்லது நட்டமூடாக சந்தைப் பெறுமதியில் குறித்துரைக்கப்படுகின்றன.
- ஆரம்பத்தில் கண்டறியப்பட்டவுடன் அவற்றின் விற்பனைக்கென குறித்துரைக்கப்பட்டவை
- கொடுகடன் தேய்மானத்திற்குச் சேரவேண்டியவை நீங்கலாக, நிறுவனத்தினால் அவற்றின் ஆரம்ப முதலீடுகள் அனைத்தினையும் கணிசமானளவிற்கு மீட்க முடியாமல் போகக் கூடியவை.

கடன்கள் மற்றும் முற்பணங்கள்" என்பன தொடர்பான ஆரம்ப அளவீடுகளினைத் தொடர்ந்து அவை பெறுமதிக் குறைப்பிற்கான கழிவு தொகைகளைக் கழித்து பயனுறு வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி பெறுமதித் தேய்வுக் கிரயத்தில் அளவிடப்பட்டன. பெறுமதித் தேய்வுக் கிரயமானது சுவீகரிப்பின் மீதான கழிவிடல் அல்லது கட்டுப்பணத்தினையும் பயன்தரு வட்டி வீதத்தினை முக்கியமானதொரு பகுதியாக விளங்கும் கட்டணம் என்பனவற்றையும் கருத்திற் கொண்டு அளவிடப்படுகின்றது. பெறுமானத் தேய்வு வருமானக் கூற்றில் வட்டி மற்றும் அதையொத்த வருமானத்தின் கீழ் உள்ளடக்கப்படுகிறது. பெறுமதி குறைவடைவதிலிருந்து தோன்றுகின்ற இழப்புக்கள் வருமானக் கூற்றில் கடன்கள் மற்றும் ஏனைய இழப்புக்களுக்கான பெறுமதி குறைவடைதல் கட்டணம் (மாற்றுப்பதிவு) இன் கீழ் காட்டப்பட்டுள்ளன. நிறுவனமானது, சேகரிக்கப்பட முடியாதவை எனத் தீர்மானிக்கும் பொழுது குறிப்பிட்ட கடன்களையும் முற்பணங்களையும் பதிவழிப்புச் செய்கிறது

**ஈ) விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள்**

விற்பனைக்கு கிடைக்கும் வர்த்தகம் நடைபெற்றது அல்லது லாபம் அல்லது நஷ்டம் மூலம் நேர்த்தியான மதிப்பில் நியமிக்கப்பட்ட போன்ற இரண்டுமே வகைப்படுத்தப்பட்டுள்ளன அந்த உள்ளன. நிறுவனத்தின் கிடைக்கப்பெறுகின்ற விற்பனை எந்த கடன்கள் அல்லது பெறத்தக்கவைகளை நியமிக்கலாம்.

விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் முதலீடுகளை வைத்திருக்கும் பொழுதே பங்கிலாபத்தினை உழைப்பது என்பது கொடுப்பனவின் உரிமைகள் நிறுவப்படுகின்ற வேளையில் வருமானக் கூற்றில் “ஏனைய தொழிற்பாட்டு வருமானம்” என அங்கீகரிக்கப்படுகின்றது. முதலீடுகளின் பெறுமதி இழப்பிலிருந்து தோன்றுகின்ற இழப்புக்கள் விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள ஒதுக்குகளிலிருந்து அகற்றப்படுகின்றன.

### 4.7.4 நிதியியல் சொத்துக்களின் மறுசீரமைப்பு

ஆரம்ப அங்கீகாரத்தின் நியாய பெறுமதிக்கு உட்படாத செயற்படாத நிதி சொத்துக்களை நிறுவனம் சில தருணங்களில் மறுசீரமைப்பு செய்தது.

- விற்பனையில் தங்கிய, விற்பனைக்கான, கடன்கள் மற்றும் பெறுகைகள் அல்லது முதிர்வுறு தன்மை பிரிவிற்கு உட்டபட்டவைகள்.

- விற்பனையில் தங்கிய, விற்பனைக்கான, கடன்கள் மற்றும் பெறுகைகள் அல்லது முதிர்வுறு தன்மை பிரிவிற்கு உட்டபட்டவை ஆகியவற்றில் மறுசீரமைப்பு நியாய பெறுமதியில் பதிவு செய்யப்பட்டன. இவை புதிய தேய்மான செலவுகள் ஆகின. விற்பனை சொத்துக்களின் முன்னைய தேய்மானங்கள் இழப்பு அல்லது இலாபம் என்பன மறுசீரமைப்பிற்கு உட்படுத்தப்பட்டன. புதிய தேய்மானம் மற்றும் எதிர்பார்க்கும் காசுப்பாய்ச்சலுக்கு இடையில் ஏதும் வித்தியாசங்கள் இருப்பின் எஞ்சிய காலத்திற்காக நியாய பெறுமதியில் கணிக்கப்பட்டன. ஏதேனும் மாற்றங்கள் இருப்பின் ஒப்பரவில் பதிவான தொகை ஒன்றுதிரட்டிய வருமான கூற்றில் மீள்சுழற்சி செய்யப்பட்டது.

- கடன் மற்றும் பெறுகைகள் பிரிவினை சாரும் போது நிறுவனம் நிதிச் சொத்தினை எதிர்காலத்திற்கு அல்லது முதிரவுவரை தங்க வைக்கும் நோக்கினை கொண்டிருந்தது. பணப்பற்று சீட்டுகளின் அதிகரிப்பு காரணமாக நிதிச் சொத்து மறுசீரமைக்கப்பட்டு நிறுவனம் அதன் மதிப்பீட்டை அதிகரித்திருப்பின் எதிர்கால பணப்பரிமாற்றலுக்காக தங்க வைக்கும் தன்மையை கொண்டுள்ளது. மதிப்பீட்டு மாற்றப்பட்ட திகதியிலான நியாய பெறுமதியில் இவை இருக்கும்.

நிறுவன மற்றும் முகாமையின் தெரிவின் அடிப்படையிலேயே மறுசீரமைப்புகள் இடம்பெறும்.

### 4.7.5 நிதிச் சொத்துக்களின் அங்கீகரிப்பு நீக்கம்

ஒரு நிதிச் சொத்து (அல்லது, பொருத்தமான இடங்களில் நிதிச் சொத்து ஒன்றின் பகுதி அல்லது ஒரே மாதிரியான நிதிச் சொத்துக்களின் குழுக்களின் ஒரு பகுதி) பின்வரும் சூழ்நிலைகளில் அதனுடைய அங்கீகரிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது.

- குறிப்பிட்ட சொத்தில் இருந்து காசுப் பாய்ச்சல்களை பெற்றுக்கொள்வதற்கான உரிமைகள் முதிர்வடைந்தவிடத்து

- நிறுவனமானது சொத்திலிருந்து காசுப்பாய்ச்சலைப் பெறுவதற்கான அதன் உரிமைகளை மாற்றல் செய்துள்ளபோது அல்லது ஓர் “கடந்து செல்லும்” ஏற்பாட்டின் கீழ் ஓர் மூன்றாம் தரப்பினருக்கு காலதாமதமின்றி பெற்றுக்கொண்ட காசுப்பாய்ச்சலை முழுமையாக செலுத்துவதற்கான ஓர் கடப்பாட்டைப் பெற்றுள்ளவிடத்து மற்றும் இரண்டில் ஏதேனுமொன்று

- குறிப்பிட்ட சொத்தின் அனைத்து இடர்நேர்கைகள் மற்றும் வெகுமதிகளை முழுமையாக நிறுவனம்

மாற்றியுள்ளவிடத்து, அல்லது நிறுவனம் குறிப்பிட்ட சொத்தினுடைய அனைத்து இடர்நேர்கைகள் மற்றும் வெகுமதிகளையும் கணிசமான அளவு மாற்றல் செய்யாது அல்லது தம்வசம் வைத்துக்கொள்ளாதவிடத்து ஆனால் சொத்தின் முழுக் கட்டுப்பாட்டையும் மாற்றியுள்ளவிடத்து.

ஒரு சொத்திலிருந்து காசுப்பாய்ச்சலைப் பெறுவதற்கான அதன் உரிமைகளை மாற்றல் செய்துள்ளபோது அல்லது ஓர் “கடந்த செல்லும்” ஏற்பாட்டில் நுழைந்துள்ளபோது மற்றும் நிறுவனம் குறிப்பிட்ட சொத்தினுடைய அனைத்து இடர்நேர்கைகள் மற்றும் வெகுமதிகளையும் கணிசமான அளவு மாற்றல் செய்யாது அல்லது தம்வசம் வைத்துக்கொள்ளாதவிடத்து அல்லது சொத்தின் முழுக்

கட்டுப்பாட்டையும் மாற்றாதவிடத்து, சொத்தானது நிறுவனத்துடைய தொடர்ச்சியான ஈடுபாட்டின் அளவிற்கேற்ப அங்கீகரிக்கப்படுகின்றது. அப்படியாயின், நிறுவனம் அதனுடன் தொடர்புடைய பொறுப்புக்களையும் அங்கீகரிக்கின்றது. மாற்றல் செய்யப்பட்ட சொத்து

மற்றும் அதனுடன் தொடர்புடைய பொறுப்பு என்பன தக்கவைத்துள்ள உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை பிரதிபலிக்கும் ஓர் அடிப்படையில் அளவிடப்படுகின்றது. மாற்றல் செய்யப்பட்ட சொத்தின் மேலான ஓர் உத்தரவாத வடிவத்தினை எடுக்கும் தொடர்ச்சியான ஈடுபாடானது, சொத்தின் ஆரம்ப கொண்டுசெல்லும் தொகை மற்றும் நிறுவனமானது மீள்செலுத்துமாறு வேண்டப்படும் ஆகக்கூடிய கைமாற்றுத் தொகை என்பவற்றில் எது குறைவோ அதில் மதிப்பிடப்படுகின்றது.

### 4.7.6 அடையாளாப்படுத்தல், அளவீடு மற்றும் வலுக்குறைவு மதிப்பீடு

